விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 கதிர் 75 வள்ளுவர் ஆண்டு 2047 தை 26. செவ்வாய்க்கிழமை 09.02.2016

30°c - 23°c
தெளிவான வானம்

## ஈழ அகதிகள் 43 பேர் இன்று இலங்கைக்கு

யாழ்ப்பாணம், பெப். 9
ஈழ அகதிகள் 43 பேர் இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக, மீள்குடியேற்ற அமைச்சின்செயலாளர் பக். 24

# சுவிஸ் அரசமைப்பை ஒத்த சமஷ்டியே தமிழ் மக்களுக்கு பொருத்தமான தீர்வு

### ஐ.நா. மனித உரிமை ஆணையாளரிடம் வடக்கு முதல்வர் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், பெப். 9
சுவிஸ் நாட்டின் அரசமைப்பை ஒத்த சமஷ்டி முறையிலான தீர்வுதான், தமிழ்மக்களுக்குப்பொருத்தமானது. மூன்று தசாப்தமாகத் தொடரும் இனப் பிரச்சினைக்கு இதுவே நிரந்தரத் தீர்வாகும் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
மத்திக்கும் – மாகாணத்துக்கும் இடையிலான இழுபறியை இல்லாமல் செய்வதற்கும் இதுவே பொருத்தமானதாக இருக்கும் என்றும் முதலமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளதாக அறியமுடிகின்றது.
யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை பக். 23

## நாடாளுமன்றை முடக்குவோம்

### கூட்டு எதிர்க்கட்சி அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, பெப். 9
கூட்டு எதிர்க் கட்சிக்குத் தனியான நாடாளுமன்றக்குழு என்ற அங்கீகாரம் வழங்கப்படாது போனால் நாடாளுமன்றத்தை முடக்கும் செயற்பாடுகளை முன்னெடுக் பக். 23

முச்சந்தி முரளி



இந்தச் சொல்லைக் கேட்டாலே அவைக்கு அலர்ஜி பாருங்கோ...

# வடக்கு - கிழக்கு இணைந்த தமிழீழ மாநிலம் வேண்டும்

### அது சமஷ்டி அடிப்படையில் அமைந்திருத்தல் அவசியம்
### அரசமைப்பு கருத்தறியும் குழுவிடம் மக்கள் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 9
வடக்கு – கிழக்கை மீண்டும் இணைத்து சமஷ்டி அடிப்படையிலான தீர்வு வழங்கப்படவேண்டும் எனவும், அதற்குத் தமிழீழ மாநில அரசு என்று பெயரிடவேண்டும். அத்துடன் மத்திக்கும் மாநிலத்திற்கும் இடையில் நீதியான அதிகாரப் பகிர்வு இருப்பதுடன், அதனை உறுதி செய்தல்வேண்டும்.
இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற, புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான மக்கள் கருத்தறியும் குழுவின் முன்பாக மக்கள் தெரிவித்துள்ளனர்.
புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கு மக்கள் கருத்தறியும் குழுவின் அமர்வு கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது 42 பேர் தமது கருத்துக்களை முன்வைத்துள்ளனர். கருத்துக்களைத் தெரிவித்த மக்களில் பக். 23

## சர்வதேசத் தலையீடு இங்கு வேண்டாம்



கொழும்பு, பெப். 9
இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு வெளிநாட்டு விசாரணைப் பொறிமுறை அவசியமில்லை என அஸ்கிரிய, மல்வத்து ஆசிய பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேனிடம் நேற்றுக் கோரிக்கை விடுத்தனர்.
நான்கு நாள்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணை பக். 23

## சிவமோகன் எம்.பியை விலைக்கு வாங்கிவிட்டதாம் தமிழரசுக் கட்சி

### குமுறுகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், பெப். 9
இலங்கைத்தமிழரசுக்கட்சி, தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினரை விலைக்கு வாங்கிவிட்டது எனவும், இது அநாகரிகமான செயல் எனவும் குறிப்பிட்டுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் செயலாளர் க.சுரேஷ் பிரேமசந்திரன், ஏனைய தமிழ்க் கட்சிகளை அழிக்கும் நடவடிக்கை எனவும் தெரிவித்துள்ளார்.
மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். நாடாளு பக். 23



## முப்படைத் தளபதிகளுடன் ஐ.நா. ஆணையாளர் பேச்சு

கொழும்பு, பெப். 9
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன், பாதுகாப்புச் செயலாளர், முப்படைகளின் தளபதி ஆகியோருடன் நேற்றுப் பேச்சு பக். 06

## எம்.பியாகிறார் பொன்சேகா



கொழும்பு, பெப். 9
நாடாளுமன்றம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடவுள்ளது. ஆரம்பக் கட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், ஜனநாயகக் கட்சியின் தலைவர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினராகச் சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார். பக். 25

## தாயகத்துக்கு திரும்ப விரும்பும் அகதிகள் விவரம் சுஷ்மாவுக்கு

கொழும்பு, பெப். 9
சுயவிருப்பின் அடிப்படையில் தாயகத்துக்குத் திரும்ப விரும்பும் அகதிகளின் பெயர்ப் பட்டியலைத் தயாரித்துத் தருமாறு, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கோரியுள்ளதாக, ஈழ ஏதிலிகள் மறுவாழ்வு அமைப்பின் பொருளாளர் சந்திரகாசன் தெரிவித்துள்ளார்.
இலங்கைக்கு இரு நாள் பயணமாக பக். 24



## சிவில் விமான நிலையமாக பலாலியை விரிவாக்க உதவி

### காங்கேசன் துறைமுகமும் அபிவிருத்தி; இணக்கம் தெரிவித்தது இந்திய அரசு

யாழ்ப்பாணம், பெப். 9
பலாலி விமானப்படைத் தளத்தைச் சிவில் விமான நிலையமாக விரிவாக்குவதற்கும், காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்திசெய்வதற்கும் உதவி வழங்க இந்தியா இணக்கம் தெரி பக். 06

## யாழ்.மாநகரக் கழிவகற்றல் திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியளிக்கா

### பிரெஞ்சு அபிவிருத்தி நிறுவனத்திடம் உதவி கோரப்பட்டு அதுவும் முடிவில்லை

யாழ்ப்பாணம், பெப். 9
யாழ். – கிளிநொச்சி இரணைமடு குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தின் ஒரு பகுதியான யாழ்.மாநகர கழிவகற்றல் திட்டத்துக்கு உதவியளிப்பதிலிருந்து ஆசிய அபிவிருத்தி வங்கி விலகிவிட்டது. இதனையடுத்து பிரெஞ்சு அபிவிருத்தி நிறு பக். 06

நியாயத்தை நிலைநிறுத்துவது இயற்கையின் நியதி பக். 12

பொது மன்னிப்பில் விடுவிக்குமாறு ஒருபோதும் நாம் கேட்கவே இல்லை பக். 02

## பெரும்பான்மையை எதிர்த்தால் நல்லிணக்கம் ஏற்படமாட்டாது

### கூறுகின்றார் கோத்தபாய

கொழும்பு, பெப். 9
நல்லிணக்கம் என்ற போர்வையில் புலம்பெயர் தமிழர்களை திருப்திப்படுத்துவதற்கு அரசு முயற்சிக்கின்றது என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச குற்றஞ் பக். 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது மன்னிப்பில் விடுவிக்குமாறு ஒருபோதும் நாம் கேட்கவே இல்லை

## தமிழ் அரசியல் கைதிகள் உறவினர்கள் ஊடாகத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 9
நாம் எமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தின்போதோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொது மன்னிப்பில் விடுவிக்குமாறு கோர வில்லை, அரசியல்வாதிகளே அதனை முன்வைத்தார்கள். நாம் எமது விடுதலையை பொது வான முறையில் தீர்த்து வைக்கு மாறே கோரினோம்.

இவ்வாறு தமிழ் அரசியல் கைதிகள் தமது உறவினர்கள் ஊடாகத் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேசினார்.

இதன்போது தமிழ் அரசியல் கைதிகளை பொதுமன்னிப்பில் விடுவது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று ஐ.நா. மனிதஉரிமைகள்ஆணையாளர் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே தமிழ் அரசியல் கைதிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் நாம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டோம். அப்போதும் சரி, எப்போதும் பொது மன்னிப்பில் விடுவிக்கும் கோரிக்கையை நாம் முன்வைக்க வில்லை. எம்மை உணவு தவிர்ப்புப் போராட்டத்தின் போது சந்தித்த அரசியல் தலைவர்களிடமும் நாம் பொதுமன்னிப்புக் கோரிக்கையை முன்வைக்கவில்லை. அரசியல்வாதிகளே, இந்தப்பொது மன்னிப்பு விடயத்தை முன்னிறுத்தினர்.

அரசியல் கைதிகளை, பொதுவான அடிப்படையில் - பொதுத் தீர் வின் அடிப்படையில் விடுவிக்கு மாறே கோருகின்றோம். 12 ஆயிரம் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு வழங்கியதைப் போன்று அல்லது எல்லோரையும் வழக்குகள் மூலம் துரிதமாக விடுவிக்குமாறே கோரி வருகின்றோம்.- என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ற-5)

# பாடசாலை நேரங்களில் தனியார் வகுப்புக்கு தடை

## கல்வி அமைச்சின் செயலாளர் இரவீந்திரன் அறிவிப்பு

யாழ்ப்பாணம். பெப். 9
பாடசாலை நாள்களில் - பாடசாலை நேரங்களில் ஆசிரியர்கள் தனியார் கல்வி நிலையங்களில் பாடம் நடத்துவது தவிர்க்கப்பட வேண்டும். பாடசாலை ஆசிரியர்கள் விடுமுறை பெற்று பகல் நேர வகுப்புக்களை நடத்துவதும் தவிர்க்கப்பட வேண்டும். இரவு வேளைகளில் எக்காரணம் கொண்டும் தனியார் கல்வி நிலையங்கள் இயங்கக் கூடாது. இது தொடர்பாக வலய மேற்பார்வைக்குழு நேரடியாகக் கல்வி நிலையங்களுக்குச் சென்று மேற்பார்வை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். - இவ்வாறு வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

பல தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களை இரவு வேளை வரை நிறுத்தி வைத்து வகுப்புக்கள் நடத்தி வருகின்றன என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதனால் மாணவர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாக உள்ளது. எனவே தனியார் கல்வி நிலையங்கள் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுவதை உறுதிப்படுத்திக் கொள்ளவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

1. வெள்ளி மாலையிலும் ஞாயிறு காலையிலும் வகுப்புக்கள் நடத்தக் கூடாது. அன்று மாணவர்கள் சமய நெறியையும் அறநெறிப் பாடசாலைகளிலும் பிரிவேனாக்களிலும் சமயம் சார்ந்த விழுமியங்களையும் கற்றுக்கொள்ள ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும்.
2. வார நாள்களில் காலை வகுப்புக்களை 7 மணிக்கு முன்னர் முடித்தல் வேண்டும். மாலை வகுப்புக்களை 3 மணி தொடக்கம் 6 மணி வரையுமே நடத்துதல் வேண்டும்.
3. பாடசாலை நாள்களில் பகல் வேளை வகுப்புக்களில் பாடசாலை மாணவர்கள் யாரும் கலந்து கொள்ளமுடியாது. 2 ஆம் 3 ஆம் முறை பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் மட்டுமே பகல் வேளை வகுப்பில் கலந்து கொள்ளமுடியும்
4. பாடசாலை ஆசிரியர்கள் யாரும் பாடசாலை வேளைகளில் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று பாடம் நடத்த முடியாது. சில ஆசிரியர்கள் தமது சொந்த விடுமுறையில் பகல் நேர வகுப்புக்கள் நடத்துகின்றனர் என்றும் அறியக் கூடியதாக உள்ளது. இதுவும் தவிர்க்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் என்ன நோக்கத்துக்கு விடுமுறை எடுத்தனரோ அந்த நோக்கத்துக்கே அந்த விடுமுறையை பயன்படுத்த முடியுமே தவிர தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்க முடியாது. இதை ஆசிரியர்களுக்கும் தெரியப்படுத்தவும். இந்த நடைமுறையானது 25.01.2016 திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வலய மேற்பார்வைக் குழு நேரடியாக கல்விநிலையங்களுக்குச் சென்று மேற்பார்வை செய்வதுடன் அது தொடர்பில் அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.
5. தனியார் கல்வி நிலையங்களின் வசதிகள் சம்பந்தமாக அப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரியும் பொது சுகாதார பரிசோதகரும் பார்வையிட்டு தங்கள் அறிக்கையை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு வழங்க வேண்டும்.

இந்த நடைமுறைகளை சம்பந்தப்பட்ட அனைவரும் பின்பற்றுவது உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ற-4,ரி,9)

# கஞ்சா சுருட்டுடன் ஒருவர் கைது

இரண்டு கஞ்சா சுருட்டுக்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் இரவு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

அச்செழு பகுதியில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அதே பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ஒரு வரே கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இரண்டு கஞ்சா சுருட்டுக்களும் விற்பனை செய்வதற்கே அவர் உடைமையில் வைத்திருந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-107)

# வன்னி கட்டளைத் தளபதியின் இடமாற்றம் திடீரென நிறுத்தம்

கொழும்பு, பெப். 9
வன்னிப் படைகளின் தலைமையக கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேராவின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 9 ஆம் திகதி வெளியிடப்பட்ட மூத்த இராணுவ அதிகாரிகளின் இடமாற்ற அறிவிப்பில், வன்னிப் படைகளின் தலைமையக கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா, இராணுவத் தலைமையகத்தில் பொது அதிகாரிகளுக்கான பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்படுகின்றார் என்று கூறப்பட்டிருந்தது.

எனினும், அவரது இந்த இடமாற்றம் தற்போது ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான காரணம் வெளியிடப்படவில்லை.

அதேவேளை, இராணுவச் செயலராகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, கடந்த மாதம் 28 ஆம் திகதி யாழ். படைகளின் தலைமையகத்தின் தளபதியாகப் பொறுப்பேற்றுள்ளார். (ற-5)

# வீட்டை அபகரித்து பயன்படுத்திக் கொண்டு வாடகை தருவதில்லை கோப்பாய் பொலிஸ்

## வீட்டு உரிமையாளர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப்.9
கோப்பாய் பொலிஸார் தனது வீட்டை அபகரித்துக் கொண்டு அதற்கான வாடகைப் பணமும் தருவதில்லை என வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். தனது வீட்டைப் பெற்றுத்தர பொலிஸ் மா அதிபர் மற்றும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

கோப்பாய் பொலிஸ் நிலையமானது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை தனியார்களுக்குச் சொந்தமான காணிகளில் உள்ள எட்டு வீடுகளில் இயங்கி வருகின்றது என்றும் அந்தக் காணியில் உள்ள ஒரு வீட்டின் உரிமையாளரான த.தங்கராஜா சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற போர்ச்சூழலால் 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து மீளவும் 1997 ஆம் ஆண்டு சொந்த இடத்தில் வந்து அமர்ந்தபோது அயலில் காணப்பட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் அந்த இடத்திலிருந்து எழுப்பப்பட்டு வேறு வீட்டுக்கு வாடகைக்குச் சென்றோம். அன்றிலிருந்து இன்றுவரை நாம் எமது சொந்த இடத்தை மீளப் பெறமுடியாத நிலையில் உள்ளோம்.

இந்த வீட்டை மீளப்பெற்றுக் கொள்வதற்கு கிராம சேவகர், பிரதேச செயலர், மாவட்ட செயலர், கோப்பாய் பொலிஸ்நிலையம், பொலிஸ்மா அதிபர் உட்பட பல்வேறு தரப்பினிடம் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதிலும், இதுவரை எந்த வித சாதகமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாததுடன் எந்தவிதமான பதிலறிக்கைகளும் கூட வழங்கப்படவில்லை. 2010 ஆம் ஆண்டு கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் எமது வீட்டை பாவிப்பதற்கான வாடகைப் பணம் பெற்றுத் தருமாறு கூறியும் தற்பொழுது எந்தவிதமான கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.

நான் மிகவும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட நிலையில் விவசாயத்தை நம்பியே காலத்தை நகர்த்தக்கூடிய நிலையிலும், எனது பெண் பிள்ளைக்கு சீதனமாகக் கொடுப்பதற்கு கூட இயலாத நிலையில் வாடகை வீட்டில் மிகவும் கஷ்டத்துடன் வாழ்ந்து வருகின்றேன்.

தற்போது நாட்டு நிலைமை சீரடைந்து சமாதான காலம் நிலவும் நிலையில் உயர் பாதுகாப்பு வலயமென பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் கூட விடுவிக்கப்படுகின்ற நிலையில் சாதாரணமாக எமது கிராமத்தில் அமைந்துள்ள எனது வீட்டை மீளப்பெறுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து ஒரு தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் - என்றார். (ற-ஜ-ரி)

# முகவரி விசாரித்து அணுகி 3 பவுண் நகை கொள்ளை

## யாழ். ஆனைப்பந்தியில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப்.9
முதியவருக்கு அருகில் சென்று முகவரி கேட்டுவிட்டு அவர் அணிந்திருந்த 3 பவுண் சங்கிலியை கொள்ளையடித்துச் சென்றுள்ளார் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர். இந்தச் சம்பவம் யாழ். ஆனைப்பந்தியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம் பெற்றது. வீட்டின் அருகில் நின்ற 65 வயதுடைய முதியவர் அணிந்திருந்த சங்கிலியே கொள்ளையடிக்கப்பட்டது.

கறுப்பு நிற பல்சர் வகை என். பி. எக்ஸ்.ஐ. 2199 என்ற இலக்கமுடைய மோட்டார் சைக்கிளில் சென்ற அந்த இளைஞன் முதியவருக்கு அருகில் சென்று முகவரி ஒன்றை வினாவியுள்ளார். அதன்போது முதியவர் அந்த இளைஞனின் பக்கம் திரும்பிய போதே 3 பவுண் நிறையுடைய சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடித் தப்பியுள்ளார்.

தப்பியோடும் போது இளைஞர் முதியவரைத் தாக்கி விட்டுத் தப்பி ஓடியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-ஜ-4,101)

# உட்கட்டுமான வசதிகள் இன்றி நவாலி மகா வித்தியாலயம்

நவர்லி மகா வித்தியாலயத்துக்குக் கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் முன்வைத்த உட்கட்டுமானத் தேவை இதுவரை நிறைவேற்றவில்லை என அதிபர் ரி.மாதவன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நவாலியில் க.பொ.த உயர்தரத்தைக் (கலை) கொண்ட ஒரே ஒரு பாடசாலை நவாலி மகாவித்தியாலயம்.

நூற்றாண்டு பழமை வாய்ந்த இந்தக் கட்டடத்துக்கு இருமாடிக் கட்டடம், நூலகக் கட்டடம், ஆசிரியர் ஓய்வு அறை மற்றும் கட்டடத் தேவைகள் குறித்து முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் இந்தத் தேவைகள் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை. மாணவர்களின் கல்வியை மையமாகக் கொண்டு முன்னெடுக்கும் இந்தப் பாடசாலைக்கு உட்கட்டுமான வசதிகளை வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணப் பணிப்பாளர் ஒன்றிணைந்து முன்னெடுக்க வேண்டும். மாணவர்களின் கல்வி வசதியை மேம்பாடு செய்வதுடன் உயர்தரமான மாணவர்களை சமூகத்துக்கு உருவாக்கிக் கொடுக்க முடியும்.

மாணவர்களின் கல்வித் தேவைக்கு மிக அவசரமாக இருமாடிக் கட்டடம் தேவையாகவுள்ளது - என்றார். (ற-ஜ-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கைக் கட்டுப்படுத்த 3 தினங்கள் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், பெப். 09

மாவட்டத்தில் அதிகரித்து வரும் டெங்கு நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான விசேட விழிப்புணர்வுச் செயற்பாடுகள் எதிர்வரும் 11ஆம், 12ஆம், 13ஆம் திகதிகளில் நடைபெற வுள்ளன என்று யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

அதிகரித்து வரும் டெங்கு நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை பி.ப 3 மணிக்கு நடைபெற்றது.

யாழ். மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்புக்கு அடுத்ததாக டெங்கு நோய் அதிகரித்துக் காணப்படும் பகுதியாக யாழ்ப்பாணம் அறியப்பட்டுள்ளது. எனவே டெங்கு நோய் கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்காக யாழ் மாநகர சபை, சாவகச்சேரி பிரதேச சபை, கரவெட்டிப் பிரதேச சபை, தெல்லிப்பழைப் பிரதேச சபை ஆகிய பகுதிகளிலே குறித்த திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்படி கைவிடப்பட்ட காணிகள் மற்றும் பற்றை மண்டிய பகுதிகளைத் துப்புரவு செய்வதற்கான அறிவித்தல் பலகைகள் குறித்த காணிகளில் வைக்கப்படவுள்ளன. அறிவுறுத்தல் பலகைகள் வைக்கப்பட்டு இரண்டு வார காலப் பகுதியில் காணிகள் துப்புரவு செய்யப்படுதல் வேண்டும். மாறாக துப்புரவு செய்யப்படாத காணிகள், அரச உடைமையாக்கப்பட்டுக் காணி அற்றவர்களுக்கு வழங்கப்படுவதுடன், விவசாய நடவடிக்கைக்குப் பயன்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

இலங்கை முழுவதும் 20 மைக்றோன் பொலித்தீன் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனால் யாழ் மாவட்டத்தில் அவை தொடர்ச்சியாகப் பாவனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றைத் தடை செய்யும் செயற்பாடுகள் சுற்றுச் சூழல் அதிகார சபையால் செயற்படுத்தப்படுவதுடன், வர்த்தகர்களுக்கான விழிப்பூட்டல் செயற்பாடுகளையும் மேற்கொள்ளவுள்ளனர்.

அத்துடன் சாவகச்சேரி வேம்பிராய்ப் பகுதி மற்றும் கீரிமலை நகுலேஸ்வரம் பகுதியில் படையினர் மலக்கழிவுகளைக் கொட்டுவதாக கூறப்படுகின்றது. இந்தச் செயற்பாடுகளும் நிறுத்தப்பட வேண்டும். சுண்ணக்கல் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளில் மூடப்படாத கிடங்குப் பகுதிகள் காணப்படின் அவற்றுக்குக் காரணமானவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்-என்றார்.

மேலும் இந்தக் கலந்துரையாடலில் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், சுற்று சூழல் அதிகார சபையினர், யாழ் மாவட்டச் சேயலக அதிகாரிகள் என்று பலரும் கலந்து கொண்டனர். (த-ரி5)

# கருத்தறியும் அமர்வின் இரண்டாம் நாள் இன்று

யாழ்ப்பாணம், பெப். 9

புதிய அரசமைப்புக்கு மக்கள் கருத்தறியும் குழுவின் அமர்வு இரண்டாவது நாளாக்க் கிளிநொச்சியில் இன்று இடம்பெறவுள்ளது. நேற்றைய தினம் கருத்துக்களைத் தெரிவிக்கத் தவறியவர்கள் இன்றைய அமர்வில் பங்கெடுத்து தமது கருத்துக்களைத் தெரிவிக்க முடியும், என்று இந்தக் குழுவின் உறுப்பினர்களுள் ஒருவரான வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

புதிய அரசமைப்புக்கு மக்கள் கருத்தறியும் குழுவின் அமர்வு, கடந்த மாதம் 18 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. கொழும்பு, கண்டி, வவுனியா மாவட்டங்களில் இடம்பெற்ற அமர்வுகளில் தமிழ் மக்களின் பங்களிப்பு மிகக் குறைவாக இருந்தது.

இந்த நிலையில் கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற அமர்வில் மக்களின் பங்களிப்பு ஓரளவு அதிகமாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. நேற்றைய தினம் பலர் பதிவு செய்திருந்த போதும், கருத்துக்களை அமர்வின் முன்பாகத் தெரிவிக்காமல் சென்று விட்டனர். இவ்வாறு சென்றவர்கள் இன்றைய தினம் தமது கருத்துக்களை முன்வைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் தமது அபிலாசைகளை தெரிவிக்கவேண்டும் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (த-5)

# கச்சதீவுத் திருவிழாவுக்கான அனைத்து ஏற்பாடுகள் பூர்த்தி

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் யாவும் நிறைவடைந்துள்ளன. ஆலயச் சூழலில் மேற்கொள்ளப்பட வேண்டிய சுகாதாரச் செயற்பாடுகளைக் கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணம் முதல் குறிகட்டுவான் வரை ஒருவழிப் பயணத்திற்கு அரச பஸ்களில் 72 ரூபாவும், தனியார் பஸ்களில் 70 ரூபாவும் அறவிடப்படுவதுடன். ஒரு வழிப்படகுச் சேவைக்கு 225 ரூபாவும் அறவிடப்படவுள்ளதாக யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா ஏற்பாடுகளுக்கான கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை மு.ப 10.30 மணிக்கு நடைபெற்றது. யாழ். மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கச்சதவு புனித அந்தோனியார் ஆலயத்துக்கான போக்குவரத்து ஏற்பாடுகளைக் கடற்படையினருடன் இணைந்து செய்து வருகின்றோம்.

கடந்த வருடம் இந்தியாவில் இருந்து 4 ஆயிரம் யாத்திரிகர்களும், இலங்கையில் இருந்து 3 ஆயிரம் யாத்திரிகர்களும் கலந்து கொண்டார்கள். இந்த எண்ணிக்கை இந்த ஆண்டு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆலயச் சுற்றாடலைப் பேணும் பணிகள் நெடுந்தீவுப் பிரதேச சபையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யாத்திரிகர்களுக்கான குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர், கடற்படையினர் இணைந்து செயலாற்றுவதுடன். யாத்திரிகர்கள் பாவிப்பதற்கு 82 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், இவற்றில் நான்கு கொமெட் வசதி கொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றைச் சீர் செய்து கதவுகள் மற்றும் சிறு திருத்த வேலைகளைச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நெடுந்தீவு பிரதேச சபையால் 25 தங்குமிடக் கூடாரங்கள் அமைக்கப்படவுள்ளன. மக்களுக்கான உணவு வசதிகளை கடற்படையினர் மேற்கொள்வதுடன், நெடுந்தீவு பலநோக்கூக் கூட்டுறவுச் சங்கத் தினர் சிற்றுண்டிச்சாலையை நடத்துவர். திருவிழாக் காலத்தில் அங்கு மதுபானப் பாவனையைத் தடை செய்வதற்கான நடவடிக்கையைப் பொலிஸார் மேற்கொள்வார்கள்.

பொலிஸ் மற்றும் சுங்கத்திணைக்கள அதிகாரிகளுக்கான தனிப் படகு சேவை நடைபெறவுள்ளது. மக்களின் பாவனைக்காக 15 படகுகள் கடந்த ஆண்டு ஈடுபடுத்தப்பட்டன. இந்த ஆண்டும் குறித்த படகுகள் சேவையில் ஈடுபடுத்துவதற்காகப் படகுகளின் தரப் பரிசோதனைகளை கடற் படையினர் மேற்கொள்ளவுள்ளனர்.

பயணிகள் பாதுகாப்புக்காக ரோந்துப் பணியும் படகுச் சாரதி மற்றும் கடற்படையினர் இடையிலான தொலைத் தொடர்புச் சேவைகளும் மேற் கொள்ளப்படவுள்ளன. யாத்திரிகர்களுக்கான பஸ் போக்குவரத்து வசதிகளை இலங்கைப் போக்குவரத்துச் சபையினரும், தனியார் சங்கத்தினரும் இணைந்துசெய்யவுள்ளனர். 20 ஆம் திகதி அதிகாலை 4மணிக்கு யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து பஸ்கள் நெடுந்தீவுக்குப் புறப்படும். இந்த ஒழுங்குகள் முற்பகல் 11.30 மணிவரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. யாழ் பஸ் நிலையம் முதல் குறிகட்டுவான் வரையில் போக்குவரத்துக் கட்டணமாகத் தனியார் பஸ்களில் 70 ரூபாவும், இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களில் 72 ரூபாவும் அறவிடப்படும். படகுச் சேவைகள் நெடுந்தீவு மற்றும் குறிகட்டுவானில் இருந்து காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 1.30 மணிவரை நடைபெறும். அத்துடன், 21 ஆம் திகதி தமது இல்லங்களுக்குச் செல்லும் யாத்திரிகர்களின் படகுச் சேவைகள் பிற்பகல் 2 மணிவரை நடைபெறும். குறிகட்டுவான் முதல் கச்சதீவு வரையான படகுப் போக்குவரத்துக் கட்டணமாக 225 ரூபாவும் அறவிடப்படவுள்ளது. அத்துடன் தனியார் கடைகள் அனைத்தும் நெடுந்தீவு பிரதேச சபையின் அனுமதியுடனும், பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அனுமதியுடனும் அமைக்கப்படவேண்டும். மேலும் வங்கி நடைமுறை மற்றும் சுற்றுலா நீதிமன்றம் என்பனவும் செயற்படுத்தப்படவுள் ளன-என்றார்.

மேலும் இந்தக் கலந்துரையாடலில், கடற்படையினர், இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மற்றும் பிரதேச செயலாளர்கள், பங்குத் தந்தையர்கள், தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரிகள், கச்ச தீவு கப்பற் போக்குவரத்துத் துறையினர் எனப் பலர் கலந்துகொண்டனர். (த-ரி5-106)

வீடு வாடகைக்குத் தேவை
யாழ் நகரை அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.
077 245 3673 (68778)(10.17)

விற்பனைக்கு 077 583 0104
51-XXXX இலக்கமுடைய Toyota Hiace (செல் ஓமேகா) வான். ..... CD 200 Japan மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்கு உண்டு.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2736 திகதி 08.02.2016
20 29 37 52 M 57 ரூ. 10,000,000/-

ஆங்கிலம்
O/L, A/Lஎழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள்
இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
2 வது சனி, ஞாயிறு பிரிவுகள்ஆரம்பம் 13.02.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
13-02-2016 இற்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை ஒப்படைத்தல் வேண்டும்.
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

சிறுநீரகம் தேவை
15 வயதுடைய சிறுமிக்கு B+ அல்லது O+ சிறுநீரகம் உடனடியாகத் தேவை. வழங்குபவர் 20-35 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
077 501 2805, 021 721 0572

VACANCY
WALK - IN - INTERVIEW
Our Institute is looking for self-motivated, ambitious and dynamics individuals to join our team.
Assistant English Lecturer - Full Time
Age between 22 and 30 years old
Date: 10.02.2016 - 11.02.2016
Time: Between 10.30 am and 4.00 Pm
For Further Details please contact,
British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
Tel: 021 222 4550 or 077 036 5728

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் யாழ். போதனாவில் கட்டடங்கள்

## *தாதியர் விடுதி நிர்மாணம் துரிதப்படுத்தப்படும் வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ்.போதனா வைத்தியசாலையில் இந்த வருடம் ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் சிகிச்சைப் பிரிவு மற்றும் கட்டடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். தாதியர் விடுதி அமைப்பதைத் துரிதப்படுத்துமாறு சுகாதார அமைச்சிடம் கோரப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த வருடம் முன்னெடுக்க வேண்டிய பணிகளுக்கான திட்டமிடல்கள் நிறைவடைந்துள்ளன. நிதி கிடைத்தவுடன் பணிகள் ஆரம்பமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இருதய சிகிச்சைப் பிரிவுக்கான கட்டடம் மற்றும் அதற்கான உபகரணங்களுக்கென 350 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மகப்பேற்று விடுதிக்கென 400 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. தாதிய மாணவர் விரிவுரை மண்டப நிர்மாணிப்பு உள்ளிட்டவற்றுக்கென 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மருத்துவர்கள் விடுதிக்கென 100 மில்லியன் ரூபாவும் சலவை செய்வதற்கான இடத்துக்கென 60 மில்லியன் ரூபாவும் உபகரணக் கொள்வனவுக்கென 40 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் பணிப்பாளர் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நாளாந்தம் வெளிநோயாளர் பிரிவில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெறுகின்றனர். பழைய வெளிநோயாளர் பிரிவில் நாளாந்தம் சுமார் 3 ஆயிரம் பேர் வரையில் சிகிச்சை பெறுகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, தாதியர்களுக்கான விடுதியை அமைத்துத் தருமாறு தாதியர்கள் பல வருடங்களாகக் கோரிக்கை விடுத்தும் இன்னும் அது நிர்மாணிக்கப்படவில்லை என்று யாழ்.போதனா வைத்தியசாலைத் தாதியர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

கடந்த வருடம் அதற்கான நடவடிக்கை எடுப்பதாக வைத்தியசாலை நிர்வாகத்தினால் கூறப்பட்டது. வைத்தியசாலையில் தற்போதுள்ள சமையலறையின் மேற்புறமாக மாடிகள் கொண்டதாக தாதியர்களுக்கான விடுதி அமையும் என்றும் கூறப்பட்டது. அதற்கென கடந்த வருடம் நிதியும் ஒதுக்கப்பட்டுவிட்டது. ஆனால் கட்டட வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படாது இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது என்றும், அதனால் தாம் நெருக்கடி நிலைமையை எதிர்கொள்கின்றோம் என்றும் தாதியர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பணிப்பாளர், கடந்த வருடம் செயற்படுத்தப்பட வேண்டிய தாதியர்களுக்கான விடுதி நிர்மாணிப்புக்கென கடந்த வருடமே 89 மில்லியன் ரூபாவும் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவுக்கென ஒதுக்கப்பட்ட 590 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டு விட்டன. அவற்றில் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவுக்குரிய கட்டட அமைப்புக்கான வேலைகள் தொடங்கப்பட்டு விட்டன. தாதியர்களுக்கான விடுதி நிர்மாணிப்புப் பணியும் இந்த வருடம் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்தார்.

தாதியர் விடுதி அமைப்பது தொடர்பில் சுகாதார அமைச்சு நிதி ஒதுக்கியுள்ளபோதும் அதற்கான பணிகளை முன்னெடுக்க வேண்டிய ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்ய வேண்டும். சுகாதார அமைச்சே ஒப்பந்தங்களைக் கோரி வழங்குகிறது. அதனைச் செயற்படுத்தச் சுகாதார அமைச்சில் தாமதம் நிலவுகிறது. தாதியர் விடுதி தாமதிக்கப்படும் விடயம் தொடர்பில், சுகாதார அமைச்சில் அண்மையில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் அமைச்சு அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும். விரைவில் தாதியர் விடுதி அமைக்கப்படும்.- என்றார்.

(ற-4)

# காணி மத்தியஸ்தர் சபை யாழில் முதலில் அமையும்

அம்பாறை,பெப்.9

காணிப் பிணக்குகளைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கென யாழ்ப்பாணம் மாவட்டத்தில் காணி மத்தியஸ்தர் சபை ஒன்று அமைக்கப்பட இருக்கின்றது.

பொது மக்களிடையேயுள்ள காணி சம்பந்தமான பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கென விசேடமாக காணி மத்தியஸ்தர் சபைகளை மாவட்ட ரீதியில் அமைப்பதற்கு நீதி அமைச்சின் கீழான மத்தியஸ்தர் சபைகள் ஆணைக்குழு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரையிலும் காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டுமென்பது வலியுறுத்தப் பட்டுள்ள நிலையில் காணி மத்தியஸ்தர் சபைகள் அமைக்கப்படவுள்ளன.

இலங்கையின் பல பாகங்களிலும் மத்தியஸ்தர் சபைகள் ஆணைக்குழுவினால் பிரதேச செயலக ரீதியாக மத்தியஸ்த சபைகள் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வருவதுடன் பொதுமக்களிடையே வரவேற்பையும் பெற்றுத் திகழ்கின்றன.

இந்த அடிப்படையில் காணிப் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கென மாவட்ட ரீதியில் தனியான காணி மத்தியஸ்தர் சபைகள் அமைக்கப்படவுள்ளதாக மத்தியஸ்தர் சபைகள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட பயிற்றுவிப்பாளர் எம்.எஸ்.ஆர்.ஜோன் பிலிப் தெரிவித்தார்.

இதன்படி யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குக் காணி மத்தியஸ்தர் சபை ஒன்றை அமைப்பதற்கென பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வர்த்தமானி மூலம் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சையும் ஏற்கனவே மத்தியஸ்தர் சபைகள் ஆணைக் குழுவால் நடத்தப்பட்டுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டுள்ள 74 பேருக்குக் காணிப் பிணக்குகள் தொடர்பிலான மத்தியஸ்தம் பற்றிய பயிற்சிச் செயலமர்வு ஒன்று எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றது.

யாழ்ப்பாணம் கச்சேரி கேட்போர் கூடத்தில் நடைபெறவிருக்கும் இந்த பயிற்சிச் செயலமர்வுக்கான ஏற்பாடுகளை பயிற்சிக்கான நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் யசபால டி சில்வா, சிரேஷ்ட பயிற்றுவிப்பாளர் ஜோன் பிலிப் ஆகியோர் செய்துள்ளனர்.

இந்தச் செயலமர்வின் விசேடமாக காணிப் பிணக்குகள் தொடர்பான சட்டம் சம்பந்தமான விரிவுரைகளையும் விளக்கங்களையும் சட்டத்தரணி எம்.திருநாவுக்கரசு நிகழ்த்தவுள்ளார்.

தெரிவு செய்யப்பட்டுள்ள 74 பேருக்குப் பயிற்சிச் செயலமர்வுக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக தகவல்களறிய விரும்புவோர் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் பீ.சனாதனன் மற்றும் சிரேஷ்ட பயிற்றுவிப்பாளர் ஜோன் பிலிப் ஆகியோருடன் தொடர்பு கொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி பயிற்சிச் செயலமர்வைச் சிறப்பாகப் பூர்த்தி செய்வோருக்கு யாழ்.மாவட்ட காணி மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் நியமனங்களை மத்தியஸ்தர் சபைகள் ஆணைக்குழு வழங்கும்.

இந்த வகையில் இலங்கையில் முதலாவதாக அமைக்கப்படும் காணி மத்தியஸ்தர் சபையாக யாழ்.மாவட்ட காணி மத்தியஸ்தர் சபை அமையுமெனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது. (த-30)


## அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களின் நினைவுச்சிலை அமைத்தல் தொடர்பான அறிவித்தல்

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை எல்லைக்குள் உள்ள நெளுக்குளம் சந்தியில் திரு.குமார் என்பவரின் காணியின் முன் பக்கமாக அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களின் திருஉருவச்சிலையை வைப்பது தொடர்பாக தங்களுக்கு ஏதும் ஆட்சேபனை இருக்குமிடத் து இந்த அறிவித்தல் திகதியிலிருந்து ஒரு வாரகாலத்திற்குள் (07 நாள்கள்) செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா. என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அறியத்தரவும்.

திருமதி சுகந்தி கிஷோர்,
செயலாளர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

(c 29047) (14,18,20)


# யோசிதவின் காதலியும் விரைவில் கைதாவார்?

கொழும்பு, பெப் 9

சீ.எஸ்.என். நிதி மோசடி விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருக்கும் யோசித ராஜபக்ச உட்பட்ட ஐவரைத் தொடர்ந்து அந்த நிறுவனத்தில் முக்கிய பதவி வகித்த யாரா அபேநாயக்கவும் கைது செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நிதி மோசடி விசாரணைப் பிரிவின் தகவல்களை ஆதாரம் காட்டி சண்டே ரைம்ஸ் இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

யோசித ராஜபக்சவின் முன்னாள் காதலியான இவர் தற்பொழுது ரக்பி விளையாட்டு வீரர் பசில் மரஜாவைத் திருமணம் செய்து வெளிநாட்டுக்குச் சுற்றுப்பயணம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(து)

# சீ.எஸ்.என். விவகாரத்தில் எவரும் தலையீடு செய்யார்

## *அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவிப்பு*

கொழும்பு, பெப் 9

சீ.எஸ்.என். தொலைக்காட்சி மோசடி விவகாரத்தில் எவரும் தலையீடு செய்யமாட்டார்கள் என சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

யோசித ராஜபக்ச உள்ளிட்டவர்கள் தொடர்பிலான விசாரணைகளின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ தலையீடு செய்யமாட்டார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சீ.எஸ்.என். நிதி மோசடி குறித்த விசாரணை அறிக்கை சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும், போலி ஆவணங்களைத் தயாரித்தல், கம்பனிப்பதிவுச்சட்டத்தைமீறியமை, அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமை, சுங்கச் சட்டங்களை மீறியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் யோசித உட்பட்ட வர்களுக்கு எதிராக சுமத்தப்பட் டுள்ளதாகவும் அவர் குறிப்பிட் டார்.

குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து)


## விற்பனைக்கு

பாவனைக்குகந்த கொங்கிறீட் மிக்சர் மற்றும் புளொக் (Block) கல் மெசின் ஆகியன விற்பனைக்குண்டு.

(88773) (14,18,20)

தொடர்பு: 075 038 7032

வீடு வாடகைக்குண்டு 077 484 2578

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் A-9 வீதிக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (88772)(11,17,18)



## யாழ்ப்பாணம் மாநகர சபை சிறியரக வாகனங்கள் வாடகைக்கு அமர்த்துதல்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் இருந்து பணிக்கப்படுகின்ற வட்டாரங்களில் கடைகள் மற்றும் சந்தைகளில் இருந்து வெளியேற்றப்படும் இறைச்சி எலும்புக் கழிவுகளினை எடுத்துச்சென்று காக்கைதீவு மற்றும் கல்லுண்டாய் வெளிகளிலுள்ள அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் பறிப்பதற்கு சிறியரக வாகனங்கள் தேவைப்படுகிறது. இச்சேவையினை வழங்கக்கூடிய வழங்குநர்கள் 11.02.2016 ஆம் திகதி வியாழக்கிழமை 12.00 மணிக்கு முன்பதாக கூறுவிலைப்படிவத்தை யாழ் மாநகர சபையின் கொள்வனவுப்பகுதியில் பெற்று 12.02.2016 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 12.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக "ஆணையாளர் மாநகர சபை, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பொ.வாகீசன்
ஆணையாளர்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

09.02.2016

(C 29053)(10.17.18.19)


### தமிழரசுக் கட்சியின் மகளிர் அணி மத்திய குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப் 9

தமிழரசுக் கட்சியின் மகளிர் அணி மத்திய குழுக் கூட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி கட்சியின் தலைமையகத்தில் நாச்சியார் செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

தமிழரசுக் கட்சியின் எதிர்காலச் செயல்பாடுகள், மகளிர் பங்களிப்பு, தற்போதைய நிலமைகள் தொடர்பில் ஆராய்வதோடு அணியை மேலும் பலப்படுத்தும் வகையில் இந்தக் கூட்டம் யாழ். மார்ட்டீன் வீதியில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது. (த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மினிபஸ் மோதி காயமடைந்த சிறுவன் சாவு

யாழ்ப்பாணம்,பெப்.9

கடந்த புதன் கிழமை திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்திக்கு அண்மையில் மினிபஸ் மோதியதில் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த சிறுவன் நேற்றிரவு சிகிச்சை பயன் இன்றிச் சாவடைந்துள்ளான்.

கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியைச் சேர்ந்த பார்த்தீபன் சுவஸ்திகன் (வயது-6) என்பவரே சாவடைந்தவராவர்.

(து)

# யாழ்.நகர சைக்கிள் பாதுகாப்பு நிலையம் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அருகில் உள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையம் முனீஸ்வரன் வீதிக்கு இட மாற்றப்படவுள்ளது.

முனீஸ்வரன் வீதியில் உள்ள மாநக ராட்சி மன்றத்துக்குச் சொந்தமான வளாகத்திலேயே இந்தச் சைக்கிள் தரிப்பிடம் இடமாற்றப்படவுள்ளது.

தற்போது இந்தச் சைக்கிள் தரிப்பிடத் துக்கான கொட்டகைகள் அமைக் கப்பட்டு வருகின்றன.

இந்தக் கொட்டகைகளின் நிர்மாணப் பணிகள் நிறைவுபெற்றதும் சைக்கிள் தரிப்பிடம் இந்தப் பகுதிக்கு இடமாற் றப்படும் என்று யாழ்.மாநகர ஆணை யாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

(ற-17)

# நாளை திருநீற்றுப் புதன்

கொழும்புத்துறை,பெப்.9

கிறிஸ்தவர்களால் வருடாந்தம் அனு சரிக்கப்படும் தவக்காலத்தின் ஆரம்ப நாளான திருநீற்றுப்புதன் நாளையாகும். நாளை காலை 6 மணிக்கு அனைத்துக் கத்தோலிக்க, கிறிஸ்தவ ஆலயங்களி லும் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று ஆசிர் வதிக்கப்பட்ட புனித சாம்பலால் நெற் றியில் மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள் எனக்கூறி திருச்சிலுவை அடையாளமிடும் சடங்குகள் நடைபெறும். இயேசுவின் திருப்பாடுகள், சாவை நினைவு கூரும் தவக்காலம் நாளைய திருநீற்றுப் புதனுடன் ஆரம்பமாகி 40 நாள்கள் கடைப்பிடிக்கப்படும். (ஜ-135)

# கராஜ் உரிமையாளர் மீது தாக்குதல்

சாவகச்சேரி, பெப்.9

மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையத் துக்குள் உட்புகுந்த கும்பல் அங்கிருந்த உரிமையாளரைத் தாக்கி விட்டு தப்பியோடியுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை அல்லாரை தம்பு தோட்டத்துக்கு அருகில் இடம்பெற்றது. தாக்குதலுக்கு இலக்கான கராஜ் உரிமையாளர் சாவகச்சேரி வைத் தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளார்.


இதேவேளை நேற்று முன்தினம்இரவு கச்சாய்ப் பகுதியில் வாள்களுடன் சென்ற கும்பலை ஊர்மக்கள் துரத்தியுள்ளனர். அந்தப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குச் சென்ற கும்பல் அங்குள்ள இளைஞரின் நண்பன் மூலம் அவரை வெளியே வர வைத்து தாக்குதல் நடத்தவிருந்த வேளையில், வந்தவர்களின் கைகளில் வாள்கள் வைத்திருந்ததைக் கண்டு சத்தமிடவே அயலவர்கள் கூடியுள்ளனர். அதையடுத்து அந்தக் கும்பல் தப்பி யோடியுள்ளது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது . (ற-ஜ-9)

# சுயதொழில் பயிற்சியாளருக்கு தொழில் உபகரணம் வழங்கல்

மன்னாரில் உள்ள மாற்றாற்றல் கொண் டவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம் படுத்தும் வகையில் 'திரிசவிய' நிகழ்ச் சித்திட்டத்தின் கீழ் சமூக சேவைகள் அமைச் சும், மன்னார் மாற்றாற்றல் கொண்டோர் புனர் வாழ்வுச் சங்கமும் இணைந்து நடத்திய சுய தொழில் பயிற்சியை பூர்த்தி செய்த 60பயிற் சியாளர்களுக்கு நேற்று சுய தொழில் உப கரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் தெரிவு செய்யப்பட்ட 60 சுய தொழிற்பயிற்சியாளர்கள் தமது சுய தொழில் பயிற்சியைப் பூர்த்தி செய்துள்ள நிலையில் அவர்களின் சுய தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் சுமார் 10 ஆயிரம் ரூபா பெறு மதியான சுய தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மெழுகுவர்த்தி தயாரித்தல், பூ நூல் தயாரித்தல், ஊதுபத்தி தயாரித்தல் போன்ற மூன்று சுய தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார், மன்னார் மாற்றாற்றல் கொண்டோர் புனர் வாழ்வுச் சங்கத்தின் பணிப்பாளர் அருட் சகோதரி சோசப்பின் மேல், மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர் எம்.எஸ். சந்திரபோஸ், சமூக அபிவிருத்தி உத்தி யோகத்தர் எப்.ஜே.செரின், சிறுவர் மேம் பாட்டு உத்தியோகத்தர் ஜே.ஒஸ்மன் ஆகியோர் கலந்து கொண்டு சுய தொழில் உபகரணங்களை வழங்கி னர். (ஜ-56)



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ் 100% சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.

PAKED BY : Royal Industries

T.P: 077 727 7670 colombo - 13

அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்

ஏக விநியோகஸ்தர்கள்:

சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 2567

- விளையாட்டுத்துறையில் வெற்றிபெறும் வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் வீறு கொண் டெழும் விசேட சக்தியை வழங்குவது றோயல் குளுக்கோஸ்.
- நோயுற்றவேளை சோர்வுற்று இருக்கும் உங்களுக்குப் புத்துணர்வும் புதுத்தென்பும் தருவது றோயல் குளுக்கோஸ்.
- காலை முதல் மாலை வரை வேலை அதிகம் காரணமாக சோர்வுற்ற நிலை அடையும்போது புதிய உற்சாகம் பெற உங்கள் கையில் இருக்க வேண்டியது றோயல் குளுக்கோஸ்.
- மழலைகளுக்கும் மகப்பேற்றுத் தாய்மாருக்கும் விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்கும் முதியோருக்கும் மூதாதையர் காலத்தில் இருந்து முன் நின்று உற்சாகம் தருவது றோயல் குளுக்கோஸ்.

உற்பத்தியாளர்: றோயல் இன்டஸ்றீஸ், வூல்வொண்டல் ஸ்றீற், கொழும்பு-13

சந்தைப்படுத்துவோர் : சிவா நறுமணப் பூங்கா.

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
நிதி அமைச்சு

மேலதிகமாக 1000 ரூபாவை வெல்லுங்கள்

நியத்த ஜய
வாசி தஹச



வெள்ளிக்கிழமை  செவ்வாய்க்கிழமை

உங்களுக்கு வெற்றியை தரும் நியத்த ஜய "வாசி தஹச" எனும் பெயரில் புதிய மேம்படுத்தலை ஆரம்பித்துள்ளது. இதன்மூலம் வழமையான பணப்பரிசுகளுக்கு மேலதிகமாக, விஷேட இலக்கம் பொருந்தினால் மேலும் ரூ.1000 பணப்பரிசை வெல்வதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

வெற்றி வாய்ப்புக்கள் தற்போது அதிகம் என்பதால் உங்கள் வெற்றி நிச்சயம்

2016 பெப்ரவரி 02 முதல் ஏப்ரல் 30 வரை மட்டுமே

நிச்சயமாகவே உங்களுக்கு வெற்றியை தரும் நியத்த ஜய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மரண அறிவித்தல்

**செல்வன் பார்த்தீபன் சுவஸ்திகன்**
(தரம் ஒன்று மாணவன் பொஸ்கோ வித்தியாலயம்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட பார்த்தீபன் சுவஸ்திகன் நேற்று 08 . 02 2016 அகால மரணமானார்.

அன்னார் பார்த்தீபன் (முகாமையாளர் இலங்கை வங்கி நல்லூர்), ஹம்சா தம்பதிகளின் அன்பு மகனும், மாரிமுத்து செல்வராசா, ஜெயராணி, நாகலிங்கம் ஜெகத்குருதாஸ்- காலஞ்சென்ற திருமதி புஸ்பவதி ஆகியோரின் அன்புப் பேரனும் உமாசங்கர், திருமதி துளசிதா, செல்வி திவ்யா ஆகியோரின் பெறாமகனும் உமாசங்கர் றோகினியின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (09.02.2016) மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சேச் லேன்
கொக்குவில் மேற்கு

தகவல்
செல்வராசா பார்த்தீபன்
(தந்தை)

## யாழ்.மாநகரக்

வனத்திடம் நிதி உதவி கோரப்பட்டுள்ள போதும், யாழ்.மாநகருக்கான குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப் பட்டாலே, நிதி ஒதுக்கீடு செய்ய முடியும் என்று பிரெஞ்சு அபிவிருத்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாக, இரணைமடு நீர் விநியோகத் திட்டப் பொறியியலாளர் எந்திரி தி.பாரதிதாசன் தெரிவித்தார்.

குடிப்பதற்குரிய குடிதண்ணீர் எஸ். எல்.எஸ். 6142013 என்ற தராதரத்தில் இருக்க வேண்டிய போதும், யாழ். மாவட்டத்தில் பயன்படுத்தும் குடிதண்ணீர் குறித்த தராதரத்தில் இல்லை என்றும், இதற்கு இரணை மடுவிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வருவது அல்லது தாளையடியிலிருந்து கடல்நீரை நன்னீராக் குவதே தீர்வாகும் என்றும் பாரதிதாசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், நீர் விநியோகம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

**மூன்றாகிய திட்டம்**

யாழ். – கிளிநொச்சி இரணைமடு குடிதண்ணீர் விநியோகத் திட்டம் ஆரம்பத்தில், இரணைமடுக் குளத்தைப் புனரமைத்து அங்கிருந்து யாழ்.குடாநாட்டுக்குக் குடிதண்ணீர் வழங்குவதையும், யாழ்.மாநகர கழிவகற்றல் திட்டத்தையும் கொண்டிருந்தது. இந்தத் திட்டத்துக்கு, கிளிநொச்சி விவசாயிகள் எதிர்ப்பு வெளியிட்டனர். தமக்குரிய நீர்த் தேவையைப் பூர்த்தி செய்யாமல், யாழ்.குடநாட்டுக்குக் குடிதண்ணீரைக் கொண்டு செல்லக் கூடாது என்று தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து வடக்கு மாகாண சபையில், 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வடக்கு மாகாண விவசாய அமைச்சரினால் குறித்த நீர்விநியோகத் திட்டம் மூன்று கூறுகளாகப் பிரிக்கப்பட்டு (இரணைமடுக்குளம் புனரமைப்பு, கடல்நீரை நன்னீராக்கி நீர் விநியோகம், யாழ். மாநகர கழிவகற்றல் திட்டம்) செயற்படுத்தக் கோரும் பிரேரணை கொண்டு வரப் பட்டது. அதனை சபையில் ஆளும் கட்சி உறுப்பினர் இ.ஆனோல்ட் வழி மொழிய ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**பின்வாங்கிய வங்கிகள்**

திட்டம் மாற்றியமைக்கப்பட்ட பின்னர், பிரெஞ்சு அபிவிருத்தி நிறுவனம் இதற்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து விலகுவதாக அறிவித்தது. மாற்றியமைக்கப்பட்ட திட்டத்தை, மூன்று கூறுகளாக முன்னெடுக்க ஆசிய அபி விருத்தி வங்கியுடன், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், அப்போதைய வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ் ஆகியோர் பேச்சு நடத்தினர். மூன்று கூறுகளாகப் பிரிக்கப்பட்டுத் திட்டம் செயற்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியதாக, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கர நேசன் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில், கடந்த மாதம் 30 ஆம் திகதி இடம் பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே, இரணை மடுத் திட்டப் பொறியியலாளர் எந்திரி தி.பாரதிதாசன், மூன்று கூறுக ளாகப் பிரிக்கப்பட்ட செயற்திட்டத்தின் ஒரு கூறாகிய யாழ்.மாநகர கழிவகற்றல் திட்டத்துக்கு உதவியளிப்பதிலிருந்து ஆசிய அபிவிருத்தி வங்கி பின்வாங்கியதாகத் தெரிவித்தார்.

**நீர் விநியோகம் முக்கியம்**

இதனால் தற்போது பிரெஞ்சு அபி விருத்தி நிறுவனத்திடம் நிதி உதவி கோரப்பட்டதாகவும், அதற்கு அந்த நிறுவனம் யாழ். மாநகருக்கான குடி தண்ணீர் விநியோகம் முன்னெடுக்கப்பட்டாலே நிதி உதவி வழங்க முடியும் என்று தெரிவித்ததாகவும், இதன் போது பாரதிதாசன் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கர நேசனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி வழங்குவதாகத் தெரிவித் துள்ளார்கள். இது தொடர்பில் கூட்டமும் நடைபெற்றுள்ளது – என்று குறிப்பிட்டார். (த-5)

## சிவில்

வித்துள்ளது. கடந்த வெள்ளிக் கிழமை கொழும்பில் நடந்த இந்திய –இலங் கைக் கூட்டு ஆணைக்குழுக் கூட்டத்தி லேயே இது தொடர்பான முடிவு எடுக்கப் பட்டுள்ளதாக, இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலர் ரேணு பால் குறிப்பிட்டுள்ளார்.

பலாலி விமான நிலைய அபிவிருத்தி தேவையில்லை எனவும், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நில அளவை நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்துமாறு, தெல்லிப்பழை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மக்களால் ஏகமனதான முடிவு எடுக்கப்பட்ட பின்னரே, கொழும்பில் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலர் ரேணு பால் இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில், பலாலி விமானப்படைத் தளத்தை, சிவில் விமான நிலையமாகத் தர முயர்த்துவது தொடர்பாக, ஆராய்வதற்கு இந்திய விமானப்படை அதிகாரிகள் குழுவொன்று விரைவில் யாழ்ப்பாணம் செல்லவுள்ளது.

அத்துடன், தென்னிந்தியாவுடனான கடல்வழித் தொடர்புகளை முன்னேற்றும் வகையில், காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய் யும் பணிகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஏற்கனவே நான்கு கட்டங்களாக காங்கேசன்துறை துறைமுகம் இந்தியாவினால் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. ஐந்து மற்றும் ஆறாவது கட்ட தரமுயர்த்தல் பணிகளை இந் தியா முன்னெடுக்க வு ள்ளது – என்று அவர் தெரிவித்துள் ளார். (த-5)

## முப்படைத்


நடத்தினார்.

பாதுகாப்பு அமைச் சில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது படையினருக்கு எதிரான குற் றச்சாட்டுகள் உட்பட மேலும் சில விடயங்கள் பற்றிக் கலந் துரையாடப் பட்டுள்ளன என்று அறிய முடிகிறது.

இதேவேளை,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்த னுடன் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இன்று பேச்சு நடத்துவார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இதற்கான சந்திப்பு இடம்பெறும்.(கு–சி)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் முருகேசு
சங்கரப்பிள்ளை
திதி : பிரதமை

எம் அப்பா.....
எம்மை விட்டு நீங்கி
நீண்டது ஏழாண்டுகள்
எம் நினைவில் வாழ்வீர்கள்
நிறையும் எம் வாழ் நாள் வரை

தோற்றம்
16.07.1931

மறைவு
26.01.2009

நினைவில்
குடும்பத்தினர்.

"மலரகம்".
கொட்டக்காட்டுலேன்
கோண்டாவில் கிழக்கு.

(68205)(12,18,20)

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
20 . 12 . 1913

இறப்பு
05 . 02 . 2016

வவுனியா சாஸ்திரி கூழாங்குளத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

திருமதி அன்னப்பிள்ளை சிவசம்பு

ஒரு தரம் கண் பார்க்காயா......
இனி எங்கு காண்போம்
உன்போன்ற பொக்கிசத்தை......

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2016) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாஸ்திரிகூழாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

077 980 9172

தகவல்:
குடும்பத்தினர்.

## 9 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
13 . 04 . 1978

விண்ணில்
09 . 02 . 2007

அமரர் இராசரத்தினம் புஸ்பராசா (வசந்தன்)

காலமெல்லாம் வாழ்ந்திடுவாய் என்றிருக்க
கணப்பொழுதில் மறைந்த மாயமென்ன........?

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

பிலிப்றோட்,
மட்டுவில்.

(60726) (14,18)

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் இரகுநாதன்
தணிகாசலம்

தோற்றம்
14.06.1944

மறைவு
10.01.2016

கடந்த 10.01.2016 இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் இரகுநாதன் தணிகாசலம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 07.02.2016 ஞாயிற்றுக் கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடை பெற்றது. இன்று (09.02.2016) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு நேரடியாகக் கலந்து கொண்ட வர்களுக்கும் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் எமக்கு வேண்டிய உதவி களைச்செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இல.185, பாடசாலை வீதி,
பண்டாரிக்குளம், வவுனியா.

குடும்பத்தினர்.

(68206) (13)

## கிருஹயக்ஞ அழைப்பு

நிகழும் மன்மத வருஷம் தை மாதம் 03ஆம் நாள் (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்பு மகள்

செல்வி ஸ்ரீரம்மியா ஜெயராமசர்மா

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் இடம் பெறும்.

| | | |
|---|---|---|
| 09.02.2016 செவ்வாய்க்கிழமை | பகல் 10.00 மணி | ஏகோதிஷ்டம்,மாசிகம் |
| 10.02.2016 புதன்கிழமை | பகல் 10.00 மணி | சபிண்டீகரணம் |
| 11.02.2016 வியாழக்கிழமை | பகல் 11.00 மணி | கிருஹயக்ஞம் |
| | மதியம் 12.00மணி | சமாராதனை |

மேற்படி கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

சுதுமலை அம்மன் கோயிலடி, மானிப்பாய்.

077 296 7291

(68775) (14,17,18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருளைக்கிழங்கு இறக்குமதிக்கான வரியை அதிகரிக்க வேண்டும்

## உ.கிழங்கு செய்கையாளர் விற்பனை சங்கங்களின் சமாசம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.9
உருளைக்கிழங்குக்கான இறக்குமதி வரியை அதிகரித்து உள்ளூர் உருளைக்கிழங்கு செய்கையாளர்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு யாழ்.மாவட்ட உருளைக்கிழங்குச் செய்கையாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கோரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பான கோரிக்கைக் கடிதம் ஒன்று யாழ். மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக உருளைக்கிழங்கு செய்கையாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் தெய்வேந்திரம் தெரிவித்துள்ளதாவது-
குடாநாட்டில் செய்கையாளர்களினால் பயிரிடப்பட்ட உருளைக்கிழங்கை இந்த வாரத்தில் அறுவடை செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட வுள்ளன. இந்த நிலையில் தென்பகுதியில் இருந்து தருவிக்கப்படும் உருளைக் கிழங்கின் விலை சந்தைகளில் அதிகமாக வீழ்ச்சியுற்றுக் காணப்படுகின்றன.

> “தென்பகுதியில் இருந்து தருவிக்கப்படும் உருளைக் கிழங்கின் விலை சந்தைகளில் அதிகமாக வீழ்ச்சியுற்றுக் காணப்படுகின்றன.”

இதன் காரணத்தால் குடாநாட்டு செய்கையாளர்கள் அறுவடை செய்யும் உருளைக்கிழங்கைச் சந்தைப்படுத்த முடியாது பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் உருளைக்கிழங்குக்கான இறக்குமதி வரியை அரசு அதிகரிக்க வேண்டும். வரியை அதிகரித்தால் செய்கையாளர்கள் நன்மையடைவார்கள்.
அதனைவிட எமது குடாநாட்டு உருளைக்கிழங்கை சதோச மற்றும் கார்கில்ஸ் ஆகிய விற்பனை நிறுவனங்கள் மொத்தமாகக் கொள்வனவு செய்வதற்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.- என்றார். (ற-ஐ-17)

## கடலுணவுகளின் விலை குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.9
யாழ்.குடாநாட்டில் கடலுணவுகளின் விலைகளின் அதிகரிப்பால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
த்ற்போதைய காலநிலை மாற்றத்தால் கடலுணவுகளின் பிடிபாடு மிகமிகக் குறைந்து காணப்படுவதாலேயே அவற்றுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதோடு விலையும் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
நகரை அண்டிய குருநகர், பாஷையூர், நாவாந்துறை, கொட்டடி போன்ற மீன் சந்தைகளில் கடலுணவுகளின் வருகை குறைந்தே காணப்படுகின்றது.
இந்தச் சந்தைகளில், நண்டு, கணவாய், இறால் போன்றவற்றின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.
குறிப்பாக தீவுப்பகுதி மற்றும் வடமராட்சி பிரதேசங்களில் இருந்து யாழ்.நகர் மீன் சந்தைக்கு கடலுணவுகளின் வருகை தற்போது குறைவாகவே காணப்படுகின்றது. இதேசமயம் யாழ்.குடாநாட்டில் இருந்து தென்பகுதிக்கு கடலுணவுகளின் ஏற்றுமதி அதிகரித்துள்ளது.
தென்பகுதியில் இருந்து வரும் கூலர் வாகனங்கள் இங்குள்ள கடல் உணவுகளைக் கூடுதலாக எடுத்துச் செல்கின்றன. இதுவும் கடலுணவுகளுக்கு இங்கே பற்றாக்குறை ஏற்படக் காரணம் என்று மீனவர்கள் தெரிவித்தனர்.(ற-ஐ-17)

## யாழ். நவீன சந்தைக் கட்டட மலசலகூடம் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.9
யாழ்.நவீன சந்தைக் கட்டடத்தில் உள்ள மலசலகூடம்மக்களின்பாவனைக்காக மீண்டும் திறக்கப் பட்டுள்ளது.
மலசலகூடத்தின் குழிகள் மலக்கழிவால் நிரம்பியதை அடுத்து மலசலகூடம் மாநகராட்சி மன்றத்தால் பூட்டப்பட்டது. தற்போது மலசலகூடத்தில் நிரம்பிய மலக்கழிவுகள் அகற்றப்பட்டு குழிகள் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.
இதனை அடுத்து இந்தப் பொது மலசலகூடம் மக்கள் பயன்பாட்டுக்கு மீண் டும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
இந்த மலசலகூடத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது. இதன் காரணத்தால் மலக்குழியில் மலக்கழிவுகள் அடிக்கடி தேங்குகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ற-ஐ-17)

## பெருந் திருவிழா

சாவகச்சேரி,பெப்.9
சாவகச்சேரி சங்கத்தானை ஸ்ரீமீனாட்சி அம்பாள் ஆலய பெருந் திருவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன.
கொடியேற்றத்துக்கான கொடிச்சேலையை சங்கத்தானை இத்தியடி கிராம மக்கள் இத்தியடி விநாயகர் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக எடுத்து வந்து ஆலயத்தில் கையளித்த பின்னர் கொடியேற்றம் இடம்பெறும்.
ஆலயத்திற்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்று மாலை வேட்டைத் திருவிழா இடம் பெறும். (ற-ஐ-9)

## ஏழு தடவைகள் கைதாகியும் கசிப்பு விற்பதை நிறுத்தாத பெண்

### 8 ஆவது முறையாகவும் கைதானர்

யாழ்ப்பாணம். பெப். 9
7 தடவைகள் கசிப்பு விற்ற குற்றச்சாட்டில்முன்னர்கைதுசெய்யப்பட்டிருந்த பெண் ஒருவர் அதே குற்றச்சாட்டில்மீண்டும்கைதுசெய்யப் பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். துன்னாலை, கோயில்சந்தைப்பகுதியில் 3 போத்தல் கசிப்புடன் அதே இடத்தைச் சேர்ந்த 35 வயதுடைய குறித்த பெண் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று நெல்லியடிப்பொலிஸார்தெரிவித்தனர்.
காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய விசேடகுற்றத்தடுப்பு பிரிவின் பொலிஸ் அதிகாரிகள், மேற்கொண்ட சோதனையின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதான பெண் இதற்கு முன்னர் 7 தடவைகள் கசிப்பு விற்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைதாகியிருந்தார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-4,107)

## வெவ்வேறு விபத்துக்களில் இருவர் காயம்

சாவகச்சேரி,பெப்.9
வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிளொன்று பயணிகளை இறக்கிக் கொண்டிருந்த இ.போ.ச பஸ்ஸூடன் மோதியதில் மோட்டார்சைக்கிளோட்டிகாயமடைந்தார்.
எழுதுமட்டுவாழ் ஆலயத்துக்குச் சென்று திரும்பிய மீசாலை வடக்கைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் மிருசுவில் சந்தியில் வீதியோரத்தில் பயணிகளை இறக்கிக் கொண்டிருந்த பஸ்ஸூடன் மோதிக் காயமடைந்தார்.
அதேவேளை மீசாலை கிழக்கைச் சேர்ந்த முதியவர் ஒருவர் ஆலய தரிசனத்துக்காக சைக்கிளில் சென்ற வேளையில் வீதியோரத்தில் கட்டப் பட்டிருந்த ஆடு குறுக்கே ஓடியதில் அதன் கயிறு சைக்கிள் சில்லுக்குள் சிக்கியதில் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார்.
காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற-ஐ-9)

## சின்னம் சூட்டும் விழா

யாழ்ப்பாணம்,பெப்.9
அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் சின்னம் சூட்டும் விழா இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 11மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி மரிய ஜீவந்தி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அச்சுவேலி லங்கா மாதா மடத் தலைவி எலிசபெத் செபஸ்ரியன் கலந்து கொள்ளவுள்ளார்.(ற-ஐ-422)

# சமூக, கல்வி சார் நடவடிக்கைகளில் சாவ. வணிகர் மன்றம் முன்மாதிரி

## யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

சாவகச்சேரி,பெப்.9
ஒரு அமைப்பின் செயற்பாடு என்பது தனிப்பட்ட வியாபார செயற்பாடுகளுக்கு அப்பால் சமூக மற்றும் கல்விசார் நடவடிக்கைகளில் ஈடுபட்டு பலரின் எதிர் கால வளர்ச்சிக்கு வித்திடுவது என்பது சாதாரண விடயமல்ல. அவ்வாறு ஒரு சமூக மற்றும் மாணவர்களின் கல்விசார் நடவடிக்கைகளில் அக்கறையுடன் செயற்படும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்துக்கு நன்றிகள். - இவ்வாறு யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்தார்.
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 37 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது-
19 ஆயிரம் குடும்பங்களைக் கொண்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் 13 ஆயிரம் மாணவர்களில் வறுமை நிலையிலுள்ள 100மாணவர்களைத்தெரிந்தெடுத்து, அவர்களின் கல்வி வளர்ச்சிக்காக நிதி வழங்குவது இங்குள்ள அனைத்து வணிகர்களின் பெருந்தன்மையான சமூக ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றது.
இந்த மாணவர்களில் யாழ்.பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் உள்ளடங்குவது, எதிர்காலத்தில் இவ்வாறான உதவிகளைப் பெறும் மாணவர்கள் இந்தப் பிரதேசத்தில் சமூக மனப்பான்மையுடன் சேவை செய்வதற்கு முன்னுதாரணமாக அமையும் என்பதில் ஐயமில்லை.



மன்றத்தின் சேவைகள் தொடர்ந்து பிரதேச மாணவர்கள் மற்றும் சமூக நலன்களில் அக்கறையுடன் முன்னெடுக்கப்படும் என நம்புகின்றேன். இதற்கு அனைத்து வணிகர்களின் பங்களிப்பு நிறையக் கிடைக்கும் என நினைக்கிறேன். எதிர்காலத்தில் சிறந்த ஒரு கல்விச் சமூகத்தை தென்மராட்சியில் உரு வாக்க சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் ஊன்றுகோலாக இருக்கும் - என்றார்.
நிகழ்வில் மன்றத்தின் 17 கல்வி அபிவிருத்தி நிதியத்திலிருந்து யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவி உட்பட 97 பேருக்கு கல்வி அபிவிருத்தி நிதிவழங்கப்பட்டன.
அத்துடன் மாதாந்த கல்வி அபிவிருத்தி நிதியாக 17 மாணவர்களுக்குமாதாந்த கல்வி அபிவிருத்தி நிதி அந்தந்த நிதிய வைப்பாளர்களால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.
மன்றின் ஊனமுற்றோர் மற்றும் விதவை நிதியங்களிலிருந்து மூவருக்கு உதவு தொகைகளும் வழங்கப்பட்டன.
அத்துடன் மன்றத்தில் அங்கத்துவம் பெற்ற 25 வருட சேவையைப் பூர்த்தி செய்த 16 வர்த்தகர்களுக்கு வெள்ளி விழா நாயகன் கேடயங்கள் வழங்கப்பட்டன.
மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், உதவிப் பிரதேச செயலர் செல்வி ர.நவரத்தினம், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.ரகுநாதன், மன்றத்தின் ஆரம்பகர்த்தா சி.நவரத்தினம், சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் கா.சண்முகதாசன் பாடசாலைகளின் அதிபர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். ற-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியமராத மக்களுக்கு காணி வழங்கத் தீர்மானம்

## முல்லை. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, பெப்.9

முல்லைத்தீவு மாவட்டத்தில் இது வரை மீளக் குடியமராத தமிழ், முஸ்லிம் மக்களுக்கு காணிகளை வழங்கி அவர்களை மீள்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவமோகன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவுமாவட்டத்தில்தனிப்பட்ட முறையில் காடழிப்பில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இது வரை மீள குடியமராத தமிழ், முஸ்லிம் மக்களுக்கு காணிகள் வழங்கி அவர்களை மீள்குடியமர்த்துவதன் முதற்கட்ட நடவடிக்கையாக முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களால் மீள்குடியேற்றக் குழு நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழு நேற்று முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிர தேச செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியது.

அதில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

தமிழ், முஸ்லிம் மீள்குடியேற்றத்தில் இடம் கிடைக்காத அனைத்து மக்களுக்குமான ஓர் இறுதித்தீர்வு எட்டப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் நாங்கள் முதலாவதாக முல்லைத்தீவு மாவட்ட தமிழ், முஸ்லிம் மக்களுக்கான மீள்குடியேற்றத்துக்கான ஒழுங்குகளை செய்து கொடுப்பதாக தீர்மானித்துள்ளோம்.

இங்கு நடைபெறும் காடழிப்பு என்னும் விடயத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. தனிப்பட்ட முறையில் யாராவது காடழிப்பில் ஈடுபட்டால் அவர்களுக்கு எதிரான உடன் நடவடிக்கைகள் எடுக்க நாமும் முன்னிற்போம். மூன்றாவதாக எமது முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழா வெளிமாவட்ட எவருக்கும் முல்லைத் தீவில் உள்ள அரச காணிகளோ அல்லது அரச வீட்டுத்திட்டங்களோ வழங்குவதில்லை என்ற முடிவை எடுத்துள்ளோம்.- என்றார்.

அங்கு கருத்துத் தெரிவித்த இணைத் தலைவர்களால் நியமிக்கப்பட்ட குழுவின் பிரதிநிதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான சாந்தி சிறிஸ்கந்த ராஜா, குமாரபுரம் பகுதியில் காடழிப்பு இடம்பெறுகின்றது என்று பொதுமக்களிடமும் அதிருப்தி இருந்து வருகின்றது. அதையடுத்து மக்கள் பிரதிநிதிகளும், அரசஅதிகாரிகளும் இணைந்து நடத்திய கூட்டத்திலே கரைதுறைப் பற்று பிரதேச செயலாளரால் கூழாமுறிப்பு பகுதியையும், குமாரபுரம் பகுதியை யும் வன வளத்திணைக்களத்திடம் இருந்து விடுவித்துத் தரப்படவேண் டும் என்ற கோரிக்கை முன்வைக் கப்பட்டது.

குறித்த காணியை விடுவிப்பதற்கு வனவளத் திணைக்களத்தினருக்கு பிரதேச செயலகத்தால் 3 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டி இருந்தது. இது தொடர்பாக அரச அதிபர் மீள்குடியேற்ற அமைச்சருடன் தொடர்பு கொண்டு கேட்டிருந்தார். இதனை அடுத்து அந்தப் பணத்தைக் கொடுத்து வனவளத் திணைக்களத்திடம் இருந்து காணி விடுவிக்கப்படும் என்று அமைச்சர் உறுதியளித்தார்.

குறித்த காணி தமிழ் முஸ்லிம் மக்களுக்கு வெளிப்படையாக பகிர்ந்தளிக்கப்பட முடிவெடுக்கப்பட்டுள்ளது.- என்றார்.

இந்த ஒன்றுகூடலில் முல்லைத்தீவு மாவட்ட இணைத்தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன், காதர் மஸ்தான் மற்றும் சாந்தி சிறிஸ்கந்தராஜா மற்றும் வடமாகாணசபைஉறுப்பினர்களான து.ரவிகரன். கமலேஸ்வரன், ஜெனோபர் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ற-ஐ-21,ரி7)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியான தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைமைச் செயலகம் நேற்று திருகோணமலை நகரில் கட்சியின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனால் திறந்து வைக்கப்பட்டது. (ற-ஐ-40)

## வன்னி மாவட்ட தொண்டராசிரியர் நாளை கவனவீர்ப்புப் போராட்டம்

கிளிநொச்சி.பெப்.9

> தொண்டராசிரியர்களுடைய நிரந்தர நியமனம் தொடர்பாக 3 ஆவது தடவையாக இடம்பெறும் ஆர்ப்பாட்டம் இது.

தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி வன்னி மாவட்ட தொண்டராசிரியர்கள் நாளைக் காலை 8 மணியளவில் யாழ்ப்பாணத்தில் மாபெரும் கவனவீர்ப்புப்போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளனர் என்று வன்னி மாவட்ட தொண்டராசிரியர் சங்கத் தலைவர் ஜெயராஜா தெரிவித்தார்.

குறித்த போராட்டமானது யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தின் முன் நடத்தப்பட்டு, தொடர்ச்சியாக ஊர்வலமாக வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் வரை சென்று அங்கும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதுகுறித்துச் சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வன்னி மாவட்ட தொண்டராசிரியர் களுடைய நிரந்தர நியமனம் தொடர்பாக 3 ஆவது தடவையாக இடம்பெறும் ஆர்ப்பாட்டம் இது. ஒவ்வொரு முறையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் போதும் எமக்கான உறுதியான முடிவுகள் எட்டப்படுவதில்லை. எனவே இந்த முறை உறுதியான முடிவுகள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் கடுமையாக குறித்த போராட்டத்தை முன்னெடுக்க உள்ளோம்.

எமது போராட்டத்துக்கான முடிவுகள்எட்டப்படவில்லை என்றால், எமது நியமனம் தொடர்பாக வடக்கில் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்போம் நாளை இடம்பெறும் குறித்த போராட்டத்தில்கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், துணுக்காய், மடு, வவுனியா வடக்கு மற்றும் வவுனியா தெற்கு ஆகிய வலயங்களை சேர்ந்த தொண்டராசிரியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

குறித்த வலயங்களில் தொண்டராசியரியர்களாக கடமையாற்றும் ஆசிரியர்கள் நாளை இடம்பெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில் தவறாது கலந்து கொள்ள வேண்டும். தவறுவர்களுக்கான நியமனம் தொடர்பில் தொண்டராசிரியர் சங்கம் பொறுப்பு ஏற்காது- என்றார். (ற-ஐ-21)

## புதுக்குடியிருப்பில் பண்பாட்டுப் பெருவிழா

முல்லைத்தீவு.பெப்.9

புதுக்குடியிருப்பு பிரதேச பண்பாட்டுப் பேரவை நடத்தும் புதுக்குடியிருப்பு பிரதேச பண்பாட்டுப் பெருவிழா இன்று செவ்வாய்க் கிழமைபிற்பகல்2மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மா நாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் செ. பிரணவநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொள்வார்.

புதுக்குடியிருப்பு பண்பாட்டுப் பேரவையால் வருடந் தோறும் வெளியீடு செய்யப்படும் 'புதுவையாள்' நூல் வெளியீடும் இதன் போது இடம்பெறும். இந்த நூல்பற்றிய ஆய்வுரையை துணுக்காய் பிரதேச செயலாளர்சி.குணபாலன்வழங்குவார். தமிழ் மக்களின் பாண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தும் வகையில் பிரதேச எழுத்தாளர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள் பலவற்றை 'புதுவையாள்' உள்ளடக்கி உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-ஐ-ரி7)



மன்னார் நானாட்டான் தூய ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் 66 மாணவ மாணவிகளுக்கு உறுதி பூசுதல் எனும் திருவருட்சாதனம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. ஓய்வு பெற்ற ஆயர் அதி வணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் நானாட்டான் பங்குத்தந்தை அருட் தந்தை அருள் ராஜ் குரூஸ் மற்றும் அருட் தந்தை நெவில் ஆகியோர் இணைந்து திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர். நானாட்டான் பங்கைச் சேர்ந்த 66 மாணவ மாணவிகளுக்கு உறுதி பூசுதல் எனும் திருவருட்சாதனம் வழங்கப்பட்டன. (ற-ஐ-56)

# கிளிநொச்சியில் இந்த ஆண்டு 4 ஆயிரம் ஏக்கரில் இடைப்போகம்

கிளிநொச்சி.பெப்.9

கிளிநொச்சி இரணைமடு நீர்ப்பாசனத் திணைக்களத்தால், இந்த ஆண்டுசிறுபோகத்துக்குப் பதிலாக 4 ஆயிரம் ஏக்கரில் இடைப்போகம்செய்யத்தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி மாவட்டநீர்ப்பாசனத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் சுதாகரன் தெரிவித்தார்.

தற்போது இடம்பெற்றுவரும் காலபோகத்தினுடைய அறுவடைகள் நிறைவடைந்த உடனேயே தாமதமின்றிக் குறித்த இடைப் போகத்தை விவசாயிகள் ஆரம்பிக்க வேண்டும். அப்போது தான் மழைக்குமுன்னர் இடைப்போகத்தின் பயனை அனுபவிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் செய்யப்படுகின்ற சிறுபோகப் பயிர்ச்செய்கை, தற்போது குளத்தில் மேற்கொள்ளப் பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிறுத்தப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுடைய ஒத்துழைப்புக்கு அமைவாக கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம், மாவட்ட செயலகம், கமக்கார அமைப் புக்கள் என்பவை ஒன்று கூடிக் கலந்தாலோசித்தே இரணைமடுக்குளத்தின் அபிவிருத்திக்காக இவ்வாண்டுக்கான சிறுபோகத்தை நிறுத்துவதற்கான முடிவு எட்டப்பட்டது.

இந்த நிலையில் விவசாயிகள் குறித்த காலப்பகுதியில் சிரமங்களை எதிர்கொள்ளக் கூடாது என்ற நோக்கத்துக்காக தற்போது இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தில் 4 ஆயிரம் ஏக்கரில் இடைப் போகம் செய்யத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இடைப்போகமானது ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கர் அளவிலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளது. சிறு விவசாயிகளே இதில் பங்கெடுப்பார்கள். அவர்களுக்கான தானியங்கள் இரணைமடுநீர்ப்பாசனத் திட்டத்தினாலேயே வழங்கப்படுகின்றன. சணல், உளுந்து, பயறு போன்ற தானியங்களே நீர்ப்பாசனத் திணைக்களத்தால் குறித்த இடைப்போகத்துக்காக வழங்கப்படுகின்றது.

சிறுபோகம்செய்ய முடியவில்லை என்றும், அதனால் பெரிதும் பாதிப்பு உள்ளது எனவும் உணரும் விவசாயிகளுக்கான சிறிய மாற்றுத் திட்டமாகவே இந்த இடைப்போகம் அமையும்.

இரணைமடு குளத்தில் இருந்து நீர் கொடுக்க முடியாமையால் வயல்களில் இருக்கும் ஈரத் தன்மைக்கு ஏற்றவாறு குறித்த பயிர்கள் வளரும். இதனாலே காலபோகத்தைத் தொடர்ந்து குறித்த பயிர்களை விதைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது. - என்றார்.

அத்தோடுகடந்தமாதம் இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக தெரிவிக்கப்பட்ட போது, மாவட்ட அரச அதிபருக்கு இது தெரியாது எனவும், விவசாயம் தொடர்பான முடிவுகளை மாவட்ட செயலகத்துடனும் இணைந்து மேற்கொள்ளுமாறும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக திணைக்கள உதவிப் பணிப்பாளரைக் கேட்ட போது, இடைப்போகம் தொடர்பாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. பலர் இதை சிறுபோகமாகக் கருதுகின்றனர். இது சிறுபோகம் அல்ல, இடைப்போகம். இதற்குக் குளங்களில் இருந்து நீர்ப்பாய்ச்ச வேண்டிய அவசியம் இல்லை. வயல்களில் ஏற்கனவே இருக்கும் ஈரலிப்புடனேயே பயிர்கள் வளரும் என்றார். (ற-ஐ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைதீவில் கொட்டப்படும் மலக்கழிவால் தொற்று நோய்

## மீனவர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம். பெப்.9
காக்கைதீவு கடற்கரையோரமாக தினந்தினம் கொட்டப்படும் மலக்கழிவுகளால் கடல்வளம் மாசடைந்து வருவதுடன் சொறி, சிரங்கு நோய்களால் பாதிக்கப்பட்டு தொழிலுக்குச் செல்லமுடியாதுள்ளது என்று மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
அழிந்துபோகும் கடல் வளத்தைப் பாதுகாக்கும் நோக்குடனும், மீனவர்களின் சுகாதாரத்தையும், வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொண்டும் மலக் கழிவுகள் கொட்டுவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
வலி.தென்மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடை பெற்றது.
இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள், திண்மக்கழிவு காக்கைதீவு கடற்பிரதேசத்தில் கொட்டப்படுவதால் ஏற்படும் ஆபத்துக் குறித்தும் அதனால் தங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்தும் சுட்டிக்காட்டினர்.

> “மனித குலத்துக்கும் கடல் வளத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் இந்த விடயம் குறித்து விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்”

காக்கை தீவு கடற்பரப்பு நீரோட்டமில்லாத ஆழம் குறைந்த நீரேரியாகும். இந்தக் கடற்பரப்பில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இறால், நண்டு போன்ற கடலுணவுகள் உற்பத்தியாகின்றன.
தொழிலாளர்கள் இந்தக் கடற்பரப்பில் இறங்கித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் பகுதியில் மலக்கழிவுகள் கொட்டப்படுவதால் கடல்வளம் மாசடைவதுடன் மீனவர்களும் சொறி, சிரங்கு போன்ற நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர்.
அதனால் தொடர்ந்தும் தொழில் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். இந்தப் பிரதேசத்தில் கொட்டப்படும் மலக்கழிவுகளில் 40 வீதம் பக்ரீரியாக்கள் இருக்கின்றன என்று யாழ்.பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.
மனிதகுலத்துக்கும்கடல்வளத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் இந்த விடயம் குறித்து விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்று அவர்கள் இணைத்தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-115)

### பொதுக்கூட்டம்

சாவகச்சேரி,பெப்.9
சாவகச்சேரி கோயிற் குடியிருப்பு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி மாலை 4 மணிக்கு நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.
நிலையத் தலைவர் க.தர்சன் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்துக்கு பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகரசபை செயலாளர் கா.சண்முகதாசன் கலந்து கொள்ளவுள்ளார்.
இதன் போது நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும். (ற-ஐ-9)

### மகா கும்பாபிசேகம்

வவுனியா,பெப்.9
வவுனியா ஸ்ரீகந்தசுவாமி ஆலய பிரதிஷ்ட மகாகும்பாபிசேகம் நாளை நடைபெறவுள்ளது. இந்த ஆலயத்தில் இராஜகோபுரம் அமைக்கப்பட்டு சித்திர வர்ண வேலைப்பாடுகளுடன்கூடிய வேலைகள் முடிவடைந்தநிலையில் இன்று எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவமும், நாளை கும்பாபிசேகமும் இடம் பெறவுள்ளதாக ஆலயநிர்வாக சபையினர் தெரிவித்தனர். (ற-ஐ-402)

### பட்டா – ரயில் மருதனார்மடத்தில் விபத்து

யாழ்ப்பாணம். பெப். 9
மருதனார் மடத்தில் மரக்கறிகளை ஏற்றி வந்த பட்டா வாகனம் ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் பட்டா வாகனம் கடுமையாகச் சேதமடைந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை 4.40 அளவில் இடம்பெற்றுள்ளது.
மதவாச்சிபகுதியில்இருந்து மருதனார்மட சந்தைக்கு மரக்கறிகள் ஏற்றி வந்த வாகனமே விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
ரயில் வருவது தெரிந்தும் காவலாளிரயில்கடவையை மூட மறந்தமையே விபத்துக்கு காரணம் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ற-107)




கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கரணவாய் மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்கான கிராமியசெயலகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. கரவெட்டிப் பிரதேசசெயலர் எஸ்.சிவஸ்ரீ தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.(ற-ஐ-108)

## சாவகச்சேரிச் சந்தையில் பத்து வீத கழிவு நிறுத்தம்

சாவகச்சேரி, பெப்.9
சாவகச்சேரி பொதுச் சந்தையில் பொருள்களுக்கு 10 வீத கழிவு வழங்கும் நடவடிக்கை முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது என்று நகர சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.
சந்தைக்கு உற்பத்தியாளர்களால் கொண்டுவரப்படும் பொருள்களுக்கு வியாபாரிகள் பத்து கிலோவுக்கு ஒரு கிலோ வீதம் கழிவு பெறும் நடவடிக்கைநீண்டகாலமாக இடம்பெற்று வந்தது.
உற்பத்தியாளர்கள் தெரிவித்த கருத்துக்களையடுத்து மாகாண விவசாய அமைச்சரின் முன்னறிவிப்பின் பயனாக வடமாகாண சபையில் உற்பத்தியாளர்களிடம் பெறப்படும் கழிவு முறை நீக்கப்படல் வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இதனையடுத்து சாவகச்சேரி நகர சபையால் நடத்தப்படும் பொதுச் சந்தையில் வியாபாரிகள் கழிவு பெறும் நடைமுறை நிறுத்தப்பட்டுள்ளது என்றும், உற்பத்தியாளர்கள் தரமான பொருள்களை விற்பனைக்கு கொண்டு வர வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
மரவள்ளிக் கிழங்கு, வெங்காயம் வாழை போன்ற பொருள்கள் கொண்டு வருவோர் கலப்பின்றி தரமான பொருள்களை சந்தைக்கு கொண்டு வர வேண்டும் என்றும் நகர சபைச்செயலாளர் கா.சண்முகதாசன் அறிவித்துள்ளார். (ற-ஐ-9)

### கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கற்பகம் விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், பெப். 9
கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கற்பகம் விற்பனை நிலையம் ஒன்றைத் திறப்பதற்கு பனை அபிவிருத்திச் சபைநடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.
இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வசதி கருதி கற்பகம் விற்பனை நிலையம் ஒன்றை விமான நிலையத்தில் திறந்து வைப்பதற்கும் சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.
விமான நிலையத்தில் அமைக்கப்படும் கற்பகம் விற்பனைக் கூடத்தின் ஊடாக சுற்றுலாப் பயணிகள் மற்றும் வெளிநாட் டவர்கள் குடா நாட்டு பனம் உற்பத்திப் பொருள்களை இலகு வாகப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ற-ஐ-17)

## வடமாகாணத்திலுள்ள வீதிகளுக்கு எல்லையிடும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.9
வடமாகாணத்தில் உள்ள சகல உள்ளூராட்சிச் சபைகளின் தொழில்நுட்ப அலுவலர்கள் ஒருங்கிணைந்த அடிப்படையில் வீதிகளினதும் – ஒழுங்கைகளினதும் எல்லைகளை 'நிரந்தர அடையாளங்கள்' மூலம் அடையாளம் இடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இது தொடர்பாக எதிர்வரும் பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் முதற்கட்டப் பணிகளைப் பூர்த்தி செய்து உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அறிக்கையிட வேண்டும் என்றும் – பெப்ரவரி 16 ஆம் திகதி முதல் மார்ச் 15 வரை சகல வீதிகளினதும், பாதைகளினதும் வரைபடங்கள் அதற்குரித்தான சகல தகுதி விதிகளுடன் தயாரிக்க வேண்டும் என்றும் – அறிவுறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.
எதிர்வரும் மார்ச் 16 ஆம் திகதி முதல் மார்ச் 23 ஆம் திகதிக்குள் சகல வீதிகளினதும், பாதைகளினதும் ஆரம்பம், முடிவு, நீளம், அகலம், வீதியில் உள்ள வாய்க்கால்கள், மதகு, சாய்வு என்பன உள்ளிட்ட நிரல் அடையாளமிட்ட அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். இதற்கமைவாக சகல முன்னேற்ற விவரங்கள், அறிக்கைகளை வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு சபை செயலாளர்கள் அறிக்கையிட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளதை அடுத்தே இந்த வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ற-ஐ-50)

## பத்தாயிரம் சாரணர்களுடன் சாரணர் பயிற்சிப் பாசறை

### யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது

யாழ்ப்பாணம், பெப்.9
யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கும் சாரணர் பயிற்சிப் பாசறையில் நாட்டின் சகல மாவட்டங்களில் இருந்தும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட சாரணர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.
யாழ்.மாநகராட்சி மன்ற வளாகம், யாழ்.மத்திய கல்லூரி மைதானம், முற்றவெளி போன்ற இடங்களில் இந்தப் பாசறை பரந்தளவில் நடைபெறவுள்ளது.
பாசறையில் கலந்துகொள்ளும் சாரணர்களின் குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை யாழ்.மாநகராட்சி மன்றம் மேற்கொள்ளவுள்ளது.
குறிப்பாக சாரணர்களின் பயன்பாட்டுக்கான 200 வரையிலான தற்காலிக மலசலகூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மாநகராட்சி மன்ற வளாகத்துக்கு அருகிலும் மற்றும் திறந்த வெளி வளாகத்திலும் இந்தத் தற்காலிக மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.
அதனைவிட சாரணர்களின் தண்ணீர் பயன்பாட்டுக்காக ஐந்து குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன.
முற்றவெளியில் மூன்று குழாய்க் கிணறுகளும், மாநகராட்சி மன்ற வளாகத்தில் ஒரு குழாய்க் கிணறும், திறந்தவெளி அரங்கில் ஒரு குழாய்க் கிணறும் அமைக்கப்பட்டுள்ளன. (ற-ஐ-17)

## பாதுகாப்பற்ற ரயில் கடவையால் வீமன்காமம் மக்கள் அச்சத்தில்

யாழ்ப்பாணம், பெப். 9
தெல்லிப்பழை – வீமன்காமம் வீதியில் உள்ள ரயில் கடவை பாதுகாப்பற்ற கடவையாக உள்ளது. அதனால் அச்சத்துடனேயே அதனூடாகப் பயணிக்க வேண்டியுள்ளது என்று தெரிவித்த பொதுமக்கள் – அங்கு பாதுகாப்புக் கடவை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.
மாவிட்டபுரம் ரயில் நிலையத்துக்கு அருகில் புகையிரத கடவையின் ஊடாக பளை, வீமன்காமம், தையிட்டி பகுதிமக்கள் பயணிக்க வேண்டியுள்ளது. அத்துடன் 50 மீற்றர் தொலைவில் வீமன்காமம் வித்தியாலயம் காணப்படுகிறது.
பொதுமக்கள், மற்றும் மாணவர்கள் எனப்பலரும் அதிகம் உபயோகிக்கும் இவ் வீதியில் பாதுகாப்பு புகையிரத கடவை இன்மையால் அச்சத்துடனேயே பயணம் செய்ய வேண்டியுள்ளது. இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்த மக்களுடைய காணிகள் தற்போது விடுவிக்கப்பட்டு வரும் நிலையில், காணிகளைப் பார்வையிடச் செல்லும் மக்கள் இவ் வீமன்காமம் வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.
இனி வரும் காலங்களில் இங்கு மக்கள் படிப்படியாக மீள்குடியேறும் சாத்தியங்கள் காணப்படுவதால் இந்த வீமன்காமம் வீதியையே மக்கள் பயன்படுத்துவர். விடுவிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்கு குறித்த வீதி ஒன்றே அங்கு காணப்படுகின்றது. இவற்றைக் கருத்தில் கொண்டு பாதுகாப்பற்ற புகையிரத கடவையை பாதுகாப்பான புகையிரதக் கடவை யாக மாற்றவேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ற-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை வங்கி, மின்சார சபையில் 5 ஆயிரம்ஊழியர் வெற்றிடங்கள்

கொழும்பு, பெப்.9

இலங்கைவங்கிமற்றும்இலங்கை மின்சாரசபை ஆகியவற்றில் தற்போது 5 ஆயிரம் வரையிலான ஊழியர் வெற்றிடங்கள் நிலவுவதாகத் தெரியவருகின்றது.

குறித்த இரு நிறுவனங்களாலும் நாடாளுமன்றப் பொது விவகாரம் தொடர்பான குழுவான கோப் - குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகள்மூலமே குறித்த தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் 3ஆயிரம் வரையான ஊழியர் வெற்றிடங்கள் இலங்கை மின்சார சபையிலும், 2ஆயிரம் வரையில் வெற்றிடங்கள் இலங்கை வங்கியிலும் நிலவுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த நிறுவனங்களது பணிப்பாளர் சபைகள் திறைசேரியுடன் கலந்தாலோசித்து அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்று குறித்த ஊழியர் வெற்றிடங்களை நிரப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாக அரசஉயர்மட்டத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (தி)

# பிணை வழுங்க முடியாத குற்றங்கள் ஷிரந்தியும் மகன்மாரும் இழைத்தனர்

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



கொழும்பு, பெப்.9

ஷிரந்தி ராஜபக்ச மற்றும் அவரது இரு மகன்மார் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது பாரதூரமான விடயங்கள் தெரியவந்துள்ளன. அந்தக் குற்றங்களுக்குப் பிணைகூட வழங்க முடியாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யோசித ராஜபக்சவின் கைது விவகாரம்தொடர்பாக கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யோசிதவைக் கைதுசெய்த நிதிக் குற்றங்கள் தொடர்பான பொலிஸ் பிரிவை கலைக்கவேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் தெரிவித்த கருத்துக் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியினர் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இந்தக் கருத்தை அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வெளியிட்டிருந்தார்,

போக்குவரத்து அமைச்சர் இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியுடன் ஆலோசிக்காமல் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டமை தொடர்பில், சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இதனால், கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர்களிடையே வாக்குவாதம் மூண்டுள்ளது.

இந்த வாக்குவாதத்தைத் தடுப்பதற்காகத் தலையிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பிரிட்டனில் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு எவ்வாறு கடைப் பிடிக்கப்படுகின்றது என்பதை நினைவுபடுத்தியுள்ளதுடன், அமைச்சரவை ஒருவிடயம் குறித்து ஆராய்ந்து தீர்மானத்தை எடுத்ததும் அதனைக் கடைப் பிடிக்கவேண்டியது அமைச்சர்களின் கடமை. அதற்கு மாறான கருத்தை அவர்கள் தெரிவிக்க விரும்பினால் அவர்கள் தங்கள் பதவியைக் துறந்துவிட்டு தெரிவிக்கலாம் என்றும் கூறியுள்ளார்.

இதையடுத்து, கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நிதிக்குற்றங்கள் தொடர்பிலான பொலிஸ் பிரிவின் விசாரணைகளில் ஆழமும் உண்மையும் உள்ளது. ஷிரந்தி ராஜபக்ச மற்றும் அவரது இரு மகன்மார் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது பாரதூரமான விடயங்கள் தெரியவந்துள்ளன.

அந்தக் குற்றங்களுக்குப் பிணைகூட வழங்கமுடியாது என்று தெரிவித்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது. (த-சி)



# படையினரைக் காக்க கையெழுத்து வேட்டை

### நேற்று ஆரம்பித்து வைத்தார் மகிந்த

கொழும்பு, பெப் 9

படையினரைப் பாதுகாப்பதற்குப் பத்து லட்சம் கையெழுத்து பெறும் நடவடிக்கை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நீதிமன்றம் வேண்டாம், இராணுவத்தினர் வேட்டையாடப்படுவதைத் தடைசெய்வோம் என்ற தொனிப்பொருளில் நாடு முழுவதும் நடைபெறவுள்ள இந்தக் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை நேற்றுப் புறக்கோட்டை சம்புத்தாலோக விஹாரையிலிருந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் முதலாவதாக மகிந்த கையெழுத்திட்டு ஆரம்பித்து வைத்தார்.

அத்தோடு, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க, முருத்தொட்டுவே ஆனந்த தேரர், பெங்கமுவே நாலக தேரர் மேலும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இராணுவத்தினர், அவர்களின் உறவினர்கள் எனப் பலர் அங்கு பெருமளவில் திரண்டிருந்தனர்.

இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள விசாரணைக்குச் சர்வதேச நீதிபதிகள் உள்ளடங்கலான நீதிமன்றம் அமைக்கப்படவேண்டுமென ஜெனிவா தீர்மானத்தில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பரிந்துரை செய்துள்ளார். தற்போது இலங்கை வந்துள்ள ஐ.நா ஆணையாளர், பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் போர்ப் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களைப் பார்வையிட்டு வரும்வேளையில், இந்தக் கையெழுத்து பெறும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி)

# மனித உரிமைச் சபையூடாக படையினருக்குத் தண்டனை

### அதற்கே அரசு முயற்சிக்கின்றது என்கிறார் கோத்தபாய ராஜபக்ச



கொழும்பு, பெப். 9

நாட்டுக்காகக் கடின உழைப்பை வழங்கிய தம்மைச் சிறையில் அடைத்தாலும் பரவாயில்லை என்று தெரிவித்துள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, மனித உரிமைகள் சபையினூடாகப் படைவீரர்கள் தண்டிக்கப் படவுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பண்டாரகம பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நாட்டுக்காகவும், படை வீரர்களுக்காகவும் பெரும் அர்ப்பணிப்புடன் கடமையாற்றியிருந்தார். மிகப் பெரிய அர்ப்பணிப்புடன் போர் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டது. தற்போது படைவீரர்களை சிறையில் அடைத்து, சிறையில் உள்ளவர்கள் விடுதலையாகின் றனர்.

இவ்வாறான ஓர் நிலைமை ஏற்படும் என்று தேர்தல் காலத்தின்போது நான் குறிப்பிட்டிருந்தேன். அதனைத் துரதிஷ்டவசமாகப் பலர் நம்பவில்லை. மனித உரிமைகள் சபையின் ஊடாகப் படை வீரர்கள் போர்க்குற்ற நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுத் தண்டிக்கப்படவுள்ளனர். பிரபாகரனுக்குத் தேவையானவற்றையே தற்போதைய அரசு செய்து வருகின்றது.

> 30 ஆயிரம் படை வீரர்கள் வரையில் சாவடைந்துள்ளனர். போர் நடத்தியதே பிழை என்பதுபோல இப்போது பேசப்படுகின்றது. வரலாற்றை மறைத்து இளைஞர்களை ஏமாற்றப் பார்க்கின்றனர்.

1980 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் நான் இருந்தேன். எவ்வாறு பயங்கரவாதம் தலைதூக்கியது எவ்வாறு விஸ்தரித்தது என்பது பற்றிய விவரங்கள் எனக்கு நன்றாகத் தெரியும்.

இலங்கையில் ஆட்சிக்கு வந்த பல அரசுகள் போரை முன்னெடுத்தன. இதனால் 30 ஆயிரம் படை வீரர்கள் வரையில் சாவடைந்துள்ளனர்.

போர் நடத்தியதே பிழை என்பதுபோல இப்போது பேசப்படுகின்றது. வரலாற்றை மறைத்து இளைஞர்களை ஏமாற்றப் பார்க்கின்றனர். இதனை ஏற்றுக் கொள்ள முடியாது - என்றார் கோத்தா. (த-5)

## திருட்டு மின்சாரம் பெற்ற 2,704 பேர் 2015 இல் கைது

### 17 கோடி ரூபா அபராதம் செலுத்தினர்

கொழும்பு, பெப்.9

கடந்த 2015 ஆம் ஆண்டில் சட்டவிரோதமாக திருட்டு மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டில் 2,704 பேரிடமிருந்து 17 கோடிக்கு மேற்பட்ட தொகை அபராதமாக அறவிடப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் விசேட விசாரணைக் குழு தெரிவித்துள்ளது.

சட்டபூர்வமற்ற விதத்தில் மின்சாரம்பெறுவோரைத் தேடிக்கண்டறியும் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின்போது அவர்கள் மாட்டிக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

சட்ட நடவடிக்கைகள் மூலம் இத்தகையோரிடம் இருந்து அறவிடப்பட்ட 17 கோடியே 39 லட்சம் ரூபாவில், 16 கோடியே 2 லட்சம் ரூபா இலங்கை மின்சார சபைக்கு இலாபமாகக் கிட்டியுள்ளதாகவும் மீதியான ஒரு கோடி 37 லட்சம் ரூபா நீதிமன்றச் செலவாக செலவிடப்பட்டுள்ளதாகவும் குறித்த விசாரணைக்குழு தெரிவித்துள்ளது. (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டமா அதிபர் நியமனத்தில் அமைச்சர்கள் பலர் அழுத்தம்

கொழும்பு, பெப். 9
புதிய சட்ட மா அதிபராகத் தமக்கு நெருக்கமான ஒருவரை நியமிக்க அரசைச் சேர்ந்த பிரபல அமைச்சர்கள் பலர் பகீரதப்பிரயத்தனம் எடுத்து வருவதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
தற்பொழுது பதில் சட்டமா அதிபராகக் கடமையாற்றும் சொலிசிட்டர் ஜெனரல் சுகத கம்லத்தையே சட்டமா அதிபராக்க ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய அமைச்சர் ஒருவர் மும்முரமாகச் செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.
இதேவேளை, சுகத கம்லத்தை விடவும் சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஒருவரைச் சட்டமா அதிபராக்கும் நடவடிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் மற்றுமொரு பிரபல அமைச்சர் ஒருவரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மற்றுமொரு முக்கிய அமைச்சர் ஒருவரும் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
சட்டமா அதிபர் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் தற்பொழுது சொலிசிட்டர் ஜெனரலாகக் கடமையாற்றும் சுகத கம்லத்தே என்பது நீதித்துறையிலுள்ள சிரேஷ்ட உறுப்பினர்களின் கருத்தாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# இந்திய மீனவர் படகுகள் கையளிக்கப்படமாட்டா

### அமைச்சர் மகிந்த அமரவீர உறுதி



கொழும்பு, பெப். 9
இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் மீன்பிடிப் படகுகளும் உபகரணங்களும் எந்தக் காரணம் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது என, மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
நேற்று முன் தினம் கிழக்கு மாகாணத்துக்குச் சென்றிருந்த அமைச்சர் மகிந்த அமரவீர, மட்டக்களப்பு தருமபுரத்தில் கடல்வாழ் மீன்குஞ்சுகள் இனப் பெருக்க பண்ணைக்கான வேலைகளை ஆரம்பித்து வைத்து நிகழ்வில் உரையாற்றியபோதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
வடக்கு மாகாணக் கடலில் இந்திய மீனவர்களின் சட்ட விரோத மீன்பிடியினால் உள்நாட்டு மீன் வளம் அழிக்கப்படுவது மட்டுமன்றி சுற்றாடலுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இந்திய மீனவர்களின் அத்துமீறலை நிறுத்த இந்திய மத்திய அரசு தலையீடு செய்ய வேண்டும் அல்லது ஒத்துழைக்க வேண்டும் என்ற கோரிக்கை இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பில் பேச்சுக்கு வருமாறு இந்திய மத்திய அரசு அழைப்பும் விடுத்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.
குறித்த விடயம் தொடர்பான பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் மீனவர்களின் ஆக்கிரமிப்பை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளில் பின் நிற்கப் போவதில்லை என்றும், இலங்கையிலிருந்து மீன்களை இறக்குமதி செய்ய ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடை நீக்கம் பற்றிய நல்ல செய் தியை எதிர்வரும் தமிழ் சிங்களப் புத்தாண்டுக்கு முன்னதாக எதிர்பார்க்க முடியும் என்றும் அமைச்சர் மகிந்த அமர வீர நம்பிக்கையும் வெளியிட்டார். (த)

## தேசியப் பொறிமுறை குறித்து முடிந்தால் தெளிவுபடுத்துங்கள்

### மைத்திரிக்கு வீரவன்ச சவால்



கொழும்பு, பெப். 9
ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன் இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்தத் தருணத்தில், முடிந்தால் தேசியப் பொறிமுறை பற்றித் தெளிவுபடுத்துங்கள் என, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச சவால் விடுத்துள்ளார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதன்போது அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்;
உள்நாட்டு விசாரணை பற்றி ஆராய்வதற்காகவா ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வந்துள்ளாரென நாம் இப்போது ஜனாதிபதி மைத்திரியிடம் கேட்கின்றோம்.
போர்க்குற்றம் தொடர்பில் முற்றாக உள்நாட்டு விசாரணை மாத்திரமே முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதற்காவே, கடந்த ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிக்கு மக்கள் ஆணை வழங்கப்பட்டது.
சர்வதேச நீதிவான்கள், சர்வதேச வழக்கறிஞர்கள், சர்வதேச கண்காணிப்பாளர்கள், சர்வதேச நிபுணர்கள் என முற்று முழுதாக சர்வதேசமாக்கப்பட்டு இராணுவத்தினருக்கு எதிராக விசேட நீதிமன்றம் ஒன்றை அமைப்பது எப்படி உள்நாட்டு விசாரணையாகும்?
ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கையில் நடைமுறைப் படுத்தப்படுகின்றதா என்பதை கண்காணிப்பதற்காகவே அல் ஹுசேன் தற்போது இலங்கைக்கு வந்துள்ளார்.
எமது நீதிமன்ற கட்டமைப்பு பல வருட கால அனுபவம் பெற்றது. அதில் ஏதும் குறைபாடு இருந்தால் அதனை நிவர்த்திக்க இந்த அரசால் முடியும். எதற்காக இங்கு சர்வதேச நீதிமன்றத்தை அமைக்கின்றனர்?
நாம் இந்தத் தருணத்தில் ஜனாதிபதிக்கு ஒரு சவாலை விடுக்கின்றோம். அமைச்சர் மங்கள சமரவீர ஜெனிவாவில் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாட்டில் ஜனாதிபதிக்குப் பங்கு இல்லையென்றால், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை வந்துள்ள இந்தத் தருணத்தில், நீங்கள் முன்னர் குறிப்பிட்ட தேசிய பொறிமுறை தொடர்பான கருத்தை மீண்டும் தெளிவுபடுத்த வேண்டும்.
இதில் வெளிநாட்டு விசாரணையாளர்கள் இருக்கிறார்களா? சட்டத் தரணிகள் இருக்கிறார்களா? நீதிபதிகள் இருக்கிறார்களா? இது வெளிநாட்டவர்களின் தேவைக் காகவா? அமைக்கப்படுகிறது அல்லது இலங்கையில் தற் போது நடைமுறையிலுள்ள சட்டத்துக்கு இணங்கவா? செயற் படப் போகின்றது என்பது பற்றி தெளிவாகக் கூற வேண்டும்-என்றார். (த)

## சிங்க லேயின் நடவடிக்கைகளுக்கு கர்தினால் மல்கம் ரஞ்சித் கண்டனம்



கொழும்பு, பெப். 9
சிங்க லே அமைப்பின் நடவடிக்கைகளுக்கு கர்தினால் மல்கம் ரஞ்சித் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.
தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க ராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி மற்றும் அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்
நாட்டைப் பிளவடையச் செய்யும் சகல முயற்சிகளும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டுமெனவும், நாட்டை ஐக்கியப்படுத்த அனைவரும் முன்வர வேண்டுமெனவும்,இன மத சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்துவதே அனைவரினதும் கடமையாக அமைய வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.
பிளவை ஏற்படுத்தக் கூடிய எந்தவொரு அடையாளத்தையும் நிலைநாட்ட அனுமதிக்காது, நாட்டை ஐக்கியப்படுத்தும் இலங்கையர் என்ற அடையாளத்தை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்தார்.
1950ஆம் ஆண்டில் வடக்கு தமிழ் மக்கள் வாகனங்களில் சிறி இலக்கம் பொறிக்கப்படுவதற்கு எதிராக விளைவித்த சிறி கலகமே தமக்கு ஞாபகத்துக்கு வருவதாகவும், பாடசாலைகளில் மும்மொழிக் கொள்கை முழுமையாக செயற்படுத்தப்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் வலியுறுத்தினார்
அனைத்து இன மற்றும் மத சமூகங்களும் ஒன்றிணைந்து நாட்டின் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் பாடுபட வேண்டுமென கர்தினல் மல்கம் ரஞ்சித் கேட்டுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது . (த)

## புலனாய்வு அதிகாரிகள் நால்வர் விரைவில் கைது

கொழும்பு, பெப். 9
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போகச் செய்யப்பட்ட வழக்கில், இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மேலும் நான்கு அதிகாரிகள் கைதுசெய்யப்படவுள்ளனர்.
அடுத்த சில நாள்களுக்குள் இவர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என்று குற்றப்புலனாய்வுப் பிரிவு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.
ஏற்கனவே இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், கைத்தொலைபேசிப் பதிவுகள் ஆராயப் பட்டதன் அடிப்படையிலேயே மேலும் நான்கு இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் கைதுசெய்யப்படவுள்ளனர்.
அதேவேளை, ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவை 2010 ஜனவரி 24ஆம் திகதி பெலவத்தைக்கு அருகிலுள்ள இடமொன்றில் வைத்து சட்டவிரோதமாக கடத்தியமை, தடுத்துவைத்தமை, காணாமற்போகச் செய்யப்பட்டமை போன்ற இராணுவப் புலனாய்வு அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்களை குற்றப்புலனாய்வுப் பிரிவு திரட்டியுள்ளது.
கிரித்தலவில் உள்ள 3ஆவது இராணுவப் புலனாய்வு முகாமில் வைத்து விசாரிக்கப்பட்ட பின்னர், பிரகீத் எக்னெலிகொட அக்கரைப்பற்றுப் பகுதிக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளார் என்பதை குற்றப்புலனாய்வுப் பிரிவின் விசாரணைகள் உறுதி செய்துள்ளன. (த-சி)

# பல சேனாவின் புரட்சி தொடரும்

### ஜனாதிபதிக்கு ஞானசாரதேரர் கடிதம்

கொழும்பு, பெப். 9
பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியான சந்தியா எக்னெலிகொடவைத் திட்டியதாகக் கூறப்பட்டு, கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் வண. கலகொட அத்தே ஞான சார தேரர், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.
தான் விளக்கமறியலில் இருந்தாலும், பொதுபல சேனா அன்று ஆரம்பித்த அகிம்சை வழிப் புரட்சியைத் தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
மேலும், கடந்த காலத்தில் நடந்தவற்றுக்காக தற்போது தனக்குக் கிடைத்துள்ள முடிவையும் நாட்டுக்காகத் தான் ஏற்றுக் கொள்வதாகவும், இது தனக்குக் கிடைத்த ஒரு சந்தர்ப்பமாகக் கருதுவதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.
குறித்த கடிதம், பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் வண. கலகொட அத்தே ஞான சார தேரராலேயே எழுதப்பட்டுள்ளதாக, பொதுபல சேனாவின் ஒருங்கிணைப்பாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.
எனினும் குறித்த கடிதம், வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்தா அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பில் தெளிவில்லாமல் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சாய்ந்தால் சாய்கிற பக்கமே சாயும் போக்கு வேண்டாமே...!

அடுத்த தடவை நான் உங்களைச் சந்திக்கும் வேளை, உங்களது சொந்த மண்ணிலேயே சந்திப்பேன்--

பாதிப்புற்ற மக்களை நேரில் சந்திப்பதற்கும், கடந்த வருடத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்குமே இப்போது வந்துள்ளேன்--

மேற்போந்தவாறு, இலங்கைக்கு நான்குநாள் பயணத்தை மேற்கொண்டுள்ள, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன் தெரிவித்துள்ளார்.

வடக்கு வாழ் மக்களின் நிலைமைகளை நேரில் கண்டறிவதே தமது வடக்குப் பயணத்தின் பிரதான நோக்கம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அது மட்டுமன்றி, களநிலைமையையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு உள்ள பொறுப்புக்களையும் காய்தல், உவத்தல் இன்றித் தமது இதயத்தில் உள்ளதை, அவர் வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

வலி.வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து, ஆண்டுக் கணக்காகத் தங்கி உள்ள சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்தில் நடத்திய மக்கள் சந்திப்பின்போது--

அங்கு தங்கி உள்ள மக்களை நேரில் சந்தித்து அவர்களின் கஷ்ட நிலையை நேரில் அறிவதற்காக வருகை தந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். உங்கள் நிலைமையை நேரில் கண்டறிந்து இந்த நாட்டு அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டியது எனது கடமை என்றும் அவர் தொட்டுக் காட்டுவதற்குத் தயங்கவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில், கடந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முன்னேற்றம் குறித்த மீளாய்வு தொடர்பில் ஆராய்வதே, தமது பயணத்தின் பிரதான நோக்கம் என்றும் அவர் தெரிவித்துச் சென்றுள்ளார்.

மறுபுறத்தில்--

போர்க்குற்ற விசாரணை தொடர்பான, ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை, மனித உரிமைகள் ஆணையாளர், கொழும்பில் இன்று (ஒன்பதாம் திகதி) வெளியிடுவார் என்றும் தெரியவருகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் உத்தியோக நிலைப்பாட்டை, இன்று கொழும்பில் அவர் நடத்தும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது, அறுத்து உறுத்துக் கூறி முக்கிய எதிர்பார்ப்பைப் பகிரங்கப்படுத்துவார் என்றும் நேற்றைய தகவல்கள் தெரிவித்தன.

நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பிரதான அமைச்சர்கள் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வந்த பின்னூட்டல்கள் காரணமாக, ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நிலைமையை அறுத்து உறுத்து உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எது எப்படியோ என்னவோ, காணாமற் போகச் செய்யப்பட்ட தமிழ் உறவுகளின் நிலை குறித்து, ஐ.நா.மனித உரிமைகள் சபை என்ன செய்யப் போகிறது என்பதற்கு--

அதன் ஆணையாளர் வடக்கில் வைத்து மழுப்பல் கருத்தை வெளியிட்டமை எமது மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. அதனை இங்கே மிக்க வருத்தத்துடன் பதிவு செய்கிறோம்.

சாய்ந்தால் சாய்கிற பக்கமே சாய்கிற போக்கு, அனைத்துலக நிறுவனத்தின் தலைமையாளரிடம் வெளிப்படுவது உகந்தது அல்லவே...!

# நியாயத்தைநிலைநிறுத்துவது இயற்கையின் நியதி

சிங்கள மூலம்: மவ்பிம
தமிழில்: வீ.எஸ்.ரி



முன்னாள் ஜனாதிபதி மகிந்தவால்சிறைக்கு அனுப்பப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆறு ஆண்டுகளின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராகவுள்ளார். சரத் பொன்சேகா நாடாளுமன்றத்துள் பிரவேசிக்கும் அதேவேளை மகிந்தவின் புதல்வர் யோசித சிறைச்சாலையில் காலத்தைக் கழிக்க நேர்ந்துள்ளது.

**இராணுவ சேவையில் சரத் பொன்சேகா**

1970 ஆம் ஆண்டில் இராணுவ சேவையில் சரத் பொன்சேகா இணைந்து கொண்டார். யோசித ராஜபக்சவோ 2006 ஆம் ஆண்டில்தான் கடற்படையில் இணைந்து கொண்டார். நாட்டுக்காகப் போரிடத் தமது மகனைத் தாம் படைத்துறைக்கு வழங்கியுள்ளதாக மகிந்த அவ்வேளையில் தெரிவித்திருந்தார். அதன்மூலம் தமது மகனையே போரில் இணைத்த ஒரே அரசியல் தலைவராக மகிந்த தம்மைக் காட்டிக்கொண்டார்.

கடற்படையில் இணைந்துகொண்ட யோசித இருவார காலத்தின் பின்னர் வெளிநாட்டுப் போர்ப் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள இங்கிலாந்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அது குறித்து விமர்சனங்கள் எழுந்தபோது யோசிதவுக்கு விசேட வாய்ப்பாக, பிரித்தானிய அரசால் அது வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆயினும் அதற்கான செலவீனமாக மூன்று லட்சம் ரூபா வரையான நிதி இலங்கை அரசால் செலவிடப்பட்டதாக நல்லாட்சி அரசு பதவி ஏற்றதன் பின்னர் இடம்பெற்ற விசாரணைக்குழுவால் கண்டுபிடிக்கப்பட்டது. இலங்கையில் போர் உக்கிரமடைந்திருந்த 2007 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இலங்கை திரும்பிய யோசித, மற்றொரு பயிற்சி நெறிக்காக 2008 ஆம் ஆண்டின் முற்பகுதியில் வெளிநாட்டுக்கு மீண்டும் அனுப்பிவைக்கப்பட்டார். அந்த ஆண்டின் இறுதியில் யோசித நாடு திரும்பிய வேளையிலும் அவரது வெளிநாட்டுப் பயிற்சி நெறி குறித்து விமர்சனங்கள் எழுந்தபோதிலும், அது அவருக்கு வெளிநாடொன்றால் வழங்கப்பட்ட விசேட வாய்ப்பென்றே பதிலளிக்கப்பட்டது. ஆயினும் மைத்திரிபால அரசால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு, யோசிதவின் குறித்த வெளிநாட்டுப் பயிற்சி நெறிக்காக மகிந்த அரசால் 53 லட்சம் ரூபா செலவிடப்பட்டதாகத் தகவல் வெளிப்படுத்தியிருந்தது. 2008 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் இலங்கை திரும்பிய யோசித ஒருநாள்கூட வடகிழக்கில் போர்ப்பகுதியில் சேவை புரிந்தாரில்லை. போர் முடிவடைந்த பின்னர் 2009 ஆம் ஆண்டு நவம்பரில் மீண்டும் மற்றொரு பயிற்சி நெறியை மேற்கொள்ள யோசித உக்ரேனுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அதற்காக மகிந்த அரசால் 37 லட்சம் ரூபா செலவிடப்பட்டிருந்தது.



**யோசிதவுக்கு உயர்விருது**

2009 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் திருகோணமலை கடற்படைத் தளத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து கடற்படைக்கு யோசித ஆற்றிய சேவைக்கான உயர்விருது அந்த வேளையை ஜனாதிபதியும் அவரது தந்தையுமான மகிந்தவால் யோசிதவுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதேபோன்று

> “சரத் பொன்சேகா மீண்டும் இராணுவத்தை வழிநடத்த முன் வந்திருக்கா விட்டால் பிரபாகரனைப் போரில் வெற்றி கொள்ள இயலாது போயிருக்கும்.”

போரில் உயிர்த்தியாகம் செய்தும், அங்கவீனர்களாகியும் போன கடற்படை வீரர்களைப் புறம்தள்ளி, யோசிதவுக்கு கடற்படைக்கு உயரிய சேவை யாற்றிய வீரர் என்ற விதத்தில் கடற்படையின் மற்றொரு உயர் விருதும் வழங்கப்பட்டிருந்தது.

யோசித சிறையில் அடைக்கப்பட்டமை குறித்து, இன்று கண்ணீர் சிந்தும் மகிந்த குறித்து அனுதாபப்படும் நாட்டுப் பற்றாளர் தரப்பினர், அன்று யோசித உயர் விருதுகளைப் பெற்றுக் கொண்ட வேளையில், அந்த விருதுகளைப் பெற உரிமை பெற்றிருந்த, போரில் உயிரிழந்த மற்றும் அவயவங்களை இழந்த படைவீரர்களது பெற்றோர் சிந்திய கண்ணீர் மற்றும் ஏமாற்றம் குறித்துக் கவலை தெரிவித்தார்களா?

**சரத் பொன்சேகாவுக்கு சிறைத் தண்டனை**

விடுதலைப் புலிகளது தாக்குதல்களால் இரு தடவைகள் காயமுற்று உயிர் தப்பிப் பிழைத்த, போரை வெல்வதற்கு படையினருக்குத் தலைமைதாங்கி வழிநடத்திய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை நாயைப் போன்று இழுத்துச் சென்று சிறையில் அடைத்தவேளையிலும் இந்த நாட்டுப் பற்றாளர்கள் எதிர்ப்பேதும் தெரிவிக்காதது மட்டுமன்றி, சரத் பொன்சேகாவை கேலி செய்து கூச்சல் இடவும் தவறவில்லை.

வைத்தியர்களது ஆலோசனைகளையும் புறம்தள்ளி, சரத் பொன்சேகா மீண்டும் இராணுவத்தை வழிநடத்த முன்வந்திருக்காவிட்டால் பிரபாகரனைப் போரில் வெற்றிகொள்ள இயலாது போயிருக்கும். இதனை முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவே ஒரு சந்தர்ப்பத்தில் உறுதிப்படுத்தி இருந்தார்.

ஆனால், போரில் வெற்றி பெற்ற பின்னர், சரத் பொன்சேகாவுக்கு அதிகரித்து வந்த மக்கள் அபிமானத்தைக் கண்டு அஞ்சியே மகிந்த, அவரை இராணுவத் தளபதிப் பதவியிலிருந்து வெளியேற்றினார் என்பதே உண்மை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொஹான் எதிரிசிங்க

# புதிய அரசமைப்பின் உருவாக்கத்தில் பக்கச்சார்பற்ற தன்மை

இலங்கை 2015ஆம் ஆண்டில் பெற்றுக் கொண்ட ஜனநாயக ரீதியான ஆதாயங்களை மேலும் பலப்படுத்த வேண்டுமானால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த பிரதமர் விக்கிரமசிங்கவும் தமக்கிடையிலான வேறுபாடுகள், பகைமைகள் மற்றும் கருத்தியல் ரீதியான வேறுபாடுகள் என்பவற்றை மறந்து மூன்றாவது குடியரசு அரசமைப்பை அறிமுகம் செய்துவைப்பதற்கு கூட்டாகத் தலைமைத்துவத்தை வழங்குதல் வேண்டும். 1972 ஆம் மற்றும் 1978 ஆம் வருடங்களில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட அரசமைப்புக்களில் காணப்படும் தவறுகளிலிருந்து படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ளும் ஒரு புதிய அரசமைப்பு, சர்வதேசத்தின் மிகச் சிறந்த நடைமுறைகளிலிருந்து அதற்குத் தேவையான கூறுகளை பெற்றுக்கொள்ள வேண்டும். அந்த அரசமைப்பு, அரசமைப்பியலின் அடிப்படைக் கோட்பாடுகளுடன் பொருந்திச் செல்ல வேண்டும். நல்லாட்சி, மனித உரிமைகளின் பாதுகாப்பு, தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை என்பவற்றை அறிமுகம் செய்து வைப்பதற்கு இத்தகைய ஓர் அரசமைப்பு நாட்டுக்குத் தேவைப்படுகின்றது.

**எமக்கு ஒரு புதிய அரசமைப்பு தேவைப்படுவது ஏன்?**

முதல் இரு அரசமைப்புக்களும் பக்கச் சார்பானவையாக இருந்து வந்ததுடன், அவை அதியுத்தம தன்மையையும் கொண்டிருக்கவில்லை. ஒரே விதமான அடிப்படைக் குறைபாடுகளை அவை கொண்டிருந்தன.

அ) அதிகாரத்தில் இருந்த கட்சியின் நோக்கு மற்றும் கருத்தியல் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் அவை வடிவமைக்கப்பட்டிருந்தன.

ஆ) அவை பெருபான்மைவாதத்தை எதிர்பார்பதற்குப் பதிலாக அதனை வேரூன்றச் செய்தன. மற்றும்,

இ) அவற்றின் முதன்மைச் செயலூக்கி அல்லது தர்க்க நியாயம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சியாளரின் சௌகரியமாகவே இருந்து வந்தது. மக்களுக்கு வலுவூட்டும் விதத்தில் அவை வடிவமைக்கப்பட்டிருக்கவில்லை.

1972ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு அரசமைப்பு, ஐக்கிய முன்னணி அரசின் ஒரு அரசமைப்பாக இருந்து வந்தது. தமது சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுத்துச் செல்வதற்கென அரசு அரசியல் அமைப்பைப் பயன்படுத்திக் கொள்வதற்கான ஒரு கருவியாக அது அமைந்ததாக நீலன் திருச்செல்வம் குறிப்பிட்டிருந்தார். 1978ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசமைப்பு, அதன் முக்கியமான விமர்சகர்களில் ஒருவரான சானக அமரதுங்க எடுத்து விளக்கியதை போல, அதன் பிதாமகராகிய ஜே.ஆர். ஜயவர்தனவின் எதேச்சாதிகார அரசியல் சாணக்கியத்தை அறிமுகம் செய்து வைத்தது. இந்த இரு அரசமைப்புக்களும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைகளைக் கொண்டிருந்த அரசுகளினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டிருந்தன. அதன் காரணமாக அரசியல் கட்சிகளுக்கிடையிலும், இனக் குழுக்களுக்கிடையிலும் ஒரு கருத்தொற்றுமையைப் பெற்றுக் கொள்வதற்கான தேவை அவற்றுக்கு இருக்கவில்லை. இவ்விரு அரசமைப்புக்களும் தனியொரு நிறுவனத்திடம் அதிகாரத்தைக் குவியச் செய்தன (1972 அரசமைப்பின் கீழ்தேசிய அரசுப் பேரவை அல்லது நாடாளுமன்றத்தின் கைகளில் முழு அதிகாரமும் ஒன்று திரண்டிருந்தது. 1978 அரசமைப்பின் கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடம் அதிகாரங்கள் அனைத்தும் கையளிக்கப் பட்டிருந்தன). இந்த இரு அரசமைப்புக்களும் பயனுள்ள விதத்திலான பொது மக்களின் பங்களிப்பு எவையுமில்லாத விதத்திலேயே வரைவு செய்யப்பட்டு, நிறைவேற்றி வைக்கப்பட்டன. குறைபாடுகள் ஒரே தன்மையானவையாக இருந்து வந்த போதிலும், முதலாவது அரசமைப்பை மிகக் கடுமையாக விமர்சனம் செய்த ஒருவர் இரண்டாவது அரசமைப்பின் மூல கர்த்தாகவாக இருந்து வந்தார்.

> 1978ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு, அதன் முக்கியமான விமர்சகர்களில் ஒருவரான சானக அமர துங்க எடுத்து விளக்கியதைப் போல, அதன் பிதாமகராகிய ஜே.ஆர். ஜயவர்தனவின் எதேச்சாதிகார அரசியல் சாணக்கியத்தை அறிமுகம் செய்து வைத்தது.

இலங்கை 2015ஆம் ஆண்டில் ஈட்டிக்கொண்ட ஜனநாயக ரீதியான சாதனைகளைப் பலப்படுத்திக் கொள்வதிலும், நாடு 1982 தொடக்கம் அனுபவித்து வந்த எதேச்சாதிகார ஆட்சி முறை மீண்டும் தலைதூக்குவதைத் தடுத்துக் கொள்வதிலும் உண்மையில் ஆர்வம் காட்டுவதாக இருந்தால், அது அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும், தாக்கமான விதத்திலான பரீட்சிப்புக்கள், கட்டுப்பாடுகள் என்பவற்றை கொண்டிருப்பதுடன், மக்களுக்கு வலுவூட்டும் புதிய அரசமைப்பொன்றை அறிமுகம் செய்து வைத்தல் வேண்டும். அப்பொழுது தான், மக்களால் தெரிவு செய்யப்படும் அரசியல்வாதிகள், இரு தேர்தல்களுக்கிடையிலான காலப் பிரிவின்போது மக்களுக்கு பொறுப்புக் கூறக் கூடியவர்களாக் இருந்து வருவார்கள். மக்களுக்குப் பதிலிறுக்கக் கூடிய வகைப் பொறுப்புடன் கூடிய ஆட்சியை ஏற்படுத்துவதற்கு பக்கச்சார்பற்ற, கருத்தொற்றுமையுடன் கூடிய ஆவணமொன்றாக ஒரு அரசமைப்புத் தேவைப்படுகின்றது.

**ஓர் அரசமைப்பை மதிப்பீடு செய்வதற்கான அளவுகோல்**

ஓர் அரசமைப்பு என்பது, அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி வரும் ஆள்களிடமிருந்து பொது மக்களைப் பாதுகாத்துக் கொள்வதையும், மக்கள் எதிர் ஆட்சியாளர்கள் என்ற நிலையில் மக்களுக்கு வலுவூட்டுவதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. விடுதலை அரசமைப்பு என்ற தனது முக்கியமான நூலில் பிரீட்ரிக் ஹேறக் இந்த அடிப்படைக் குறிக்கோளை எடுத்துக் காட்டியிருந்தார். அரசமைப்பை உருவாக்கும் ஒரு கூட்டு என்ற முறையில் தமது பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும் சட்டவாக்கச் சபையின் அதிகாரங்களை நிர்ணயிப்பதற்கான பிரத்தியேக உரிமையை மக்கள் கொண்டுள்ளார்கள் என்ற விடயம், அனைத்து அதிகாரங்களும் மக்களிடமிருந்தே வருகின்றன என்ற சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆனால், மீண்டும் மீண்டும் இடம்பெறும் தேர்தல்களில் இது பெருமளவுக்குக் குறிப்பிடப் படுவதில்லை. அந்த வகையில், நாடாளுமன்றத்திலிருந்தும், அதேபோல, அரசின் ஏனைய பிரிவுகளிலிருந்தும் தோன்றக்கூடிய தான்தோன்றித்தனமான செயல்களிலிருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்ளும் கருவியொன்றாகவே அரசமைப்பு உருவாக்கப்பட்டது. *(தொடரும்)*

## சீர்செய்வது யார்?

தென்மராட்சி, கொடிகாமம் கிழக்கில், பெரிய எருவன். மற்றும் தாவளை-இயற்றாலை, சின்ன எருவன் போன்ற வயல்வெளிகளுள்ளன. இதில் சின்ன எருவனையும் பெரிய எருவனையும் பிரித்து நிற்பது கட்டுக்குளம் ஆகும். இங்கு பன்னெடுங்காலமாக கொடிகாமம்-எருவன்-வரணி போன்ற இடங்களில் வசிப்பவர்களுக்கு வயல் உண்டு-காலபோக நெற்செய்கையை இங்கு இந்த மக்கள் தவறாது செய்து வந்துள்ளனர். இந்தமுறை பெருமழை பெய்ததன் காரணமா வயற்காணிகளில் அதிக வெள்ளம் நின்றதால் பயிர்கள் யாவும் அழிவடைந்துள்ளன. கொடிகாமம் பகுதியில் உள்ள செட்டியாவெளி தொடங்கி வேவில் ஊடாக வாய்க்கால் ஊடறுத்துப் பருத்தித்துறை வீதியைக் கடந்து எருவன் குளத்தை சென்றடைந்து அங்கிருந்து பெரிய எருவன் வயல்வெளி ஊடாகக் கட்டுக்குளத்தை அடைந்து, பின்னர் சின்ன எருவன் வன்னியாசி மதகின் ஊடாகக் கல்வளை சென்று சரசாலை, கிராய் தரவையில் சென்று அங்கு இருந்து வல்லைப்பாலம் ஊடாகத் தொண்ட மானாறு கடலில் சங்கமம் ஆகின்றது என முன்னோர்களால் கூறப்படுகின்றது.

ஆகவே இந்த வருடம் தண்ணீர் பாயாது தேங்கி நின்று பயிர்களை நாசம் செய்ததற்குக் காரணம் யாது? சிலர் தண்ணீர், வன்னியாசி வாய்க்கால் - மதகின் ஊடாகப் பாய்வதற்கு, வேறு ஒரு வாய்க்கால் தண்ணீர் விடவில்லை என்கின்றனர். அப்படியானால் இதற்குப் பொறுப்பானவர்கள் இதைச் சீரமைக்கும்போது ஏன் இதைக் கருத்தில் கொள்ளாது விட்டனர்.

எப்படியோ தண்ணீர் பாய வில்லை. கடந்த காலங்களில் நிசா புயல் வெள்ளம்கூட பாய்ந்ததாக விவசாயி ஒருவர் கூறினார். தென்மராட்சி கிழக்கில் அரைவாசிப் பேருக் குச் சாப்பாடு போடக்கூடிய வயல் நிலம் இங்கு உள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் இனிமேலாவது இங்குள்ள மக்களின் வயிற்றில் அடிக்காது உடனடியாக வன்னியாசி மதகு வாய்க்காலையோ இடங்களையோ அவதானித்துச் சீர்செய்து காப் பாற்றுமாறு பெரிய எருவன், சின்ன எருவன் விவசாயிகள் சார்பாக அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சிவஸ்ரீ இராம.ஸ்ரீதரக்குருக்கள்
மடத்தடி வீதி

## சுகாதார அமைச்சு கவனத்தில் கொள்ளுமா?

வடமாகாணத்தில் வைத்தியர்கள் பற்றாக் குறை பெருமளவில் காணப்படுகின்றமை யாவரும் அறிந்ததே. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டு சுகாதார அமைச்சு ஓய்வுபெற்ற வைத்தியர்களை மீள் நியமனம் வழங்கிச் சேவையில் அமர்த்துவது வரவேற்கப்படவேண்டியதாகும். இவ்வாறு மீள் நியமனம் வழங்கும்போது அந்த வைத்தியர் சேவையாற்றக்கூடிய உடல் நிலையில் உள்ளாரா என்பதையும் கவனத்திற் கொள்ளவேண்டியது சுகாதார அமைச்சின் பொறுப்பாகும். பார்வைக்குறைபாடு, கேட்டல் குறைபாடு உள்ளவர்களை மீள நியமிக்கும்போது உயிர்காக்கும் வைத்தியசேவை உயிர்கொல்லும் வைத்திய சேவையாக மாறும் நிலைமை ஏற்படுமாதலால் அந்தக் குறைபாடுகளை சிகிச்சை மூலம் முதலில் குணப்படுத்திய பின்பே மீள்நியமனம் வழங்கப்படவேண்டும்.

ஒரு நோயாளி
சாவகச்சேரி.

## கவனிப்பார் யாரும் இல்லையா?

கொடிகாமம் சந்தியில் இருந்து கிழக்கு நோக்கிச் செல்கையில் சிவன் கோயிலுக்கு வடக்கு பக்கமாக மடத்தடி வீதி உள்ளது. இது தொடர்ந்து சென்று கிராமங்களுக்கூடாக மேற்கே திரும்பி பருத்தித்துறை வீதியில் துயிலும் இல்லம் அருகே முடிகின்றது. (தற்போது இராணுவ முகாமுள்ளது) இந்த வீதி கடந்த 50 வருடங்களுக்கு மேலாக செப்பனிடப்படாதுள்ளது. அத்துடன் மிகவும் தாழ்வான பகுதியாகையால் மழைகாலங்களில் மழைநீர் இந்த இடத்தில் தேங்கி வழிந்தோடாது நிற்பதால் பாதசாரிகளோ வாகனங்களோ செல்ல முடிவதில்லை. கடந்த 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் திகதி [illegible] இராணுவம் தென்மராட்சிப் பகுதியைக் கைப்பற்றியவேளை அவர்கள் பாதுகாப்பு அரண் அமைத்து வீதியில் உள்ள கற்களும் கிளறுண்டு-நடந்து செல்வதற்கே முடியாதவாறு உள்ளது. மேலும் இந்த வீதியில் குருமார்கள், அரச உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள் என மக்கள் ஏராளமானோர் வசிக்கின்றனர். அத்துடன் வேவில் குடமியன் மக்களும் இந்த வீதியைப் பயன்படுத்துவதுண்டு. இந்த நல்லாட்சியிலாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் கூடிய கவனம் எடுத்து இந்த வீதியைச் செப்பனிட்டுத் தருவார்களா?

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல்
ஆழ்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு.

சிவஸ்ரீ இராம.ஸ்ரீதரக்குருக்கள்
*மடத்தடி வீதி.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிரேக்க சிலைகளில் நவீன மடிக்கணினி


## குழப்பத்தில் ஆராய்ச்சியாளர்கள்


எதென்ஸ், பெப்.9
கிரேக்கச் சிலைகள் தற்கால நவீன இலத்திரனியல் சாதனத்தை உள்ளடக்கிச் செதுக்கப்பட்டுள்ளமை ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.


குறித்த சிற்பத்தில் சிறுமி ஒருவர் நவீன மடிக்கணினியை கையில் வைத்திருப்பதாகவும், அதனைப் பெண் ஒருவர் தொடுவதாகவும் செதுக்கப்பட்டுள்ளது. தற்போது இந்தச் சிற்பத்தின் ஒளிப்படம் தர்க்கவியல் கருத்தை ஏற்படுத்தியுள்ளது. புராதன காலத்தில், ஒராக்கில், டெல்பி மதகுருக்கள் மேம்பட்ட அறிவையும், தகவல் நுட்பங்களை அணுகும் திறனையும் கொண்டிருந்தார்கள் என அறியப்பட்டுள்ளது.

ஆரம்பகால ஆய்வாளர்களால் பெண்ணொருவர் நகைப்பெட்டியைத் தொடுகிறார் என இதற்கு விளக்கம் அளிக்கப்பட்டது. ஆனால் தற்போது அந்தச் செதுக்கல் சிற்பத்தைக் கூர்ந்து கவனிக்கும்போது அது தற்காலக் கணினி போன்று தோற்றமளிப்பதுடன், யு.எஸ்.பி செருகிகளையும் கொண்டதாக காணப்படுகிறது. நகைப்பெட்டி எவ்வாறு அப்படி ஒரு தோற்றம் அளிக்கும் என அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். அதன் வடிவம் இந்த செதுக்கல் உருவத்துடன் பொருந்தாது எனவும் தெரிவித்தனர்.

இன்னொரு வரை படத்தில் பேனா அல்லது எழுத்தாணியால் எழுதுவது போல் தோற்றமளிக்கிறது. ஆனாலும் அந்தப் பொருள்கள் அவற்றின் தோற்றத்துக்கு மிகவும் முரணாகவுள்ளன. அவற்றின் தோற்றம் ரப் போன்று இருப்பதுடன், தற்கால தொடுதிரைச் சாதனங்களுடன் இருக்கும் எழுது கருவிகள் போன்று உள்ளன. இதனால் ஆராய்ச்சியாளர்கள் பெரும் குழப்பத்திற்கு உள்ளாகியுள்ளனர். (து-ரி4)





# துருக்கி எல்...
# குவியும் அ...

### சூழ்நிலையைப் பொறுத்து அவர்கள... அனுமதிப்போம் என ஜனாதிபதி தெ...

அங்காரா, பெப்.9
துருக்கிய எல்லையில் ஆயிரக்கணக்கான அகதிகள் குவிந்துள்ளனர். இதனை அடுத்து அந்த நாட்டு ஜனாதிபதி ரையிப் எர்டொகன், சூழ்நிலையைப் பொறுத்து அகதிகளை நாட்டினுள் அனுமதிப்போம் எனத் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் நிலவிவரும் உள்நாட்டுப் போர் காரணமாக, அந்த நாட்டு மக்கள் பலர் பிறநாடுகளுக்குக் குடிபெயர்ந்து வருகின்றனர். இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து ஆயிரக்கணக்கான அகதிகள் நாட்டின் எல்லையில் காத்திருக்கின்றனர். இதனை அடுத்து நேற்று முன்தினம் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

வட சிரியாவின், அலிப்போ பகுதியில் இருந்து ரஷ்ய வான் வழித் தாக்குதலில் இருந்து தப்பி வந்த பெண்களும், சிறுவர்களும் துருக்கியில் தஞ்சம் புகக் காத்து நிற்கின்றனர். மேலும் ஜனாதிபதி தெரிவித்ததாவது, அவர்க... தால் எமக்கு வேறு வழியில்லை. எம... உதவி செய்தாக வேண்டும் எனத் தெரி... கிலிஸ் மாகாண ஆளுநர் சுலைமான் ர... ஏற்கனவே 2.7 மில்லியன் சிரிய அகதி... சம் புகுந்துள்ளனர். கடந்த 48 மணி... ஆயி ரம் அகதிகள் துருக்கிய எல்லை... அலிப் போவில் இடம்பெற்று வரும் த... 70 ஆயிரம் பேர் அகதிகளாக வெளியே... கப்படுகிறது எனத் தெரிவித்தார்.

இதற்கிடையில் துருக்கியால், சிரியாவி... வழங்கப்பட்டு வருகிறது. அவசர நிலை... திறக்கப்படும் என சர்வதேச ஊடகம் ஒ... கள் தெரிவித்தனர். மேலும் கடந்த வெ...

# ஜப்பானில் வெடித்தது எரிமலை

ரோக்கியோ, பெப்.9
தெற்கு ஜப்பானில் உள்ள சகுராஜிமா எனும் எரிமலை கடந்த வெள்ளிக்கிழமை வெடித்துள்ளது. இதனைத் தொடர்ந்து வான் உயர்த்த அளவில் கரும்புகையைக் கக்குவதுடன், இடி மின்னலும் ஏற்பட்டுள்ளது. அத்துடன் எரிமலைக் குழம்பையும் மேல்நோக்கிசிதறுவதுடன், எரிமலையில் இருந்துஎரிமலைக் குழம்புபெருக்கெடுக்க ஆரம்பித்துள்ளது என நாட்டின் வளிமண்டல வியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் சம்பவ இடத்துக்கு விரைந்தவளிமண்டலவியல்திணைக் களத்தினர், எரிமலையில் இருந்து 1.2 மைல் விட்டத்துக்கு மக்கள் நடமாடத் தடை விதித்துள்ளனர். எரிமலை வெடிப்பினால் ஏற்பட்ட சேதம் குறித்து தகவல்கள் வெளியாகவில்லை.

முன்னைய வெடிப்புகளுடன் ஒப்பிடுகையில் இந்த முறை ஏற்பட்ட வெடிப்பு சராசரியானது என எரிமலை ஆராய்ச்சியாளர் கசுகிரோ ஜகிகாரா தெரிவித்தார்.

[illegible] வாய்ந்தது. [illegible] படாது எனத் தாம் கருது வதாகவும், ஆனாலும் தொடர்ந்து அதன் செயற்பாடுகளை ஆராய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (து-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிலாந்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் பனிப்புயல் தாக்கம் ஏற்பட்டுள்ளது. 18 அங்குலம் அளவு உயரத்துக்குப் பனிப் பொழிவு ஏற்படலாம் என வளிமண்டலவியல்திணைக் களத்தால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடும் பனிப் பொழிவால் நேற்று பொஸ்டன் மாகாணத்தில் பாடசாலைகள் மூடப்பட்டன. (து-ரி4)





# ல்லையில் அகதிகள்

## களை
## தெரிவிப்பு

வர்கள் எங்களை தேடி வந்
. எமது சகோதரருக்கு நாம்
தெரிவித்தார். இது தொடர்பில்
ான் ரப்சீஸ் தெரிவிக்கையில்,
அகதிகள் எமது நாட்டில் தஞ்
ணிநேரத்தில் 30 முதல் 35
ல்லையில் குவிந்துள்ளனர்.
ும் தாக்குதலினால் மேலும்
ளியேறலாம் என எதிர் பார்க்

யாவில் ட்ரக் மூலம் உணவு
லைமைகளின்போது எல்லை
் ஒன்றிற்கு துருக்கி அதிகாரி
த வெள்ளி, சனிக்கிழமைக

ளில் காயமடைந்த 7 பேர் துருக்கிய மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். உதவிநாடி வரும் சிரிய அகதிகளை அனுமதிக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம், கடந்த சனிக்கிழமை தெரிவித்துள்ளது.

துருக்கி ஜனாதிபதி தெரிவிக்கையில், ரஷ்யா சிரியாவில் அசாத்தின் ஆதரவாளர்களை எதிர்த்து தாக்குதல் நடத்துவதோடு 400 ஆயிரம் மக்களைக் கொன்று குவித்துள்ளது. தொடர்ந்தும் இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது எனத் தெரிவித்தார். அசாத்தின் வேண்டுகோளுக்கிணங்க ரஷ்யா, சிரியாவில் தாக்குதல் நடத்தி வருகிறது. ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகத் தாக்குதல் நடத்தும் அதே வேளை அசாத்துக்கு எதிரான போராளிகளுக்கு எதிராகவும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். எந்தச் சூழ்நிலையையும் எதிர் நோக்கும் திடனுடன் எமது பாதுகாப்பு படையினர் காணப்படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.(து-ரி4)



# தனி மனிதனால் உருவாகிய காடு

சென்னை, பெப்.9

இஸ்ரேல் நாட்டவர் தனி ஒருவராகச் செயற்பட்டு இந்தியாவில் காடொன்றை உருவாக்கியுள்ளார்.

2000 ஆம் ஆண்டு இந்தியாவுக்குச் சுற்றுலாப் பயணியாக வந்த அவிரம் ரோசின் இந்தியாவில் காடுகளைச் சுற்றி பார்க்கவேண்டும் என்ற ஆசையுடன் வந்தார். ஆனால் இடம்பெறும் நகர மயமாதலால் காடுகள் அழிக்கப்பட்டதை அவதானித்தார். 2003 ஆம் ஆண்டு ரோசின் தனது மனைவி, மகளுடன் இந்தியாவில் குடியேறினார். தமிழ்நாட்டின் அவரொவில் பகுதியில் 70 ஏக்கர் காணியை அவர்கள் கொள்வனவு செய்தனர்.

பின்னர் சிறிய மரங்களை நட ஆரம்பித்தனர். உள்ளூர் ஆர்வலர்களின் உதவியுடன் இதனைச் செய்தனர். அழிந்து வரும் தாவரங்கள், உண்ணக்கூடிய தாவரங்கள் என்பவற்றை நட்டனர். கடந்த 13 வருடங்களில் அந்தப் பிரதேசம் காடாக மாறியுள்ளது. அதற்கு சதானா காடு எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அந்த வளாகத்தில் சூழலுக்கு இசைவான விதத்தில் அவரது வீடும் அமைக்கப்பட்டுள்ளது. சூரிய ஒளியில் மின்சார உற்பத்தி



யை மேற்கொண் டதுடன், மர வீட்டில் வசித்து வருகிறார்.

உள்நாட்டு மரங்களில் 18 ஆயிரம் மரங்களை நட்டுள்ளார். இவரது முயற்சியைப் பார்த்த சமூக ஆர்வலர்கள் 150 பேர், ரோசினுடன் இணைந்து கொண்டனர். இந்தியாவில் இந்த முயற்சி கைகூடியதால், ஹெய்ட்டி, கென்யா ஆகிய நாடுகளிலும் சுயமாகக் காடு வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். தன்னுடன் இணைந்து கொண்ட ஆர்வலர்களை இவர் தனது குடும்பத்தினர் என அழைக்கிறார். காட்டின் நன்மையையும் இயற்கை வளத்தைப் பேணும் திறனையும் இவர் பரப்பி வருகிறார். இதனால், உலக அளவில் இவருக்கு ஆதரவு பெருகியுள்ளது. (து-ரி4)

# பாகிஸ்தான் கிராமத்தில் தீ விபத்து; 10 பேர் சாவு

கராச்சி, பெப்.9

பாகிஸ்தானின் மீன்பிடி கிராமம் ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் 10 பேர் உயிரிழந்தனர். இந்தத் தீ விபத்து நேற்று முன்தினம் காலை, தட்டா மாவட்டத்தைச் சேர்ந்த பாசோ தீவில் இடம்பெற்றுள்ளது என பொலிசார் தெரிவித்தனர்.

தற்செயலாக எண்ணெய் விளக்குக் கீழே விழுந்ததில் அங்கிருந்த ஓலைக்குடில்களில் தீ பற்றி எரிய அரம்பித்தது. இந்த விபத்தில் அநேகமான பெண்களும் சிறுவர்களும் உயிரிழந்தனர்.

இது தொடர்பில் பொலிஸ் அதிகாரி தெரிவிக்கையில்,

ஓலைக்குடில் வீடொன்றில் இருந்த எண்ணெய் விளக்கு தற்செயலாக கீழே விழுந்தது. இதனால் ஏற்பட்ட தீ தொடர்ந்து அடுத்த வீடுகளையும் பாதித்தது. 9 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். ஒருவர் வைத்திய சாலைக்குச் செல்லும் வழியில் உயிரிழந்தார். இந்த விபத்தில் 2 சிறுவர்கள், 4 பெண்கள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த 2 சிறுவர்கள் கராச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார். (து-ரி4)

# தவறான கட்டட நிர்மாணிப்பே தாய்வான் விபத்துக்குக் காரணம்



தாய்பேய், பெப்.9

தாய்வானில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் சரிந்து வீழ்ந்தன. இந்தப் பேரிடருக்குக் காரணம் தவறான கட்டட நிர்மாணமாகும் என ஆரம்பக் கட்ட விசாரணைகளின் பின்னர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த இடரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 26 ஆக உயர்ந்துள்ளது. 100 பேர் இடிபாடுகளில் சிக்கியுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களில் 24 பேர் உயரமான குடியிருப்பில் வசித்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை 6.4 ரிச்டர் அளவில் இடம்பெற்ற நில அதிர்வில் கட்டடங்கள் அடியோடு சரிந்தன. மீட்புப் பணிமூலம் இதுவரை 170 பேர் மீட்கப்பட்டுள்ளனர். 2 மில்லியன் மக்கள் வாழும் நகரான தைனனில் அதிக தாக்கம் ஏற்பட்டுள்ளது. தாய்வானின் உள்துறை அமைச்சர், இடர் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இதனிடையே பாதிக்கப்பட்ட மக்கள் காப்புறுதி நிறுவனங்களில் தமது பாதிப்புகளைத் தெரிவித்துள்ளனர். ஆனால் காப்புறுதி நிறுவனங்கள் அவற்றை ஏற்றுக்கொள்ள மறுப்பதால் மக்கள் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். (து-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் நலன்களுக்காக உழைத்த உத்தமர் ஜி.ஜி. பொன்னம்பலம்

சிரேஷ்ட சட்டத்தரணி
அப்பாத்துரை விநாயகமூர்த்தி

தமிழ் மக்களின் உரிமைக்காகவும் நலன்களுக்காகவும் இறுதிவரை உழைத்த மாபெரும் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் 39வது சிரார்த்த தினம் இன்றாகும்.

இங்கிலாந்தில் சட்டப்படிப்பைப் பூர்த்திசெய்து பட்டம் பெற்று இலங்கை திரும்பிய ஜி.ஜி பொன்னம்பலம் சட்டத்துறையில் மிகவும் பிரபல்யம் பெற்ற சட்டத்தரணியாக விளங்கினார். சட்டத்துறையுடன் நின்றுவிடாது அரசியலிலும் பிரவேசித்து தமிழர்களின் சமுதாய அரசியல் ஏற்றத்துக்காகவும் கடுமையாக உழைத்தவர். 1927 ஆம் ஆண்டு அளவில் இலங்கை உயர்நீதிமன்ற அப்புக்காத்தாக தன்னைப் பதிவு செய்துகொண்ட அவர் அப்போதிலிருந்து அரசியலிலும் ஈடுபட்டார்.

அக்காலத்தில் டொனமூர் கமிசனின் சிபாரிசுகள் இந்த நாட்டில் வெளியிடப்பட்டிருந்தன. இப் பரிந்துரைகளை அப்போதைய பெரும் தலைவர் சேர்.பொன். இராமநாதன் ஆட்சேபிப்பதற்காக லண்டன் பயணமானார்.

அந்த நேரத்தில் இங்குள்ள சில தமிழ் அரசியல் பிரமுகர்கள் அந்தப் பரிந்துரைகளை ஏற்க முடிவு செய்தார்கள்.

1929ஆம் ஆண்டு சில தமிழ்பிரமுகர்கள்இப்பரிந்துரைகளைஏற்கும் பொருட்டுத் தீர்மானம் எடுப்பதற்காக கொழும்பில் கூட்டம் கூடினார்கள். அக்கூட்டத்திற்கு வந்திருந்த இளைஞரான ஜி.ஜி பொன்னம்பலம் அக்கமிசனின் சிபாரிசுகளால் ஏற்பட இருக்கும் தீமைகளைச் சுட்டிக்காட்டி சிபாரிசுகளை ஏற்கக்கூடாதென்ற தீர்மானத்தை முன்மொழிந்தார். தீர்மானம் அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறிற்று. அன்று தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜி.ஜி.பொன்னம்பலம், சேர் பொன் இராமநாதன் மறைவுக்குப் பின்பு தமிழ்மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத்திகழ்ந்தார். இந்நாடு சிங்களநாடு என்றும் அது சிங்களவர்க்கே சொந்தமென்றும் ஓர் எண்ணம் வலுப்பெற்றிருந்த நிலையில் சிங்கள மகாசபையை பண்டாரநாயக்கா தோற்றுவித்தார்.

சிறுபான்மையினரை ஒதுக்கும் திட்டமிட்ட சூழ்ச்சியை உணர்ந்த ஜி.ஜி பொன்னம்பலம் தமிழர்களின் குரலாக இருக்கும் பொருட்டு அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸை 1944 இல் நிறுவினார். அக்கட்சி அன்றுதொட்டு தமிழர்களின் பாதுகாவலனாக இருந்து வந்தது. ஜி.ஜி அவர்களின் மறைவின் பின் அவரது தனயன் மாமனிதர் குமார்பொன்னம்பலம் கட்சியின் தலைமையை ஏற்று தமிழினத்திற்காக அருந்தொண்டு ஆற்றிவந்தார்.

1945 இல் தமிழ்க்காங்கிரஸ் சார்பில் ஜி.ஜி பொன்னம்பலம் சோல்பரிக் கமிசன் முன் தோன்றி சிறுபான்மை மக்களின் நிலையை விளக்கியதோடு சமபிரதிநிதித்துவக் கோட்பாட்டையும் முன்வைத்தார்.

சிங்களவருக்கும் ஏனைய சிறுபான்மை இனத்தவருக்கும் நாடாளுமன்றத்தில் சமபலம் இருக்க வேண்டும் என்பதே அந்தக் கோட்பாடாகும். தமிழர்களுக்கு வரப்போகும் இடர்களை முன்கூட்டியே அறிந்தபடியால் அவை வராமல் தடுப்பதற்காக அந்தக் கோட்பாட்டை முன்வைத்தார்.

சோல்பரிக் குழுவினர் சமபிரதிநிதித்துவக் கோட்பாட்டை ஏற்காவிடினும் ஜி.ஜியின் வாதத்தின் காரணத்தால் 29ஆம் பிரிவு போன்ற சிலபாதுகாப்புக்களை சிறுபான்மையினரின் நன்மை கருதி அரசியல் சாசனத்தில் உட்புகுத்த வேண்டுமென சிபார்சு செய்தனர்.

இலங்கையின் எப்பாகத்திலும் சம உரிமையோடு சமபங்காளிகளாக வாழமுடியாவிடில். தமிழ்மக்கள் பிரிந்துதான் வாழவேண்டும் என்பது அவர் கருத்தாக இருந்தது. தனிச்சிங்கள மசோதா பாராளுமன்றத்தில் சமாப்பிக்கப்பட்டபோது அந்த மசோதா நடைமுறைப்படுத்தப்பட்டால் நாடுபிளவுபடும் என்பதை பாராளுமன்றத்தில் அவர் அன்றைக்கே எடுத்துரைத்தார்.

1976 ஜனவரி 30ஆம் திகதியன்று கருணாநிதியின் தமிழ்நாடு அரசு ஊழல் குற்றச்சாட்டுக்களின் பெயரில் இந்திரா காந்தியின் மத்திய அரசாங்கத்தால் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்திய உச்சநீதி மன்றத்தின் நீதியரசர் சர்க்காரியா தலைமையில் தனிமனித விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. சட்டத்திறமைக்கு பெரும்புகழ் பெற்றிருந்த ஜி.ஜி.பொன்னம்பலம் கலைஞர் கருணாநிதியின் கோரிக்கையின் பேரில் அந்த ஆணைக்குழுவின்முன் தோன்றி வாதிட்டார். மத்திய மாநில அரசு உறவில் பின்பற்றுகின்ற இரட்டைத் தரங்களை ஆழமாக ஆராய்ந்து விளக்கிய அவர் சாட்சியம் அளிக்க இருப்பவர்களை குறுக்கு விசாரணை செய்ய அனுமதியளிக்கும்படி கோரினார். ஆனால் நீதியரசர் அதனை நிராகரித்தார். அப்போது ஜி.ஜி.பொன்னம்பலம் கருணாநிதி மீது பழிவாங்கும் நோக்குடன் கங்காரு நீதிமன் றத்தின் இயல்பும் தொழிற்பாட்டு நடை முறைகளும் இருக்கின்றன என சட்டவா தங்களுடன் வெளிப்படுத்தினார். பின்னர் தமிழ்நாட்டு வழக்கறிஞர்களைக் கொண்டதான தமது உயர் வழக்கறிஞர் குழுவினருடன் வெளிநடப்புச் செய்து அந்த நீதிமன்ற விசாரணைகளைத் தொடர்ந்தும் புறக்கணித்தார். அதுவே ஆணைக்குழு வின் கலைவுக்குக் காரணமாக அமைந்ததைத் தொடர்ந்து கருணாநிதி வெற்றி யீட்டினார். பின்னர் மெரினா கடற்கரையில் உள்ள சீரணி அரங்கத்தில் கலைஞர் கருணாநிதியால் நடத்தப்பட்ட நன்றி பாராட்டும் நிகழ்வில் உண்மையான நட் புக்கு சங்கத் தமிழ் இலக்கியம் வகுத்து ரைத்துள்ள உயர் ஒழுக்க விழுமியங்களை ஜி.ஜி.புதுப்பித்தொழுகியுள்ளார் என்று அவரைப் பாராட்டினார்.



அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் மற்றும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதான யூரர்கள் இல்லாத (ட்ரயல் - அற்- பார்) நீதிமன்றத்தில் அவர்களுக்காக வாதாடி அந்த நீதிமன்றம் அதனை விசாரிக்க உரித்துடையதல்ல என்ற சட்ட நுட்பத்தை எடுத்துரைத்து அந்த வழக்கைத் தகர்த்தெறிந்தார். மிகத்திறமையான குற்றவியல் வழக்கறிஞராக திகழ்ந்த இவர், றஞ்சனி டக்ஸி கப் வழக்கில் இங்கிலாந்தில் இருந்து வருகைதந்து சாட்சியமளித்த கைவிரல் அடையாள நிபுணரை குறுக்குவிசாரணை செய்ததைத் தொடாந்து கைவிரல் அடையாளம் பற்றிய சட்டமே திருத்தியமைக்கப்பட்டது. தற்போதைய அரசு புதிய அரசியல் சாசனமொன்றை அறிமுகம் செய்வது பற்றிச் சிந்திக்கும் இவ்வேளையில், ஜி.ஜி பொன்னம்பலம் சோல்பரி கமிசன் முன் தோன்றி ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருக்கும் பரிந்துரைகளையும் கருத்திலெடுத்து ஆராய்வது தமிழ்பேசும் மக்களது நலன்சார்ந்த மிகவும் ஆரோக்கியமான விடயமாக இருக்குமென்று நான் கருதுகின்றேன்.

# சட்டத்துறையில் கோலோச்சிய கோமான் ஜி.ஜி. பொன்னம்பலம்

அமரர் ஜி.ஜி.பொன்னம்பலத்தைப் பற்றி பல நினைவுக் கட்டுரைகள் ஏற்கனவே வெளியாகியிருந்த போதிலும், அவரின் நினைவில் தமிழ்த் தேசிய இனம் மறக்க முடியாத சில விடயங்களை இங்கு தெரியப்படுத்துவது இன்றைய காலகட்டத் தில் மிகவும் முக்கியமானது.

அமரர் ஜி.ஜியைப் பற்றி முன்னாள் ஊர்காவற்றுறைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபகர், செயலாளர் நாயகம், தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் வ.நவரட்ணத்தால் எழுதப்பட்ட தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் என்ற நூலில் கூறப்பட்டுள்ளதாவது:-

உண்மையைக் கூறப்போனால் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் நேர்மையும், மாறாத் தன்மையும் தன்னலம் பற்றிய ஆணவம் கொண்ட அவரது உண்மை நிலையை வெளிக்கொணர உதவாவிட்டாலும்கூட, அவரது அரசியல் வாழ்வு முழுவதும் அவரது சிறப்பியல்புகளாக வெளிப்பட்டன. மறுக்கமுடியாத உண்மை யாதெனில் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் அரசியல்வாழ்வில் பலஏற்ற இறக்கங்கள் ஏற்பட்ட போதும், அவர் தனது வாழ்வில் இறுதிவரை தனது நிலைப்பாட்டிலிருந்து திசை மாறவில்லை. அவரது அரசியல் எதிரிகள் கூடஅவரது இந்த உண்மைக்கு மாறாத நிலைக்கு உரிய கௌரவம் அளிக்காமல் இருக்கமுடியாது.

### மறக்கமுடியாத சில விடயங்கள்

இருபதாம் நூற்றாண்டில் முதன்முதலாக ஈழத்தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசிய உணர்ச்சியை ஊட்டிய பெருமை ஜி.ஜி. பொன்னம்பலத்துக்கே உரியது. அவர் வழியில் வந்தவர் குமார் பொன்னம்பலம். அஞ்சாநெஞ்சரான தந்தையைப் போலவே வழக்கறிஞர் ஆனார். தொழிலில் புகழ் பெற்றார். தந்தை வழி அரசியலுக்கு வந்து தமிழ் மக்களுக்கு சேவை புரிய விளைந்தார். சிங்களப் பேரினவாதத்தை விரட்டியடிக்கத் தமிழ் மக்களை திரட்டினார். உள்ளூரிலும் உலக அரங்கிலும் கண்டனக் குரல் எழுப்பினார். சிங்கள இனவெறிக் கொள்கையை அக்குவேறு ஆணி வேறாகப் பிரித்துக் காட்டினார்.

சிங்கள இனவெறியாளர்களுக்கும் அவர்களது மகுடமான பேரினவாத அரசுக் கும் அவர் சிம்மசொப்பனமானார், அவர் கலங்கவில்லை. பேரினவாதத்தை எதிர்க்கத் தயங்கவில்லை. உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காக அஞ்சாது குரல் கொடுத்தார்.

சட்டத்துறையில் ஜி.ஜி. சாதித்த முக்கியமான வழக்கு.1962 ஆம் ஆண்டின் அரசுக்கு எதிரான சதி பற்றிய வழக்கு

சிறிலங்கா அரசைக் கவிழ்ப்பதற்கு சதித்திட்டம் தீட்டியதாக இலங்கையிலே அதிஉயர் பதவிகளை வகித்த தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை, பொலிஸ் படை ஆகியவற்றின் தலைவர்களும், நிர்வாகத்துறையைச் சேர்ந்த 32 உயரதிகாரிகளும் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டனர். அந்தக் காலம் 32 உயரதிகாரிகளில் ஒருவரான கடற்படைக் கொமாண்டர் றொயிஸ் டி மெல்லைக் கைது செய்ய முடியவில்லை. அவர் தலைமறைவாக இருந்தமை இலங்கை அரசை மட்டுமல்ல உலகையே உலுப்பி விட்டது. பாதுகாப்புப் படைத் தலைமை முகாம் சூழ்ந்த மத்தியில் நீதிமன்றம் அமைக்கப்பட்டது.

அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஊசி விழுந்தால் ஓசை கேட்கும் பூரண அமைதி. நேரமும்வந்தது. நீதிபதிகள்மூவரும்உள்ளே வந்தனர். ஜி.ஜியும் தனது சக வழக்கறிஞர்களுடன் வந்து அமைதியாக உட்கார்ந்து கொண்டார். தலைமை நீதிபதியின் அமைதியான வேண்டுதலின் பின் ஜி.ஜி எழுந்தார். அவரின் கூரிய நேர்ப்பார்வை அம்பு போல் அவர்கள் உள்ளங்களையே ஊடுருவியது. பேரிடிபோல் பெரும் இடி விழுந்தது. கௌரவ நீதிபதியவர்களே! இந்த வழக்கை விசாரணை செய்ய இந்த நீதிமன்றத்துக்கு அதிகாரமே இல்லை. இந்த நீதிமன்றம் செல்லுபடியாகாது. சதி வழக்கு சட்டத்தின்படி குறிப்பிட்டநம்பர்விதிப்படிநீதிமன்றம்அமைக்கப்படவில்லை என்றார் ஜி.ஜி. இந்த வாதம் சிறு வாயால் சிதறி எல்லோருடைய உள்ளங்களிலும் சீறிப்பாய்ந்தது.

விசாரணைகள் சில தினங்கள் காரசாரமாக நடைபெற்று வெற்றிவாகை சூடி சகலரும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரபராதிகளாக விடுக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை, கிளிநொச்சியில் இரசாயனத் தொழிற்சாலை, திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டையில் இல்மனைற் தொழிற்சாலை, வாழைச்சேனையில் காகிதத் தொழிற் சாலை மற்றும் கந்தளாயில் சீனித்தொழிற்சாலை ஆகியவற்றை ஜி.ஜி.பொன்னம்பலம் 60 வருடங்களுக்கு முன்னர் நிறுவிச் செயற்பட்டதைத் தமிழ் பேசும் இனம் என்றும் மறக்க முடியாது.


உண்மை அழியாது நேர்மையும் அழியாது. உண்மையும் நேர்மையும் நிலைத்து நிற்கும்.

2016 ஆம் ஆண்டுக்கான
சோதிட பலன்கள் வழக்கம்
போன்று நாளை வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயனுள்ள கற்கைநெறிகளை வழங்குகின்றது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி

**ஜே.யூட் வோல்டன்**
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி.*



*(நேற்றைய உதயனின் 17 ஆம் பக்கத்தைய தொடர்ச்சி...)*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியில் வழங்கப்படும் கற்கை நெறிகள் பின்வருமாறு:-

**1. குடிசார் பொறியியல் கட்டுமானத் தொழில்நுட்பவியல்**
(Building Services Technology)
இந்தப் பாடெநறியைத் தொடர்வதன் மூலம் மாணவர்கள் பொறியியல் சாதனங்களை நிர்மாணித்தலையும் அதற்குப் பிந்தியதான சேவைகளையும் எவ்வாறு வழங்குவது என்ற அறிவை அனுபவம் வாய்ந்த பொறியியலாளர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். விரிவாகப் பார்ப்பின், தீயணைப்புச் சாதனங்களை நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பு, தானியங்கி சாதனங்களினூடான நிர்வாக மற்றும் பொறியியல் பராமரிப்பு, கட்டடங்களுக்கு குளிரூட்டல் சேவைகளை வழங்குதல் மற்றும் பராமரித்தல் (Air conditioning systems installation and maintenance), பாரம் தூக்கி (Life systems), நிறுவுதலும், பராமரித்தலும் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் பற்றிய அறிவையும் அதற்கான பயிற்சிகளையும்பெற்றுக்கொள்ள முடியும். அது மட்டுமல்லாது திட்ட முகாமைத்துவம் பற்றிய அறிவை யும் (Project Management) மாணவர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

**2. குடிசார் கட்டுமானத் தொழில் நுட்பவியல்**(Construction Technology)
இந்தப் பாடநெறியானது குடிசார் (சிவில்) பொறியியல் துறையின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கியிருப்பதுடன், இன்றைய காலத்தினதும் முன்னோடி தொழில் நிறுவனங்களின் தேவைகளையும் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**3. அழகுக் கலை** (Cosmetology)
இந்தக் கற்கை நெறியானது ஒருவரின் உடல் ரீதியான ஆரோக்கியம் மற்றும் வெளித்தோற்றத்தை எவ்வாறு மெருகூட்டுவது என்பது பற்றிய அறிவையும் பயிற்சியையும்வழங்குகிறது. உதாரணமாக அழகுக் கலை சார்ந்த ஊட்டம், உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி உயர் தர அல்லது மேம்பட்ட சிகை சிகிச்சைகள், உயர்தர அல்லது மேம்பட்ட சிகை அலங்காரங் கள் உயர்தரமான அல்லது மேம்பட்ட தோற் பராமரிப்பு, கை, கால் பராமரிப்பு, உயர்தரமான அல்லது மேம்பட்ட அழகுச்சிகிச்சை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**4. விவசாய இயந்திரவியற் தொழில் நுட்பவியல்**
(Farm machinery Technology/ Agricultural machinery Technology)
விவசாய இயந்திரவியற் தொழில்நுட்பக் கற்கை நெறியானது, தற்காலத்தின் விவசாயத்தில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களுக்கு அமைவான பாடவிதானத்தை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக:-
1. விளைநிலங்களில் பயன்படுத்தப்படும் எந்திரங்கள் அவற்றின் செயற்பாட்டுப் பொறிமுறை, அவற்றில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள், விவசாய நடவடிக்கைகளுக்கு அமைவாக எந்திரங்களை வடிவமைத்தல், எந்திரங்களில் ஏற்படும் பிரச்சினைகளை இனங்காணலும், அவற்றைத் தீர்த்தலும்.
2. சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் தூறல் நீர்ப்பாசனத்தைத் திட்டமிடலும் வடிவமைத்தலும்.
3. கழிவு முகாமைத்துவம்
போன்ற பாடவிதானங்களுக்கான கோட்பாடுகளையும், செய்முறைவிளக்கங்களையும்உள்ளடக்கியுள்ளது. இந்தக் கற்கை நெறியைத் தொடர்வதன் மூலம் எந்திரவியல் சார்ந்த விடயங்களில் தேர்ச்சி பெறுவது மட்டுமல்லாமல், சூழலியல் சார்ந்த விடயங்களைப் பற்றிய அறிவையும்வளர்த்துக்கொள்ளக்கூடியதாக இருக் கும். எமது மண்ணின் தன்மைக்கேற்ப அவற்றின் உருவ அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம். அதேபோல் நீர் முகாமைத்துவம் பற்றிய அறிவு, சொட்டு நீர்ப்பாசனம், தூறல் நீர்ப்பாசனம் போன்றவற்றின்மூலம்எட்டப்படுகின்றது.

> **பல்கலைக்கழக கல்லூரிகளின் வகிபாகம் ஒரு தனிமனித திறன் விருத்தியில் ஆரம்பித்துக் கைத் தொழில்துறைசார் உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளுக்கு வேண்டிய தரமான மனித வலுவை வழங்குவதனூடாக நாட்டின் பொருளாதார சமூக அபிவிருத்திக்குப் பெரிய சேவையாற்றும் என்பது எல்லோரினதும் எதிர்பார்ப்பாகும்.**

**5. உணவுத் தொழில்நுட்பம்**
நவீன காலகட்டத்தில் காலத்தின் தேவைக்கேற்ப உணவு உற்பத்திக்கான தேவை அதிகரித்துச் செல்கின்றது. இதனால் உணவுத் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சி முக்கிய பங்கு வகிக்கின்றது. இதன் காரணமாக கைத்தொழிற் சாலைகளில் உணவுத் தொழில்நுட்ப வல்லுநர்களான நடுத்தர மற்றும் மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. எனவே உணவுத் தொழில்நுட்பத்துறையில் உயர் டிப்ளோமா கற்கை நெறியைப்பூர்த்திசெய்கின்றடிப்ளோமா பட்டதாரி ஒருவர், அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தரக்கட்டுப்பாட்டு முகாமையாளர், உணவுப் பகுப்பாய்வாளர், உற்பத்தி முகாமையாளர், உணவுத் தொழில்நுட்ப ஆலோசகர், தர நிர்ணய அதிகாரி போன்ற தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**6. விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறை முகாமைத்துவம்**
இந்தக் கற்கை நெறியானது சுற்றுலாப் பயணிகள் மற்றும் சுற்றுலாத்துறைசார் துறைகளை முகாமை செய்வதுடன் தொடர்புபட்டதாகும். இந்தக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் பின்வரும் தொழில்துறைகளில் நடுத்தர முகாமையாளராக, ஆலோசகர்களாக, மேற்பார்வையாளர்களாகத் தொழில் புரிவதற்குத் தகுதி உடையவர்களாகக் காணப்படுவர். மேலும் இந்தக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் ஹோட்டல் துறை, இலங்கைச் சுற்றுலாத்துறை, பொழுது போக்கும் இடங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், சர் வதேச தொழில்சந்தைகளில் சேவையாற்றுவதற்கு தகுதி உடையவர்களாகக் காணப்படுவர்.

**7. இயந்திரமின்னணுவியல்**
(Mechatronic Technology)
மேற்படி பாடநெறியானது இன் றைய நவீன யுகத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டு மிக அண்மைக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கற்கை நெறியாகும். வெளிநாடுகளில் ஏற்கனவே பிரபலமான இந்தக் கற்கை நெறிக்களின் தேவை எமது நாட்டில் இப்பொழுதுதான் உணரப் பட்டுள்ளது.
இந்தக் கற்கை நெறியானது மின்னியல்(Electrical), இலத்திரனியல் (Electronics), இயந்திரவியல்(Mechanical), கணினி தொழில்நுட்பவியல் (Computer science) ஆகிய நான்குபிரதானமான Engineering துறைகளை இணைத்து உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் Process Control, Motor Control, PLC, Robotics என்ற நான்கு இணைப் பாடெநறிகளைக் கொண்டுள்ளது.
இந்தக் கற்கை நெறியைக் கற்று முடிப்போர்க்கு அதிக வேலை வாய்ப்புக்கள் உள்ளன என்பது திண்ணம். பொதுவாகச் சொன்னால், எங்கெங்கே தானியங்கி இயந்திரங்களின் பயன்பாடு உள்ளதோ, அங்கெல்லாம் Mechatronics படித்தவர்களின் தேவை உள்ளது. இன்னும் இலகுவாகச் சொல்லப்போனால், இப்பொழுது யாழ்ப்பாணத்தில், புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. புகையிரதப்பாதை இயங்குகின்றது, புதிய வகை Hybrid கார்கள் ஓடுகின்றன. வீதிச் சமிக்ஞைகள் (Road Signals) அலுவலகங்களில் Finger print அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. எனவேஇந்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் இயங்காமல் போனால் அவற்றையார்சரிசெய்வது? இவற்றின் இயக்கத்தில்தேவைக்கேற்ப எப்படி மாற்றத்தைச் செய்வது? இத்தகைய வினாக்களுக்கு இந்த (Mechatronics)பாடநெறியே பதிலாகும்.

**8. உற்பத்தித் தொழில்நுட்பவியல்**
(Production Technology/ Mechanical& Manufacturing Technology)
மேற்படி பாடநெறியானது பொறியியல் சார்ந்த தொழில்நுட்பத்தையும் இயந்திரப் பாகங்களை வடிவமைத்தல் (Machine Design) மற்றும் தயாரித்தல் தொடர்பான நவீன தொழில்நுட்பத்தை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. மேற்படி பாடெநறியைக் கற்பதன் மூலம் மாணவர்கள் இன்றைய உலகுக்கான தொழில்நுட்ப அறிவையும் நவீன இயந்திரங்களை கையாளுதலுக்கான பயிற்சியையும் பெற்றுக் கொள்ளமுடியும். அதுமட்டுமல்லாது ஒரு வேலையை எவ்வாறு திட்டமிடல்(Project Plan), எவ்வாறு நிர்வகித்துக் கொள்ளல் ஆகியவற்றுடன் (Project Mangement) என்றவாறான அறிவையும் அதன் பிரயோகங்களையும் (Applications) கற்றுக்கொள்ளவும் நடைமுறைப்படுத்தவும் கூடியதாக இருக்கும். அது மட்டு மல்லாதது இயந்திரபாகங்களை கணனி மென் பொருள்கள் மூலம் உருவாக்கும் முறையையும் அதன் பிரயோகங்களையும் கற்றுக் கொள்ளலாம்.
எனவே, பல்கலைக்கழக கல்லூரிகளின் வகிபாகம் ஒரு தனிமனித திறன்விருத்தியில் ஆரம்பித்துக் கைத்தொழில் துறைசார் உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளுக்கு வேண்டிய தரமான மனித வலுவை வழங்குவதனூடாக நாட்டின் பொருளாதார, சமூக அபிவிருத்திக்குப் பெரிய சேவையாற்றும் என்பது எல்லோரினதும் எதிர்பார்ப் பாகும். இந்த எதிர்பார்ப்பை ஈடேற்ற நாட்டின் சகல மக்கள் தொகுதியினரும் குறிப்பாக மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் இன்னும் கைத்தொழில்துறைசார் வல்லுநர்களும் தொழில் வழங்குவோரும் தமது அளப்பரிய பங்களிப்பை சமூகம் சார் பொது நோக்குக்காக வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இன்றைய தினம்

1849 - புதிய றோமன் மக்கள் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது.
1895 - வில்லியம் ஜி.மோர்கலால் உருவாக்கப்பட்ட மின்றோ நெற் எனும் விளையாட்டு பின்னாளில் கரபந்தாட்டமாகப் பரிணமித்தது.
1900 - டேவிஸ் கோப்பைக்கான போட்டி ஆரம்பிக்கப்பட்டது.
1942 - இரண்டாம் உலக மகாயுத்தம். அமெரிக்க படை உயரதிகாரிகள் முதன் முறையாகக் கூடி அமெரிக்காவின் படை உத்திகளை வகுத்தனர்.
1951 - கொரியப் போரின்போது ஜியோசாங் படுகொலை இடம்பெற்றது.
1959 - முதலாவது கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையை சோவியத் ரஷ்யா நடவடிக்கைகளில் இறக்கியது.
1965 - வியட்நாம் போரில் அமெரிக்கப் படைகள் முதற் தடவையாக தென் வியட்நாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.
1969 - போயிங் 747 முதலாவது பரீட்சார்த்தப் பறப்பை மேற்கொண்டது.
1971 - அப்பலோ 14சந்திரத் தரையிறக்கத்தின் பின்னர் புவிக்குத் திரும்பியது.
1975 - சோயுஸ் 17 சோவியத் விண்கலம் புவிக்குத் திரும்பியது.
1986 - ஹேலி வால் நட்சத்திரம் கடைசித் தடவையாக சூரியக் குடும்ப சுற்றுவட்டப் பாதையில் தென்பட்டது.
1991 - லிதுனியா மக்கள் சுதந்திரத்துக்கு வாக்களித்தனர்.
1996 - ஐரிஷ் இராணுவம் 18 மாத கால போர் நிறுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வந்து. லண்டன் கனறிவார்ப் பகுதியில் பெரிய அளவில் குண்டு வெடிப்பை மேற் கொண்டது.
1992 - இந்திய, பாகிஸ்தான் எல்லையில் முஸ்லிம்கள் அத்துமீறி நுழைய கங்கணம் கட்டியதால் பதட்டம்.
1997 - 25 லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆதிமனிதன் பயன்படுத்திய ஆயுதங்கள் எதியோப்பியாவில் கண்டெடுப்பு.



# வர்ணம் தீட்டுவோம்...



# பெறுமதி வாய்ந்த அம்பர் கட்டிகள்

அம்பர் (amber) என்பது பொன் நிறத்தில் உள்ள ஒரு பொருள். இது காலத்தால் சற்றேறக்குறைய கல்போன்று ஆகிவிட்ட மரப்பிசின் ஆகும். பெரும்பாலான அம்பர் கட்டிகள் பல மில்லியன் ஆண்டுகளாய் உறைந்து கெட்டியாய் ஆன மரப்பிசின் ஆகும். அம்பர் என்பது தமிழில் ஓர்க் கோலை, பொன்னம்பர், பூவம்பர் , மீனம்பர், தீயின் வைரம் செம்மீன் வைரம், மலக்கனம், கர்ப்பூரமணி என்னும் பல சொற்களால் குறிக்கப் படுகின்றது. மரப்பிசினில் விழுந்துவிட்ட சிறு பூச்சிகளும் அப்படியே காலத்தால் உறைந்திருப்பது பார்க்க வியப்பூட்டுவதாகும். இவ்வாறு பழங்காலத்து பயினி மரங்களின் மரப்பிசினில் விழுந்து விட்ட பூச்சிகளில் சில இன்றுஉலகில் இல்லாமல் முற்றுமாய் அற்றுப்போய்விட்டன. இந்த அம்பர் கட்டிகள் பால்ட்டிக் கடற்கரைகளிலும் கடலடியிலும் கிடைக்கின்றன. சில சிறு அம்பர் கட்டிகளை மீனின் வயிற்றில் இருந்தும் எடுத்துள்ளனர்.



திமிங்கிலத்தின் எச்சமாக வெளிவரும் 'அம்பர்' எனும் திரவம், வாசனைத் திரவியம் மற்றும் பல்வேறு பயன்பாட்டுக்கு பயன்படுவதால், இது, கிலோ, பல லட்சம் ரூபாவுக்கு விலைபோகிறது. வாசனைப் பொருள்களில் எத்தனையோ ரகங்கள் உள்ளன. இதற்கெல்லாம்மேலாக அம்பர் எனும் விலை உயர்ந்த வாசனைத் திரவியம் உற்பத்தியாகும் விதம் குறித்து, பலரும் பல விதமாகக் கூறுகிறார்கள். ஆனால் அம்பர், திமிங்கிலம் உமிழும் எச்சத்திலிருந்து உற்பத்தியாகிறது என்பது தான் உண்மை.

ஆழ்கடலில் வசித்து வரும் திமிங்கிலம், அன்றாட உணவாக, ஒருவகை மீனையே விரும்பி உட்கொள்கிறது. கூரிய முட்களை உடைய இந்த மீனைச் சாப்பிடும்போது இதன் முட்கள் தொண்டையில் குத்தி விடும். இதன் காரணமாக ஜீரண சக்தியை இழக்கும் திமிங்கிலம், தொண்டையில் மாட்டிக் கொண்ட முள்ளை வெளியேற்ற, வாந்தி எடுக்கும்போது ஒரு வகைத் திரவம் வெளியேறுகிறது. இதையே திமிங்கலத்தின் எச்சம் என்பர். பெருங்கடலில் மிதந்து வரும் அம்பர், கடல் அலைகளால் கரைக்கு அடித்து வரப்படும் போது, படிப்படியாக உருண்டை வடிவம் பெற்று, கடற்கரையில் ஒதுங்குகிறது. இது கறுப்பு; வெள்ளை நிறமாகக் காணப்படும்.

(தொடரும்)

# இரத்த தானம் செய்வோம்

தைப்பூசத் தினத்தையொட்டி, பத்துமலைக்குக் குடும்பத்தோடு சென்றிருந்தோம். பத்துமலை வளாகத்தில் முருகப் பெருமானைத் தரிசிக்க எங்களைப் போலவே ஆயிரக் கணக்கான மக்கள் அங்கே கூடியிருந்தனர். பக்தர்கள் பலர் தங்களின் வேண்டுதலுக்கிணங்க காவடிகள் தூக்கி ஆடி வந்தனர். காவடிகள் பார்க்க மிக அழகாய்க் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் இருந்தன.

பத்துமலையின் அடிவாரத்துக்குச் செல்லச் செல்ல மக்கள் கூட்டம் அதிகமாகி ஒருவரோடொருவர் நெருக்கிக் கொண்டிருந்தனர். படிகள் ஏற சில அடிகளே இருந்தன. அப்போது இடது புறத்தில் "இரத்த தானம் செய்வீர்" என்று எழுதிய பெரிய அட்டை ஒன்று கண் ணில்பட்டது.

அங்கே உள்ளே மண்டபத்தில் சிலர் படுத்திருக்கக் கண்டேன். இவர்களெல்லாம் இரத்தம் கொடுக்கிறார்களா...? இரத்தம் வெளியேறினால் வலிக்காதா...? என்றெண்ணி குழம்பியபடி, அப்பாவின் கைகளைப் பிடித்தபடி படியேறுகிறேன்.

படியேறி முருகனைத் தரிசித்தபோது, ஏறிய களைப்பு மறைந்து போனது. முருகனின் திருமுகம் கண்டதும் மனம் மகிழ்வு கொண்டது.

முருகனைத் தரிசித்து முடித்த பின்பு, மலைமேலிருந்து கீழிறிங்கினோம். அப்போதும் கீழே மண்டபத்தில் இரத்ததானம் செய்பவர்களைப் பார்த்தேன்.

மறுநாளும் எனக்கு அதே எண்ணம். "இரத்தம் கொடுக்கிறார்களே அவர்களுக்கு வலிக்காதா..? சில நாள்களுக்கு முன்பு எனக்குக் காலில் அடிப்பட்டு இரத்தம் வெளியேறினபோது.. எனக்கு எப்படி வலித்தது. அது போல... இவர்களுக்கும் உடம்பிலிருந்து இரத்தம் வெளியேறினால் வலிக்காதா..'எனக்குள் குழப்பம்.

அம்மாவிடம் கேட்கிறேன் "அம்மா பத்துமலை அடிவாரத்தில் இரத்ததானம் செய்வீர் என்று பார்த்தேனே... நிறையப் பேர் படுத்திருக்கக் கண்டேன். அவர்கள் எல்லோரும் இரத்தம் கொடுத்தார்களா...? இரத்தம் கொடுத்தால் வலிக்காதா...?.

"இரத்தம் கொடுத்தால் வலிக்காது" என்கிறார் அம்மா.

எனக்கு ஆச்சரியம். அதெப்பிட என் காலில் அடிபட்டு இரத்தம் வெளியேறியபோது கால் வீங்கிக்கொண்டதே. வலித்ததே... அவர்களுக்கும் அப்படித்தானே இருக்கும். அதுவும் எவ்வளவு இரத்தம் கொடுப்பார்கள். அவர்கள் உயிர்போய்விடாதா..."

"அவர்களுக்கு வலிக்காது உயிரும் போகாது.



வலிக்காமல் ஊசி மூலமாக கொஞ்சம் இரத்தம்தான் எடுப்பார்கள். அந்த இரத்தமும் ஓரிரு வாரங்களில் அவரவரது உடம்பில் ஊறிவிடும். அதனால் இரத்தம் கொடுக்கப் பயப்படத் தேவையில்லை. மேலும் இரத்தம் கொடுப்பது மிகவும் புண்ணியம்" என்கிறார்.

"இரத்த தானத்தைப் பற்றி ஓர் அற்புதமான கதை சொல்கிறேன், கேள்" என்று அம்மா கூறத்தொடங்கினார்.

"பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் ஏற்பட்ட மகா பாரதப்போரின் இறுதிக் கட்டம். கர்ணன் அர்ச்சுனனிடம் தோற்றுப்போய் தேரின் கீழே விழுகிறான். அடுத்து அர்ச்சுனன் விடுத்த அம்புகள் யாவும் கர்ணன் உயிரைத் துளைக்காமல்... அவன் மார்பில் மாலையாய் விழுகின்றன.

அர்ச்சுனன் ஆச்சரியமடைந்தவனாய் கண்ணனிடம் விசயத்தைக் கூறி காண்பிக்கிறான். கண்ணன் அர்ச்சுனனிடம் அம்பு விடுவதை நிறுத்தச் சொல்லிவிட்டுத் தேரிலிருந்து, இறங்கி, கர்ணனைக் காணப்போகிறான். கர்ணனை நெருங்கிய வேளையில், ஒரு வயதான வேதியர் ரூபத்தில் உருமாறிச் செல்கிறான். கர்ணனின் நிலைகண்டு கலங்குவது போல்நடிக்கிறான். "கர்ணா உன்னிடம் யாசகம் கேட்கலாமென்று வந்தேனே. நீ கேட்பவருக்கு இல்லையென்று சொல்லாது கொடுப் பவன் என்று சொன்னார்களே. அதைநம்பி உன்னைக் காணவந் தேனே. நான் வந்தநேரம் சரியில்லையோ..." என்று புலம்பி நின்றான்.

உயிர்போகும் நிலையிலும் கர்ணனின் முகத்தில் பிரகாசம். "வேதியரே என்னிடம் உள்ளதைக் கேளுங்கள்.. கொடுக்கிறேன் என்கிறான் கர்ணன். "உன் புண்ணியம் அனைத்தையும் கொடுப்பாயா..." என கண்ணன்கேட்க...

"ஆகா... என்ன பாக்கியம் செய்தேன்" என்றுதனது மார்பில் துளைத்திருந்த அம்பைப் பிடுங்கி வழிந்தோடும் இரத்தத்தைக் கைகளில் ஏந்தி... "நான் இதுவரை செய்த புண்ணியங்களுக்கு ஈடாக இதைக் கொடுக்கிறேன்" எனக்கூறி கண்ணனிடம் கொடுக்கிறான்.

கர்ணனின் தயாளதரும குணத்தைக் கண்டு நெகிழ்ந்து போன கண்ணபிரான் தன் சுயரூபத்தோடு கர்ணனுக்குக்காட்சி தருகிறார்.

"என்னபேரின்பம்" என்றுகர்ணன் மகிழ்ந்தபோது...

"கர்ணா உனக்கு என்ன வேண்டும்கேள்" என கண்ணன்கேட்க "கண்ணா நான்கொடுக்கும் இந்த இரத்த தானம்தான் எல்லாப் புண்ணியங்களுக்கும் ஈடானது என்றால், இனி வரும் காலங்களில் இந்தப் பூவுலகில் எவரொருவர் இரத்தம் தானம் கொடுக்கிறார்களோ.. அவர்களுக்கும் புண்ணியம் கிடைக்க அருள் புரியவேண்டும்" என்கிறான்.

"கர்ணன்தான் இரத்த தானத்தைத் தொடக்கி வைத்தவன். அன்னதானம்ஒருநாள் பசியைப்போக்கும். ஆனால் இரத்தானமோ உயிர் காக்கும் ஆற்றல்கொண்டது. அதற்கு ஆரோக்கியமாக இருக்கவேண்டியதும் அவசியம். உடலை ஆரோக்கியமாகப்பாதுகாத்து நல்ல இரத்தத்தைத் தானமாக வழங்கவேண்டும்" என்றார் அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவிலூர் கலா

# புலமைப் பரீட்சைக்கு வயது சரியா?

பத்து வயதுப் பிஞ்சுகள் பலாத்கார முனையில் கல்வியை உள்வாங்கும் அவலம். பெற்றோரின் கௌரவத்தை மேம்படுத்த பிள்ளைகள் நடத்தும் கல்விக்கான போராட்டம். குழந்தைகளின் புலமையைப் பரீட்சிக்க கல்வியமைச்சு நடத்தும் கல்விப்போர். ஆம்! ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரீட்சையானது பிஞ்சுகள் உடலிலும் உள்ளத்திலும் பெற்றோராலும், ஆசிரியர்களாலும், ஏன் கல்வியமைச்சாலும் கட்டவிழ்த்துவிடப்படும் ஒரு வன்முறை என்றே சொல்ல வேண்டும். ஆரோக்கியமான ஒரு கல்விச் சமூகத்தை உருவாக்க பத்து வயதுப் பிள்ளைகளைத் தேர்ந்தெடுப்பது சாத்தியமல்ல. இன்றைய கல்வியானது பிள்ளைகளுக்கு பெரும் சுமையாக மாறிவிட்டது. அதிலும் புலமைப் பரிசில் பரீட்சையானது குழந்தைகளின் பிஞ்சுப் பருவத்தைக் காவு கொள்கிறது என்பது கசப்பான உண்மை.

கல்வியில் சாதனை படைத்த கல்வியியலாளர்கள், சான்றோர்கள், விஞ்ஞானிகள் அனைவரும் புலமைப் பரீட்சையில் சாதனை படைத்தவர்களா? என்பதைக் குழந்தைகள் மனதை சுமை தாங்கியாக்கும் அனைவரும் சிந்திக்க வேண்டும். கல்வி ஒவ்வொரு பிள்ளையினதும் அடிப்படை உரிமை. சமூகத்தில் உறுதியாக நிற்க கல்வி மிகமிக முக்கியம். அதைவிட, குழந்தைப்பருவம் உளத்தாக்கம் அடையாதிருப்பது அதைவிட முக்கியம். விரலுக்கேற்றது தான் வீக்கம் என்பார்கள். பத்துவயதில் சுமக்க முடியாத கல்விச் சுமையை எப்படிச் சுமப்பது? அதனைச் சுமத்துவதுதான் நியாயமானதா? புலமைப் பரிசில் பரீட்சைக்காக அரசு தேர்ந்தெடுத்த வயது சரியானதா? என்பதை மீளாய்வு செய்ய வேண்டிய தருணம் இது.

இந்தப் பரீட்சையானது பெற்றோருக்குப் பெரும் கௌரவத்தை ஏற்படுத்துவதாக உணர்கின்றனர். படிக்காத பெற்றோர்கூட, இந்தப் பரீட்சையின்போது "படிபடி" எனப் பிள்ளையை ஆவேசத்தோடு ஆக்கிரமிக்கின்றனர். பிள்ளை சித்தியடையாவிட்டால் நையப்புடைக்கின்றனர். சித்தியடைந்த பிள்ளையோடு ஒப்பீடு செய்து மனதை நோகடிக்கின்றனர்.

பரீட்சைக்குத் தோற்றும் பிள்ளை அந்த வருடம் ஓய்வு நேரமே இன்றி, விளையாடவோ அல்லது உறவினர் வீடுகளுக்குச் செல்லவோ முடியாத நிலை. தூங்கும் நேரம் கூட அரைவாசியாகக் குறைந்து விடும். இங்கு பிள்ளையின் மனநிலையை எவரும் கவனத்தில் கொள்வதில்லை. இந்தப் பரீட்சையானது ஐந்தாம் ஆண்டு பிள்ளைகளால் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. கட்டாயத்தால், நிர்ப்பந்தத்தால் தம்மை வேதனையோடு தயார்ப்படுத்துகிறார்கள். ஐந்தாம் ஆண்டுக்குப் பிள்ளை வந்துவிட்டால் முக்கிய கட்டத்துக்கு வந்துவிட்டதாக உணரும் பெற்றோர், குழந்தைப் பருவம் என்பதை மறந்து விடுகின்றனர். பாடசாலைக்கும் பாடசாலை முடிந்ததும் பிரத்தியேக வகுப்புக்களுமாகப் பிள்ளைகளை அலைக்கழிக்கின்றனர். அளவுக்கு மீறிய சுமையைச் சுமத்துவதை, அன்று கையில் ஓரிரு புத்தகம் கொண்டு சென்று படித்த மாணவக் குழந்தைகள் இன்று உடல் தாங்க முடியாத புத்தகச்சுமையை முதுகில் சுமந்து கல்வியைக் கற்கும் நிலை உருவாகிவிட்டது. அந்த அளவுக்கு கல்வி நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. கல்வி ஒன்றுக்காக உடலும் உள்ளமும் சுமைதாங்கியாக செயற்படுவதைக் காணமுடிகிறது. சிறுவர் உரிமையை வலியுறுத்துகின்ற அரசு, ஐந்தாம் ஆண்டுப் பரீட்சையின்போது அவர்களது பல உரிமைகள் அறிந்தும் அறியாமலும் பறிக்கப்படுவதை உணர்வதில்லை.

பிள்ளைகளின் உளநெருக்கடிகள், வலிகள், வேதனைகளைக் கருத்தில் கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். நூறு புள்ளியை அண்மித்த புள்ளியாகக் கருதி மாணவக் குழந்தைகளைப் பாராட்டிய கல்வி அமைச்சு 2015 இல் எழுபது புள்ளிகள் வரை பெற்ற குழந்தைகளைப் பாராட்டி சான்றிதழ் வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. எழுபதுக்குக் கீழ் புள்ளிகள் பெற்ற மாணவக் குழந்தைகளின் மனநிலையை ஒரு தடவை நோக்கின், அவர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள் என்கிற உண்மை புலப்படும். எனவே, பத்து வயது, புலமைப்பரீட்சைக்கு ஏற்புடையதல்ல. வயதில் மாற்றம் வேண்டும். புலமைப் பரீட்சையை கவனத்தில் கொள்ளும் கல்வி அமைச்சு அதற்கான வயதைப் பத்தாக நிர்ணயம் செய்வதில் தப்பிழைத்து விட்டது. கட்டாயமானதென நினைத்தால் வயதை மாற்றியமைக்க வேண்டியது மிகமிக கட்டாயமாகும்.

ஆக, பிஞ்சுக் குழந்தைகளின் உடல் உள நெருக்கீடுகளையும், சுமைதாங்கும் நிலையையும் கருத்தில் கொண்டு, அவர்களது உரிமைகளை முழுமையாக வழங்கும் விதத்தில் புலமைப்பரீட்சை வயதை மாற்றியமைக்க வேண்டும். பிஞ்சுகள் உளத்தாக்கத்தில் இருந்து விடுபட மாற்றம் ஒன்றே தகுந்த பரிகாரம். பிள்ளைகளுடைய இந்தக் கல்விப் பயணத்துக்கான போராட்டத்தை நியாய வழியில் போராட வேண்டும். தகுந்த நியாயமான கருத்துக்களை முன்வைத்து கல்வி அமைச்சின் மூடிய கண்களைத் திறக்க வேண்டும். வலியோடும், சுமையோடும் புலமைப்பரீட்சைக்காகப் போராடும் பிஞ்சுகளுக்கு நியாயம் கிடைக்கப் பெரியோர்கள் அனைவரும் பாடுபட வேண்டும். குழந்தைகளுக்கு நீதி கிடைக்க வேண்டும். புத்திஜீவிகளே முன்வருவீர்களா?

> "படிக்காத பெற்றோர்கூட, இந்தப் பரீட்சையின்போது "படிபடி" எனப் பிள்ளையை ஆவேசத்தோடு ஆக்கிரமிக்கின்றனர். பிள்ளை சித்தியடையாவிட்டால் நையப்புடைக்கின்றனர். சித்தியடைந்த பிள்ளையோடு ஒப்பீடு செய்து மனதை நோகடிக்கின்றனர்."



# அமெ. அணுகுமுறைகள் தோல்வியடைகின்றனவா?

சிரியாவிலும், ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும், அமெரிக்காவினதும் அதன் நட்பு நாடுகளினதும் அணுகுமுறைகள் தோல்வி அடைந்து வருகின்றமை பதவியின் இறுதிக்காலத்தில் இருக்கும் ஒபாமா நிர்வாகத்துக்குப் பெரும் சவாலாக இருக்கப்போகிறது.

ஈராக்குக்கு சுமார் ஒன்றரை இலட்சம் துருப்புகளை அனுப்பி சதாம் ஹுசேனின் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு 2011 இறுதியில் போர் முடிவடைந்துவிட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவித்தது அமெரிக்கா. ஆனால், இந்த அறிவிப்பு வெளிவந்து நான்கு வருடங்கள் கழிந்தும்கூட தனது துருப்புகளை விலக்கிக் கொள்ளமுடியாத நிலைமை அமெரிக்காவுக்கு இருந்து வருகிறது. திட்டமிட்டதற்கு மேலதிகமாக துருப்புக்களை ஈராக்கில் அமெரிக்கா வைத்துக்கொண்டிருக்கிறது.

ஆப்கானிஸ்தானிலும் இதே நிலைமைதான். ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகளின் இராணுவத் தலையீடு ஏற்பட்டு 14 வருடங்கள் ஆகியும் தலிபான்களுடன் தனித்துநின்று போராடும் பலத்தை ஆப்கானிஸ்தான் படைகளால் இன்னும் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கிறது. ஆப்கானிஸ்தானில் ஆயிரம் அமெரிக்கப்படைகள் தவிர்ந்த ஏனைய படைகளை இந்த ஆண்டில் விலக்கிக்கொள்ளப்போவதாக ஒபாமா நிர்வாகம் முன்னர் அறிவித்திருந்தபோதிலும், கடந்த ஒக்ரோபர் மாதம் ஒபாமா நிர்வாகம் விடுத்த அறிவிப்புக்கு அமைய 9,800 அமெரிக்கப் படைகள் தற்பொழுது ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ளன. தலிபான்கள் பலமடைந்து வருகிறார்கள்.

சிரியாவிலும் அமெரிக்கா இக்கட்டான நிலையில் உள்ளது. ஜெனிவாவில் ஆரம்பமான பேச்சுகள் எதிர்வரும் 25ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி அஸாத்தின் ப்டைகள் அடுத்தடுத்து வெற்றிகளை ஈட்டி வருகின்றன. அஸாத்தை தொடர்ந்து பதவியில் வைத்துக்கொள்வதற்கு ரஷ்யாவும், ஈரானும் விரும்புகின்றன. அதனால் சமாதானப் பேச்சுகளில் ஆர்வமற்றிருப்பதுடன், இராணுவத் தீர்வையே இந்த நாடுகள் விரும்புகின்றன. சிரியாவின் அலெப்போ நகரில் கடந்த புதனன்று நடைபெற்ற சண்டையில் அஸாத்துக்கு எதிரான கிளர்ச்சிப் படைகள் துருக்கி எல்லையுடன் வைத்திருந்த கடைசி விநியோகப்பாதையும் அஸாத் ஆதரவு அரச படைகளால் துண்டிக்கப்பட்டுவிட்டது. ஐந்து வருடங்களாக நடைபெறும் சிரிய உள்நாட்டுப் போரில் இது ஒரு புதிய திருப்பமாகும். ரஷ்யா இராணுவ ரீதியில் தலையிட்ட பின்பு ஏற்பட்டுவரும் கள நிலை மாற்றங்கள் ஜனாதிபதி அஸாத்துக்கு சார்பாகவே இருந்து வருகின்றன.

ஈராக்கிலோ? ஆப்கானிஸ்தானிலோ? போன்றல்லாது ரஷ்யாவின் இராணுவத் தலையீட்டுக்குப் பின்னர் சிரியாவின் நெருக்கடி சிக்கலடைந்து வருகிறது. ரஷ்ய விமானங்கள் நேட்டோ அமைப்புக்கு சவால் விடுப்பது போன்று துருக்கி எல்லையில் அத்துமீறிப் பறக்கின்றன. சிரியாவில் அஸாத்துக்கு எதிரான கிளர்ச்சிப் படைகள் தோற்கடிக்கப்படும்வரை ரஷ்யாவின் இராணுவத் தலையீடு இருப்பதற்கான சாத்தியங்களே காணப்படுகின்றன.




ஆகவே, இந்த மூன்று நாடுகளிலும் உள்ள கள நிலைமை ஒபாமா நிர்வாகத்தக்குப் பெரும் சவாலாகவே இருந்து வருகிறது. ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் இருந்து அமெரிக்கா தனது படைகளை முற்றாக விலக்கிக்கொள்வது பிரச்சினைக்குத் தீர்வாகமாட்டாது. அந்த நாடுகளின் பெரும்பான்மை மக்களின் விருப்புக்கு ஏற்ற ஆட்சியை உருவாக்குவதன் மூலமே அந்த நாடுகளின் பிரச்சினைகளுக்கான தீர்வைக் காணமுடியும். சிரியாவில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டு பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்ற ஒருவர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும். மத்திய கிழக்கு நாடுகளில் நீண்டகாலம் ஆட்சிசெய்யும் சர்வாதிகாரிகளை வீழ்த்தும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது அரபு வசந்தம். அந்த நாடுகளில் இன்னும் மோசமான சர்வாதிகாரிகளை, கொடுங்கோல் ஆட்சியாளர்களை இது உருவாக்குமானால் அதற்கான பொறுப்பை அமெரிக்காவும் அரபு வசந்தத்துக்கு ஆதரவு வழங்கிய நாடுகளும்தான் ஏற்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** திறந்த மனதுடன் நண்பருடன் பழகுவீர்கள். வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு உருவாகும். தொழிலில் விற்பனை சிறந்து இலாபம் அதிகரிக்கும். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**இடபம்:** சுய நலத்துக்காகச் சிலர் உங்களைப் பயன்படுத்த முயற்சிப்பர். கூடுதல் உழைப்பால் தொழிலில் வருமானம் சீராகும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும்.

**மிதுனம்:** நிதானித்துப் பேசுவதால் நற்பெயரைப் பாதுகாக்கலாம். தொழிலில் உருவாகுகிற இடையூறைச் சரிசெய்ய முயல்வீர்கள். இலாபம் சுமார். பாதுகாப்புக் குறைவான இடத்துக்குச் செல்ல வேண்டாம்.

**கடகம்:** நண்பர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப்பெறுவர். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**சிங்கம்:** நீண்ட நாள் திட்டம் செயல் வடிவம் பெறும். தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெற்றோரின் தேவை அறிந்து பூர்த்தி செய்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும்.

**கன்னி:** விடாமுயற்சியுடன் செயற்படுவது நல்லது. தொழிலில் மிதமான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். வாகனப் பயணத்தில் மித வேகத்தைப் பின்பற்றவும்.

**துலாம்:** மாறுபட்ட கருத்து உள்ளவர்களிடம் விலகி நடப்பது நல்லது. தொழிலில் மிதமான இலாபம் கிடைக்கும். வீண் செலவு ஏற்பட வாய்ப்புண்டு. பெண்கள் நகை இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

**விருச்சிகம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள், சலுகை கிடைக்கப் பெறுவர். மனைவி விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**தனுசு:** எதிலும் முன் யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழிலில் வருமானம் சுமாராக இருக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்தைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பார்த்த சுப செய்தி வரத் தாமதமாகலாம்.

**மகரம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருள் வாங்குவர்.

**கும்பம்:** நண்பர்களின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழிலில் வருமானம் சராசரி அளவில் இருக்கும். சுய கௌரவத்தைப் பாதுகாக்கச் செலவு செய்ய நேரிடும். ஒவ்வாத உணவுகளைத் தவிர்ப்பது நல்லது.

**மீனம்:** சவால்களை ஏற்றுச் சாதனை படைப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப்பெறுவர். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.



Surendhar @ssurenr · 39m

போரில் வென்ற தரப்பு வாகை மலர் அணிவர். இதிலிருந்து வந்தது தான் "வாகை சூடினான்" என்ற பயன்பாடு. வெற்றிபெற்றான் என்ற பொருள்.

உன் அறிவு
கடல் போல் விரிந்து கிடந்தாலும்
உன்னை ஒரு நதியாகவே
நினைத்துக்கொள்...
கடல் என்று நினைத்தால்
ஓய்வு கேட்கும்
நதி என்று நினைத்தால்
ஓடக் கேட்கும்!!!






## பார்வையற்றவராக மோகன்லால்

மலையாளத்தில் பிரியதர்சன் இயக்கத்தில் மோகன்லால், சஞ்சிதா ரெட்டி, விமலா ராமன், சமுத்திரக்கனி, நெடுமுடி வேணு நடிக்கும் படம், "ஒப்பம்". 8 வருடங்களுக்கு முன், "காலேஜ் குமாரன்" படத்தில் மோகன்லாலுடன் சேர்ந்து நடித்த விமலா ராமன், மீண்டும் அவருடன் நடிக்கிறார். இதில் மோகன்லால் பார்வையற்றவராக நடிக்கிறார். ஒரு கொலையை அவர் சந்திக்க நேரிடுகிறது. பின்னர் குற்றவாளிகளை எப்படி அடையாளம் காண்கிறார் என்பது தான் இந்தப் படத்தின் கதை.




உனக்கு நீ நல்லவனாய் இருந்தால் போதும். மற்றவருக்கு நீ கெட்டவனாய் தெரிந்தால் அது உன் குற்றம் இல்லை... கண்ணில் பிழை என்றால் பிம்பமும் பிழையே. அது பார்க்கப்படுபவன் பிழையல்ல, பார்ப்பவன் பிழை...




பேஸ் புக்கில் பிடித்தவை...

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 8 | | | | |
| | | 2 | | | | | | 3 |
| | 6 | 5 | | | | | 2 | |
| 2 | | | | | 9 | 6 | | |
| 4 | | | | 6 | 3 | 7 | | |
| 3 | | | | 7 | | 9 | | 4 |
| | | | | | | | | |
| | | | 8 | | | 4 | 5 | |
| 8 | | 7 | | | 6 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 4 | 5 | 9 | 2 | 6 | 1 | 8 |
| 2 | 8 | 1 | 4 | 3 | 6 | 5 | 7 | 9 |
| 6 | 9 | 5 | 7 | 1 | 8 | 2 | 3 | 4 |
| 5 | 2 | 6 | 3 | 7 | 9 | 8 | 4 | 1 |
| 8 | 4 | 7 | 2 | 6 | 1 | 3 | 9 | 5 |
| 9 | 1 | 3 | 8 | 4 | 5 | 7 | 2 | 6 |
| 4 | 6 | 8 | 1 | 2 | 3 | 9 | 5 | 7 |
| 1 | 5 | 2 | 9 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 7 | 3 | 9 | 6 | 5 | 4 | 1 | 8 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தைஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# குழப்பமான வழக்கு

றொட்டிக் கடை வைத்திருந்தார் ஒருவர்.
அவர் கடைக்கு வெண்ணெய் விநியோகம் செய்பவர் மீது அவருக்கு வெகுவாகச் சந்தேகம்.
தன்னை அவர் ஏமாற்றுவதாக வருத்தம் இருந்தது. அரைக் கிலோ வெண்ணெய் என்று அவர் தருவது அரை கிலோவே இல்லை.
நிறைகுறைவாக இருக்கிறது என்று குற்றஞ் சாட்டினார்.
சண்டை முற்றி ஒரு நாள் நீதிபதி முன் வழக்கு வந்தது.
வெண்ணெய் வியாபாரி தன்னிடம் கொடுத்த வெண்ணெய்ப் பொட்டலத்தை நீதிபதி முன் நிறுத்துக் காட்டிய றொட்டிக் கடைக்காரர், "பாருங்கள் 450 கிராம் தான் இருக்கிறது. இப்படித்தான் என்னைப் பலமுறை ஏமாற்றி இருக்கிறார். இவரைத் தண்டியுங்கள்" என்று கூச்சலிட்டார். நீதிபதி வெண்ணெய் வியாபாரியைப் பார்த்து "என்ன சொல்கிறீர்கள். ஒவ்வொரு முறையும் 50 கிராம் குறைவாகத் தரலாமா? அது குற்ற மில்லையா?" என்று கேட்டார்.
"ஐயா.. என்னிடம் நிறைக்கல் கிடையாது. அதனால் 500 கிராம் நிறையுள்ள பொருள் ஏதேனும் ஒன்றை நிறைக்கல்லுக்குப் பதிலாக பயன்படுத்துவது வழக்கம்.
பெரும்பாலும் இவரது கடை றொட்டியைத் தான் வாங்குகிறேன். அதையே அவ்வாறு பயன்படுத்துவேன்.
பக்கெட் மீது நிறை 500கிராம் என்று எழுதப்பட்டிருப்பதை நம்பி இவரது றொட்டியை நிறைக் கல்லுக்குப் பதிலாக தராசில் பயன்படுத்துவேன்.
இப்போது பாருங்கள் எனது வெண்ணெயும் அவரது றொட்டியும் சம நிறையாக இருக்கும்." என்று தராசில் இரண்டையும் எதிர் எதிராக வைத்தார். சமமாக இருந்தது.
நீதிபதி குழம்பிப் போனார்.

படித்ததில் பிடித்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## காதலர் தினப்பரிசு

காதலர் தினப் பரிசுப் பொருள்கள் பல அறிமுகமாகியுள்ளன. லவ் மீற்றர், கரடிப் பொம்மைகள் என இவை பிரத்தியேக கலர்களில் வடிவமைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றின் விலை 500 ரூபாவில் இருந்து 600 ரூபா ஆகும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 650 | 650 |
| நண்டு | 300 | 400 | 300 | 350 | 400 | 300 | – |
| கணவாய் | 550 | 600 | 500 | 500 | 600 | 700 | – |
| பாரை | 500 | 500 | 500 | 600 | 500 | 600 | 400 |
| சுறா | 500 | 500 | 600 | 600 | 700 | 650 | 550 |
| சீலா | 300 | 500 | 400 | 500 | 400 | 400 | 450 |
| விளை | 650 | 500 | 400 | 500 | 500 | 400 | 450 |
| முரல் | 300 | 350 | 350 | 400 | 350 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 400 | 300 |
| கிழாக்கன் | 500 | 800 | – | – | 500 | – | – |
| ஒரா | 400 | 400 | – | – | 450 | – | 350 |
| திரளி | 300 | 450 | 200 | 250 | 300 | 300 | 300 |
| நகரை | 250 | 300 | – | 300 | 300 | 300 | 350 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 200 | 150 | 100 |
| ஒட்டி | 300 | 250 | 150 | 300 | 300 | 300 | 300 |
| திருக்கை | 150 | 300 | 200 | 300 | 250 | 200 | 150 |
| மதனம் | 150 | 200 | 180 | 300 | 250 | – | 300 |
| கொய் | 100 | 250 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 400 | 500 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 300 | 300 | 400 | 250 |



## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 40 | 60 | 20 | 40 | 30 | 30 |
| கத்தரி | 120 | 120 | 80 | 100 | 80 | 60 | 90 | 50 |
| கரட் | 200 | 180 | 300 | 180 | 240 | 200 | 160 | 300 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 35 | 40 |
| பயிற்றை | 140 | 90 | 120 | 120 | 200 | 140 | 120 | 150 |
| பாகல் | 100 | 100 | 80 | 100 | 100 | 160 | 80 | 120 |
| கருணைக்கிழங்கு | 70 | 60 | 80 | 60 | 60 | 120 | 55 | 50 |
| பெ.வெங்காயம் | 70 | 60 | 80 | 60 | 60 | 70 | 50 | 50 |
| சி.வெங்காயம் | 70 | 120 | 80 | 80 | 70 | 80 | 65 | 80 |
| பூசணி | 60 | 50 | 100 | 100 | 80 | 120 | 55 | 70 |
| தக்காளி | 60 | 70 | 50 | 70 | 60 | 80 | 50 | 50 |
| வாழைக்காய் | 70 | 60 | 50 | 60 | 60 | 60 | 45 | 40 |
| கீரை | 20 | 20 | 40 | 10 | 30 | 40 | 10 | 30 |
| பொன்னாங்கானி | 40 | – | 30 | 40 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 250 | 220 | 200 | 200 | 300 | 200 | 220 |
| புடோல் | 70 | 90 | 70 | 60 | 60 | 120 | 40 | 60 |
| கோவா | 80 | 100 | 80 | 100 | 80 | 120 | 80 | 70 |
| வெண்டி | 120 | 120 | 80–120 | 80 | 140 | 100 | 80 | 120 |
| போஞ்சி | 100 | 90 | 120 | 100 | 100 | 120 | 60 | 220 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 100 | 80 | 200 | 90 | 120 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 40–50 | 40 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 70 | 60 | 60 | 70 | 50 | 100–120 |
| தேசிக்காய் | 100 | 80 | 80 | 80 | 60 | 60 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 200 | – | 240 | 200 | 240 | 200 | 180 | 300 |
| இராசவள்ளி | 150 | 120 | 180 | 100 | 160 | 160 | 90 | 70 |
| முருங்கைக்காய் | 1200 | – | 800 | 400 | 400 | 800 | 400 | 500 |





## கார சுசியம்

**தேவையான பொருள்கள்**

புழுங்கலரிசி – 2 கப் (இட்லி அரிசி)
உளுத்தம்பருப்பு – அரை கப்
சிவப்பு மிளகாய் – 8
உப்பு – ருசிக்கேற்ப
கறிவேப்பிலை – சிறிதளவு
கடலைப்பருப்பு – 1 தேக்கரண்டி
தேங்காய் – அரை கப்
(பல்பல்லாக நறுக்கியது)
எண்ணெய் – பொரிப்பதற்கு

**செய்முறை :**

முதலில் புழுங்கலரிசியை 2 மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து சிவப்பு மிளகாய் மற்றும் உப்புச் சேர்த்து மை போல அரைத்து வைக்கவும். பின்னர் மறுநாள் உளுந்தை அரை மணி நேரம் ஊறவைத்து அரைத்து புழுங்கலரிசி மாவுடன் கலக்கவும்.
கடலைப் பருப்பை தண்ணீரில் ஊறவைத்து வடித்து, அரைத்து, வைத்திருக்கும் மாவுடன் சேர்க்கவும்.
மேலும் பொடியாக நறுக்கிய கறிவேப்பிலை, பல் பல்லாக நறுக்கிய தேங்காய் கீற்று சேர்த்து மாவைக் கலந்து வைக்கவும்.
சட்டியில் எண்ணெய் விட்டு சூடாக்கி ஒரு சிறிய நெல்லிக்காயளவு புளியை அதில் போடவும். புளி நன்றாகக் கருகியதும் வெளியே எடுத்துவிடவும். சிறிய போண்டாக்களாக மாவை கைகளால் கிள்ளி எடுத்து எண்ணெயில் போடவும்.
பொன்னிறமாகப் பொரித்து சூடாக சட்னியுடன் பரிமாறவும்.

**நாளை**
தை-27
புதன்கிழமை 10.02.2016
திதி: துதியை மா.05.52
நட்சத்திரம்: சதயம் பி.ப.04.00
ராகுகாலம்: 12.34-02.04 வரை
சுபநேரம்: 05.04-06.34 வரை

## பூக்களை பாதுகாப்பது எப்படி?

முழுமையாக மலராத மொட்டுக்களைத் தேர்ந்தெடுப்பது நல்லது. அப்போது தான் அவை வீட்டினுள் வைக்கும்போது மலரும். அத்துடன் நீண்ட நாள்களுக்குக் காயாமலும் இருக்கும்.
ஐந்து இலைகளை விட்டு, காம்பை வெட்டவும். பூக்களுக்குச் சேர வேண்டிய தண்ணீர் மற்றும் சத்து காற்றடைப்பால் சேராமல் போவதைத் தடுக்க காம்பைத் தண்ணீருக்கு அடியில் வைத்து வெட்ட வேண்டும். காம்பைச் சாய்வாக வெட்டுவதால் பூக்களுக்கு அதிக அளவில் தண்ணீர் கிடைக்க வாய்ப்புள்ளது.
அழுகிய, சேதமடைந்த இலைகளையும், பூக்களின் இதழ்களையும் அகற்றிவிட வேண்டும். பூக்களின் காம்புகள் முழுமையாக மூழ்கும் வகையில் தண்ணீரை ஊற்றி, 24 மணிநேரம் வைக்க வேண்டும். இதன் பிறகு பூக்களை சாடியில் வைக்கலாம்.
பூக்கள் அதிக நாள் வாடாமல் இருக்க அவற்றை காற்றுப் படும் வகையில் ஜன்னலுக்கு அருகில் வைப்பது நல்லது. பழங்கள், காய் கறிகள் ஆகியவை எதலீன் என்ற வாயுவை வெளியிடுகின்றன. இதனால் ஆகியவற்றுக்கு அருகில் பூக்களை வைத்தால் அவை விரைவில் வாட வாய்ப்புள்ளது.
பக்ரீரியாக்கள் வளர்ந்து பூக்களின் தண்ணீர் ஈர்க்கும் சக்தியைப் பாதிக்காமல் இருக்க சாடியில் செம்பாலான சிறிய பொருளைப் போட்டு வைக்கலாம்.
இதுமட்டுமன்றி தினமும் சாடியில் உள்ள தண்ணீரை மாற்ற வேண்டும்.
குறிப்பு: எல்லாவிதப் பூக்களும் நீண்ட நாள் நீடிக்காது. சில பூக்கள் மற்றவையை விட சீக்கிரம் வாடிவிடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# திருநெல்வேலியில் என்.டி.பி.

கடனட்டை உட்பட பொதுமக்களின் அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்யக்கூடிய வசதிகளைக் கொண்டதாக என்.டி.பி. வங்கி ஆரம்பித்து வைக்கப்படுகின்றது என்று வங்கியின் பிராந்திய முகாமையாளர் சந்திரிகா துளசிராம் தெரிவித்தார்.

என்.டி.பி.வங்கியின் புதிய கிளை நிறுவனம் ஒன்று திருநெல்வேலிச் சந்தியை அண்மித்து பலாலி வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்குத் திறந்து வைக்கப்பட்டது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

மக்களுக்காகவே இந்த வங்கி செயற்படுகின்றது. இந்த வங்கி புதிதாக ஆரம்பிக்கப்பட்டபோதும் பொதுமக்கள் வாடிக்கையாளர்கள் அனைத்துத்தரப்பினருக்கும் ஏற்றதான வசதிகளைக் கொண்டுள்ளது.

வங்கியில் சிறுவர் முதல் பெரியோர்கள் வரை நிலையான வைப்புக்கள் சேமிப்புக்கணக்குகள் உள்ளதோடு கடனட்டை வசதிகள் மற்றும் வீட்டுக்கடன் வசதி, வர்த்தகக் கடன், வாகனக் கடன் வசதிகளும் உள்ளன என்றார்.

**வணிகம்**

வங்கியின் பிரதான நிறைவேற்று அதிகாரி ராஜேந்திரா தியாகராஜா உரையாற்றுகையில் கூறியதாவது:-

இந்தக் கிளையை ஆரம்பிப்பதற்கு உறுதுணையாக பொதுமக்களும் வர்த்தகர்களும் உள்ளனர் எனவும் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார்.

இதில் பிரதம விருந்தினராக என்.டி.பி. வங்கியின் பிரதான நிறைவேற்று அதிகாரி ராஜேந்திரா தியாகராஜாவும், ஏனைய விருந்தினர்களாக சிறு நுகர்வுச் சேவைகள் உதவித் தலைவர் தர்சன ரத்னாயக்கவும் கடன் அட்டைகள் சேவை உதவித் தலைவர் ஜிகான் டயஸும், ஐ.ரி. பிரதான முகாமையாளர் கே.வி. குகநாதனும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர் சகிதம் ஏனைய விருந்தினர்கள் மேளவாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு தேசியக்கொடியும் வங்கியின் கொடியும் ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டது. பின்னர் பண வைப்புக்களுடன் வங்கியின் பணி ஆரம்பிக்கப்பட்டது. (த)

# தொழில்துறை வலயங்களினுடைய 5 ஆண்டு பெருந்திட்டம் ஏப்ரலில் வரும்

கூட்டு அரசின் கீழ், தொழில்துறைக்கு உத்வேகம் அளிக்கும் தொழில்துறைச் சீர்திருத்தத் திட்டங்களை வலுப்படுத்துவது தொடர்பில் விசேட ஆலோசனைச் செயலணி கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீனால் நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டினுடைய கூட்டு அரசின் முதலாவது தொழிற்துறை வர்த்தக வலயங்களினு டைய ஐந்தாண்டு பெருந்திட்டமும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கொழும்பு 03 இல் அமைந்துள்ள கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சில் இடம்பெற்ற தொழில்துறை வர்த்தக திட்டமிடல் அமர்வின் போதே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டது. இந்தஅமர் வில் கைத்தொழில் மற்றும் வர்த்தக ராஜாங்க அமைச் சர் சம்பிக்க பிரேமதாஸ, அமைச்சின் செயலாளர் தென்னக்கோன், அமைச்சரின் ஆலோசகர்கள் மற்றும் கைத்தொழில் வர்த்தக அமைச்சின் உத்தியோகபூர்வ அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இங்கு அமைச்சர் ரிஷாத் கருத்துத் தெரிவிக்கையில், நாட்டில் காணப்படுகின்ற தொழில்துறை வர்த்தக வலயங்களினுடைய அபிவிருத்தி மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை மையமாகக் கொண்டு ஐந்தாண்டு பெருந்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழுள்ள அனைத்து தொழில்துறை வலயங்கள் ஆய்வுக்குட்பட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக கைத்தொழில் மற்றும் வர்த்தக இராஜாங்க அமைச்சர் சம்பிக்க பிரேம தாஸவின் தலைமையின் கீழ் விசேட குழுவை நான் நியமித்துள்ளேன். இந்தக்குழுவில் எனது அமைச்சின் செயலாளர் தென்னக்கோன் மற்றும் ஆலோசகர்கள் அடங்குவர். இந்தச் செயற்பாடுகள் பிரதமர் ரணில் விக் கிரம சிங்க வின் பொருளாதாரம் மற்றும் தொழில்துறை சீர்திருத்த முன்னெடுப்புக்களுக்குப் பக்கபலமாக இருக்கும்.

> “ நாட்டில் காணப்படுகின்ற தொழில்துறை வர்த்தக வலயங்களினுடைய அபிவிருத்தி மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை மையமாகக் கொண்டு ஐந்தாண்டு பெருந்திட்டத்தை நடைமுறைப் படுத் துவதற்கு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழுள்ள அனைத்து தொழில்துறை வலயங்கள் ஆய்வுக் குட்பட்டு மதிப்பீடு மேற் கொள்ளப்பட வேண்டும். ”

ஆய்வு அடிப்படையில், ஐந்தாண்டு பெருந்திட்டத்தின் அறிக்கை ஏப்ரல் மாதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என இராஜாங்க அமைச்சர் சம்பிக்க பிரேமதாச தலைமையிலான ஆலோசனைக் குழுவுக்கு உத்தரவு வழங்கியுள்ளேன். நாட்டின் பிரதமருக்கு தயாரிக்கப்படும் இந்த சிறப்பு அறிக்கை அமைச்சரவையின் கருத்துக்களுக்கும் முன்வைக்கப்படும்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தொழில்துறை திட்டமிடலை முன்னோக்கி நகர்த்துவதற்கு தொழில்துறைத் திட்டங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். இதற்கமைய ஒருங்கிணைந்த தனியார் மற்றும் அரச நிபுணர்களை ஈர்க்கும் வகையில் தொழில்துறை திட்டமிடலுக்கான ஒரு செயற்றிட்ட மாதிரி உருவாக்கப்பட வேண்டும். மேற்படி தொழில்துறை வர்த்தக வலயத்தின் ஐந்தாண்டு பெருந்திட்டத்தினூடாக எதிர்காலத்தில் முன்னணிப் பன்னாட்டு நிறுவனங்கள் ஈர்க்கப்படும் .இதன் மூலம் நாட்டு மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களும் ஏற்படும். இதன் ஊடாக நாட்டின் பொருளாதாரம் மற்றும் தொழில்துறை முன்னேற்றம் அடையும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்

## கணக்குகளை முடக்கி டுவீற்றர் அதிரடி

அதிக பயனாளர்களைக் கொண்ட முன்னணி சமூக வலைத் தளங்களில் ஒன்றான டுவீற்றர் அதிரடி நடவடிக்கையாக சுமார் ஒரு லட்சத்து 25 ஆயிரம் வரையான கணக்குகளை முடக்கியுள்ளது.

அண்மைக்காலமாக சமூக வலைத் தளங்கள் ஊடாக மும்முரப்படுத்தப்படும் பயங்கரவாத நடவடிக்கை காரணமாகவே டுவீற்றர் இந்த அதிரடி நடவடிக்கையை எடுத்துள்ளது.



தற்போது பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்திருக்கும் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பே டுவீற்றர் கணக்குகள் ஊடாக தமது பரப்புரைகளை பெருமெடுப்பில் மேற்கொண்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. அதையடுத்தே டுவீற்றர் நிறுவனம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

தற்போது 500 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் டுவீற்றர் கணக்கைக் கொண்டுள்ளனர்.

அதேவேளை, பேஸ்புக் நிறுவனமும் போலிக் கணக்குகளை முடக்குவதில் தற்போது தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது.

## அசுர வளர்ச்சியில் பேஸ்புக்

சமூக வலைத்தளங்களின் ஜாம்பவனாகத் திகழும் பேஸ்புக்கின் பாவனையாளர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.



அதன்படி 2030ம் ஆண்டளவில் பேஸ்புக்கைப் பாவிப்பவர்களின் எண்ணிக்கை 5 பில்லியனைத் தொட்டு விடும் என அதன் நிறுவுநர் மார்க் ஷுக்கர் பேர்க் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரத்தின் ஆரம்பத்தில் பேஸ்புக் நிறுவனம் தனது 12ஆவது ஆண்டு நிறைவை நண்பர்கள் தினமாக வெகு பிரம்மாண்டமாகக் கொண்டாடியிருந்தது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மார்க் ஷுக்கர் பேர்க் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்போது பேஸ்புக் சமூகவலைத்தளத்தினை பாவிப்பவர்களின் எண்ணிக்கை 1.6 பில்லியனாகக் காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## அப்பிளுக்கு சவாலாக சாம்சுங்கின் புதிய படைப்பு

தொடுதிரைக் கைபேசிச் சந்தையில் பல நிறுவனங்கள் உள்ள போதும் சாம்சுங் மற்றும் அப்பிள் நிறுவனங்களுக்கு இடையிலேயே பெரும் போட்டி நிலவுகின்றது. இந்தநிலையில் அப்பிள் நிறுவனத்தின் ஐபோனுக்குச் சவால் விடும் வகையில் சாம்சுங் நிறுவனம் கலக்ஸி ஏ9 புறோ எனும் கைபேசிப் பதிப்பை வெளியிடவுள்ளது.

இது 6 அங்குல, 1920 X 1080 பிக்ஸல் தீர்மானம் கொண்ட தொடுதிரையைக் கொண்டிருக்கும் என்றும் பிரதான நினைவகமாக 3ஜிபி நினைவகத்தைக் (ரம்) கொண்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அன்ரொயிட் 6.0 மாஸ்மலோவ் இயங்கு தளத்தில் இயங்கக் கூடியது என்றும், 13 மெகா பிக்சல் கொண்ட பிரதான கமாரா, 8 மெகாபிக்சல் கொண்ட முன்புறக் கமரா என்பவற்றைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் விண்டோஸ் 10 கைபேசி இயங்கு தளத்துடன் கூடியதாகவும் இந்தக் கைபேசி வெளியாகக் கூடும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



## நாடாளுமன்றை

கப் போவதாக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், கூட்டு எதிர்க்கட்சியின் முக்கியஸ்தருமான ரஞ்சித் சொய்சா கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கூட்டு எதிர்க்கட்சியை தனியான நாடாளுமன்றக் குழுவாக அங்கீகரிக்குமாறுகோரி பல்வேறு தடவைகள் சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம். எனினும் அவர் இதுவரை அதற்கு செவிசாய்க்கவில்லை.

இன்று நடைபெறும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரின்போது அவர் எங்களை தனியான நாடாளுமன்றக் குழுவாக அங்கீகரிக்கும் அறிவிப்பை வெளியிடவேண்டும்.

சபாநாயகர் அவ்வாறு அங்கீகரிக்கத் தவறும் பட்சத்தில் நாடாளுமன்றத்தை முடக்கும் செயற்பாடுகளை கூட்டு எதிர்க்கட்சி சார்பில் முன்னெடுக்கவுள்ளோம். அது நாடாளுமன்றநடைமுறைகளுக்கு உட்பட்ட செயற்பாடுகளாக மட்டுமன்றி, நாடாளுமன்ற விதிமுறைகளை மீறும் செயற்பாடுகளாகவும் இருக்கும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

(த-5)

## சுவிஸ்

தந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹூசேன், வடக்கு மாகாண முதலமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்து ஒரு மணி நேரம் உரையாடினார். இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களும், ஐ.நா. அதிகாரிகளும் உடனிருந்தனர். இதன்போதே வடக்கு மாகாண முதலமைச்சர் மேற்படி விடயத்தை எடுத்தியம்பியுள்ளார்.

வடக்கு மாகாணம் போரினால் பாதிக்கப்பட்டது. ஏனைய மாகாணங்களுக்கு ஒதுக்கப்படும் அதேயளவு நிதி வடக்குக்கும் ஒதுக்கப்படுவது பொருத்தப்பாடானது இல்லை. வடக்கு மாகாணத்திற்கு என்று விசேடமாக நிதி ஒதுக்கப்பட்டு ஏனைய மாகாணங்களின் தரத்துக்குக் கொண்டுவரப்படவேண்டும். நிலையான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் இங்கு முன்னெடுக்கப்படவேண்டும்.

மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட போது மாவட்ட அரச அதிபர் உள்ளடங் கலான நிர்வாகம், மாகாண சபைக்கு கீழேயே இருந்தது. பின்னர்மத்திக்கு இது மாற்றப் பட்டது. இவ்வாறு மாகாணங்களின் அதிகாரங்கள், மத்தியினால் எடுக்கப்பட்டுள்ளன. இதனால் மாகாண நிர்வாகத்தைச் சீராகக் கொண்டு நடத்த முடியாத நிலை இருக்கின்றது. மாகாணத்தைத் தனது கட்டுக்குள் வைத்திருக்க மத்தி முயல்கின்றது.

சுவிஸ் நாட்டின் அரசமைப்பை ஒத்த சமஷ்டி முறைமைதான் எமது மக்களுக்குப் பொருத்தமான தீர்வாக இருக்கும். புதிய அரசமைப்பின் ஊடாக இது உருவாக்கப்படவேண்டும் - என்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், தமிழ் மக்களின் தற்போதைய பிரச்சினை, எதிர்பார்ப்பு, மனித உரிமை நிலைவரம் என்பவற்றை விவரமாகக் குறிப்பிட்டுத் தயாரித்த 15 பக்க அறிக்கை ஒன்றையும் முதலமைச்சர், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் கையளித்துள்ளார். அத்துடன் காணாமற்போனோர் தொடர்பில் பதிவு செய்யப்பட்ட 4 ஆயிரம் பேரின் விவரங்களையும் தனியான அறிக்கையாக முதலமைச்சர் கையளித்துள்ளார். (த-5)

## வடக்கு – கிழக்கு

பெரும்பான்மையானோர், மேற்படி விடயத்தை அழுத்திக் கூறியுள்ளனர்.

ஐக்கிய இலங்கைக்குள் வடக்கு - கிழக்கு இணைத்து சமஷ்டி அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும். அவ்வாறு எட்டப்படும் தீர்வின் அடிப்படையில் உருவாகும் மாநிலத்திற்கு தமி ழீழ மாநில அரசு என்று பெயர் வைக்கப்படவேண்டும், சுய நிர்ணய அடிப்படையில் புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்பட வேண்டும். அரசியலமைப்பு மத்திக்கும் மாநிலத்திற்கும் இடையில் நீதியான அதிகார பகிர்வாக அமைய வேண்டும். அத்துடன் அரசமைப்பு அதனை உறுதி செய்தல் வேண்டும்.

காணி - பொலிஸ் அதிகாரங்களில் மத்தியின் தலையீடு இருக்க கூடாது. இதனை மீளப் பெறுக்கொள்ள கூடாது. தொழிற்சங்கள், நிதி முதலீடுகள், தொழில் வாய்ப்புக்கள் போன்றவற்றை மாநில அரசு கையாளக் கூடியதாக இருக்க வேண்டும். ஐக்கிய இலங் கையில் நிர்வாக மொழி களாக தமிழ் மற்றும் சிங்களம் அமைய வேண்டும். தேர்தலில் பெண்களுக்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்பட வேண் டும். சிங்கள மக்களுக்கு இருக்கின்ற அனைத்து உரிமைகளும் தமிழ் மக்களுக்கும் வழங்கப்படவேண்டும், என்று மக்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

மேலும், அதிகாரத்தில் இருக்கின்றோம் என்று நினைக்கும் அதிகாரிகள் சில விடயங்களில் துஷ்பிரயோகம் செய்கின்றனர். இது நிறுத்தப்பட வேண்டும். காணி தொடர்பாக அரச அதிகாரிகள் கிராம மட்டத்தினருடனும் கலந்தாலோசித்து முடிவுகளை எடுக்க வேண்டும் - என்றும் மக்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

(த-5-21-ரி3)

## சிவமோகன்

மன்றத் தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற க.சிவமோகன் அண்மையில் இலங் கைத் தமிழரசுக் கட்சியில் இணைந்து கொண்டார். இது தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைந்தமை தொடர்பில் ஊடகங்களின் வாயிலாகவே நான் அறிந்து கொண்டேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 4 கட்சிகள் இருக்கின்றன. ஒரு கட்சியில் இருப்பவரை மற்றைய கட்சியில் இணைத்துக் கொள்வது என்பது அடிப்படையில் அநாகரிகமான செயற்பாடு. ஒரு கட்சியிலிருந்து மற்றைய கட்சியில் ஒருவர் இணைய விரும்பினால் அந்தக் கட்சியின் தலைமைப் பீடத்துடன் பேசுவதுதான் நாகரீகமான விடயம்.

முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, ஐக்கிய தேசியக் கட்சியை உடைக்கின்றார், ஜே.வி.பியை உடைக்கின்றார், ஜனநாயக விரோதமாகச் செயற்படுகின்றார் என்று, தமிழரசுக் கட்சியினரும் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களுமே கடந்த காலங்களில் தெரிவித்து வந்தனர். இன்று ஏனைய தமிழ்க் கட்சிகளை நிர்மூலம் செய்யும் - இல்லாது அழித்தொழிக்கும் நடவடிக்கையில், தமிழரசுக் கட்சி ஈடுபட்டு வருவது விரும்பத்தக்கதல்ல - வேதனைக்குரியது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது, யாழ்.மாவட்டத்தில் பெண் வேட்பாளரை நியமிப்பதற்கு எமது கட்சி திருமதி அனந்தி சசிதரனின் பெயரைப் பரிந்துரை செய்தது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சேனாதிராசா, அனந்தி எமது கட்சியின் உறுப்பினர். அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. எமது கட்சியைச் சேர்ந்தவரை வேறு கட்சியில் நியமிக்க முடியாது என்று தெரிவித்தார். நாம் நாகரீகமான முறையில் செயற்பட்டோம். ஆனால் தமிழரசுக் கட்சி தற்போது அநாகரீகமான முறையில் செயற்பட்டிருக்கின்றது - என்றார் சுரேஷ்.

(த-5)

## சர்வதேச

யாளர் அல் ஹுசேன் நேற்று கண்டிக்குப் பயணம் செய்திருந்தார்.

கண்டி தலதா மாளிகைக்குச் சென்ற அவரை பஸ்நாயக்க நிலமே வரவேற்றதுடன் இருவருக்குமிடையில் சந்திப்பு இடம்பெற்றது.

அதன்பின்னர், அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரர்களை சந்தித்து மனித உரிமைகள் ஆணையாளர் ஆசிகளை பெற்றுக் கொண்டார். தம்மைப் படுகொலை செய்ய வந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மன்னித்து விடுதலை அளித்தமையானது, நாட்டின் நல்லிணக்க செயற்பாட்டிற்கு சிறந்த மாதிரியென, இதன்போது மல்வத்து மஹாநாக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கல தேரர் ஆணையாளரிடம் தெரிவித்தார்.

அத்தோடு, நாட்டின் மூவின மக்களும் ஒன்றுபட்டு செயற்படுவதாகவும், நல்லிணக்கச் செயற்பாடுகள் மிகச் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மஹாநாயக்கர் மேலும் தெரிவித்தார்.

(த)


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை சிவமயம் (புலோலி)

நேற்றைய (08.02.2016) உதயனில் 23ஆம் பக்கத்தில் பிரசுரமான மேற்படி மரண அறிவித்தலில் 2ஆவது பந்தியில் 4ஆவது வசனத்தில் சிவகுமாரியின் ஆருயிர்க் கணவர் என்றும், 7 ஆவது வசனத்தில் சிவகுமாரின் (கனடா) அன்பு மாமனும் என்றும் திருத்தி வாசிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(C/29052)(10.17.18.19) தகவல்: குடும்பத்தினர்.

### வல்லிபுரம் செல்லத்துரை



பிறப்பு 22.03.1940 இறப்பு 06.02.2016

நுணாவிலைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு கனடா, மற்றும் ஓராங்கட்டை பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செல்லத்துரை கடந்த 06.02.2016 சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சீதேவிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் இராசரத்தினம் - பூரணம் தம்பதியினரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரி அவர்களின் அன்புக்கணவரும் மோகன் (கனடா- முன்னாள் பொறியியல் பணிப்பாளர் இ.போ.ச. வவுனியா), சசிதரன் (கனடா), பிரியதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் டிலானி (கனடா), நந்தசுசிலா (கனடா), துஷ்யந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் விகாஷ்(கனடா), ஜோபிதா (கனடா), ஹருக்கா(கனடா), சியானிக்கா(கனடா), டிலக்ஷன் (லண்டன்), நிதுஜா(லண்டன்), ஜனுஷா(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான குலசேகரம் பிள்ளை, சின்னம்மா, சுப்பையா மற்றும் நாகமுத்து, குமாரசாமி ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஓராங்கட்டை பருத்தித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (09.02.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனை விழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஓராங்கட்டை ஒழுங்கை,
புலோலி வடகிழக்கு,
பருத்தித்துறை.

(68920)
(12.17.18. 20)

தகவல்:
குடும்பத்தினர்.

மோகன் (6472923178 - கனடா)
(076 7163954 - இலங்கை)
தர்ஷினி (07949782869 - லண்டன்)
சசி (6478300522 - கனடா)
(021 226 3241 - இலங்கை)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகேஸ்வரி இலங்கராசா



மலர்வு 15 . 05 . 1942

உதிர்வு 03 . 02 . 2016

கொக்குவில் மேற்கு, கேணியடியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Noisy - le - Sec ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி இலங்கராசா 03.02.2016 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இலங்கராசாவின் அன்பு மனைவியும், ரவீந்திரகுமார், ரஞ்சிதகுமாரி, உதயகுமார், கமலகுமாரி, சந்திரகுமார், சிவ குமாரி, உதயகுமாரி, சூரியகுமார், செந்தமிழ் குமாரி ஆகியோ ரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற குணசிங்கம் மற்றும் நல்லம்மா, பராசக்தி, கணேஸ், தேவராஜா (தெய்வம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2016) செவ்வாய்க் கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

அன்றைய தினம் அன்னாரின் துக்க நிகழ்வு கேணியடி, கொக்குவில் மேற்கு கொக்குவிலில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(68770)(11,18,20) தகவல்: சகோதரர்கள்.



பிறப்பு 05 . 12 . 1940

இறப்பு 07 . 02 . 2016

### சங்கரப்பிள்ளை கந்தசாமி

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை கந்தசாமி 07.02.2016 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான துரையப்பா- பொன்னு தம்பதியரின் மருமகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் தபேந்திரன் (ஜேர்மனி), உருத்திரேந்திரன்(ஜேர்மனி), லதாயினி, ஜெயந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் இராசபூமணி, சபாரத்தினம், இராசமணி, நவரத்தினராசா, விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கவிதா, கார்த்திகா, இந்திரராசா ஆகியோரின் மாமனாரும் சஞ்யா, ஜென்சிகா, கபிலேஷ், கோபிதா, பிரசாயின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (09.02.2016) செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி மேற்கு
கைதடி.

(68769)(12,18,20)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## ஈழ அகதிகள்

வே.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

திருச்சியிலிருந்து 12 அகதிகளும், சென்னையிலிருந்து 18 அகதிகளும், மதுரையிலி ருந்து 13 அகதிகளும் இவ்வாறு நாடு திரும்பவுள்ளனர். இவ்வாறு இலங்கைக்குத் திரும்பவுள்ள்வர்களில் 24 ஆண்களும் 19 பெண்களும் அடங்குகின்றனர். இவர்கள் திருகோணமலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளைச் சொந்த இடமாகக் கொண்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான இலவச விமான பயணச்சீட்டுகள் இலங்கைக்கான ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும் தனிநபர் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 75 அமெரிக்க டொலர்களும், போக்குவரத்துச் செலவுக்காக 19 அமெரிக்க டொலர்களும், ஒரு குடும்பத்திற்கான உணவுக்கு அல்லாத பணத்தொகையாக 75 அமெரிக்க டொலர்களும் வழங்கப்படவுள்ளன.

அகதிகளுக்கு 6 மாதங்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்களை வழங்க மீள்குடியேற்ற அமைச்சால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (த-5)

## தாயகத்துக்கு

வருகை தந்த இந்திய வெளி விவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், இந்தியாவுக்கு திரும்புவதற்கு முன்னதாக ஈழ ஏதிலிகள் மறுவாழ்வு அமைப்பின் பொருளாளர் சந்திரகாசன் மற்றும் தலைவர் சூரியகுமாரியையும் சந்தித்துப் பேசினார். இதன்போதே மேற்படி விடயம் ஆராயப்பட்டதாகச் சந்திரகாசன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகளில், பெருமளவானோர் தாயகம் திரும்ப விரும்புவதாகவும், எனினும் அவர்கள் தமது உடைமைகளுடன் திரும்புவதற்கும், அவர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் இந்திய அரசு உதவவேண்டும் என்று சந்திரகாசன் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

நீண்டகாலமாகத் தமிழ்நாட்டில் வசிக்கும் அகதிகள் சேர்த்து வைத்துள்ள உடைமைகளைக் கைவிட்டுச் செல்ல முடியாது என்றும், விமானம் மூலம் அதிகளவு பொருள்களைக் கொண்டு செல்ல முடி யாது என்பதாலும், அகதிகளை இலகுவாகவும், குறைந்த செலவுடனும், அவர்களின் வசிப்பிடங்களுக்கு அருகில் உள்ள துறைமுகங்களுக்கு கப்பலில் ஏற்றிச் செல்லவேண்டும் என்றும் அவர் கோரியிருந்தார்.

காங்கேசன்துறை, தலைமன்னார், திருகோணமலை துறைமுகங்களுக்கு அகதிகளை ஏற்றிச் செல்லலாம் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அதற்கு இந்தியவெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் சாதகமான பதிலை அளித்திருப்பதாக, இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சவிகாஸ் ஸ்வரூப் தெரிவித்துள்ளார். சுயவிருப்ப அடிப்படையில், தாயகம் திரும்ப விரும்பும் அகதிகளின் பட்டியல் ஒன்றைத் தயார் செய்யுமாறு சந்திரகாசனிடம், சுஷ்மா சுவராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

அகதிகள் திரும்புவதற்குக் கப்பல்களை வழங்க இந்தியா விருப்பம் தெரிவித்திருப்பதாக, சந்திரகாசன் தெரிவித்திருப்பது குறித்து கருத்து வெளியிட்ட, இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர், அத்தகைய உதவிகள் அளிக்கப்படும் என்றும், ஆனால் கப்பல்களில் ஏற்றிச் செல்லப்படுவதற்குப் போதியளவு அகதிகள் விருப்பம்தெரிவிக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அகதிகள் தாயகம் திரும்புவது சுயவிருப்பின் அடிப்படையிலானதாக இருக்கவேண்டும் என்றும், வற்புறுத்தலின் பேரில் இருக்கக்கூடாது என்றும் நாம் அவர்களிடம் கூறியுள்ளோம், என்றும் பேச்சாளர் சவிகாஸ் ஸ்வரூப் தெரிவித்துள்ளார். (த-5)

## மரண அறிவித்தல்கள்



**சோமசுந்தரம் சுந்தரேஸ்வரன்**

(முன்னாள் E.S.P கணக்காளர்)


நட்டுப்பாளி கோவளம் காரைநகரைப் பிறப்பிடமாகவும் இல.25, ஜின்னா வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சுந்தரேஸ்வரன் நேற்று (08.02.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சுந்தராம்பாளின் (குஞ்சு) அன்புக் கணவரும், திலக்ஷி (யாழ் இந்து மகளிர் கல்லூரி A/L 2017 கலைப்பிரிவு மாணவி) அருட்குமரன் (O/L 2016 மாணவன் மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற விக்னேஸ்வரனின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2016) செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 2 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **மனைவி (குஞ்சு), பிள்ளைகள்.**

(68782)(10.17.18)



**ஆறுமுகம் சிற்றம்பலம்**

(ஓய்வுபெற்ற காணி மேற்பார்வை அதிகாரி, காரைநகர் பலநோக்கு கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர், சமாதான நீதிவான், சிற்றிசன் கொமிற்றி தலைவர்)

காரைநகர் இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் விளானை களபூமியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிற்றம்பலம் 07.02.2016 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், தில்லைநாதன் (UK), சிறிஸ்கந்தராசா (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஸ்ணதேவி (UK), சதீஸா (UK) ஆகியோரின் அன்பு மாமனும், உஷா (UK), பிரதீப் (UK), சிந்து (UK), சுகன்யா (UK), இந்துயன் (UK) ஆகியோரின் பேரனும், சுப்பிரமணியம் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, இராசம்மா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற வர்களான கணபதிப்பிள்ளை ஆறுமுகம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (11.02.2016) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **மனைவி, பிள்ளைகள்.**

(68783)(10.17)

## மரண அறிவித்தல்



**சதாசிவம் லிங்கராஜா (சவாரி லிங்கம்)**

யாழ். காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும் ஸ்கந்தபுரத்தை வதிவிடமாகவும் 128 உதயநகர் மேற்கு கிளிநொச்சியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் லிங்கராஜா (சவாரி லிங்கம்) நேற்று (08.02.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம்-பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், விஜிராஜ் (பொலிக்கிறோம் எலற்றிக்கல்), அருள்ராஜ், ஜீவராஜ் (விடியல் MAS), விமல்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், பற்குணராஜா (பிரான்ஸ்), செல்வராணி (லண்டன்), சாந்தராணி (கொழும்பு), காலஞ்சென்ற தில்லைநடராஜா (காரைநகர்) அருச்சுண ராஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2016) செவ்வாய்க் கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

(63648)(10.17)

## மரண அறிவித்தல்



**திருமதி திலகவதி சிவலோகநாதன் (தங்கம்)**

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி சிவலோகநாதன் (தங்கம்) நேற்று (08.02.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி சிவலோகநாதனின் (தங்கம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து அருணாசலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கோபாலராஜன், ராஜ்குமார் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.02.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **கணவர்.**

(C/29055)(10.17.18)

## மரண அறிவித்தல்

திருமதி **தவதேவி இளையதம்பி**

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த திருமதி தவதேவி இளையதம்பி நேற்று (08.02.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இளையதம்பியின் அன்பு மனைவியும், கலைவாணி (பிரான்ஸ்), கிருஷ்ணவேணி (கொழும்பு), குகாநந்தினி (கரவெட்டி), பாலகிருஸ்ணன் (நீர்வேலி), லோகேஸ்வரன் (பிரான்ஸ்), வசந்தன் (கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயும், சுப்பிரமணியம், தவராசா, கௌரீஸ்வரி, சியாமளா ஆகியோரின் அன்பு மாமியும், காயத்திரி, வேணுஜன், தேனுஜா, சானுஜா, கானுஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **இ.வசந்தன் மகன்**

(C/29055)(10.17.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரும்பான்மையை

சாட்டியுள்ளார்.

அத்துடன், பெரும்பான்மையானோர் எதிர்க்கும் திட்டங்களைச்செயற்படுத்துவதன் ஊடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்திவிட முடியாது என்றும், அது மேலும் பல பிரச்சினைகளுக்கு வழிகோலும் என்றும் அவர் கூறினார்.

சர்வதேச நீதிமன்றம் வேண்டாம், இராணுவச் சிப்பாய்கள் வேட்டையாடப்படுவதை நிறுத்து என்ற தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் 10 லட்சம் கையொப்பங்களைத் திரட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

30 வருடகாலப் போரை இராணுவம் முடிவுக்குக் கொண்டுவந்ததால்தான் இன்று சுதந்திரம் பிறந்துள்ளது. எனவே, இராணுவத்தைப் போர்க்குற்ற நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்வதற்கு இடமளிக்கமுடியாது.

நல்லிணக்கம் என்ற போர்வையில் இன்று பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. பெரும்பான்மையானோருக்கு சந்தேகங்களை ஏற்படுத்தும் அவர்கள் எதிர்க்கும் நடவடிக்கைகளை செய்வதன் ஊடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்திவிடமுடியாது.

போருக்குப் பின்னர் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு எமது அரசு பல நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தாலும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் எதிர்ப்பு காரணமாகச் சர்வதேச சமூகமோ, ஐ.நாவோ அவற்றைக் கருத்திற்கொள்ளவில்லை.

இந்நிலையில், போர் முடிவடைந்த பின்னர் செய்யவேண்டியவற்றை செய்யாததன் காரணமாகத்தான் இன்று இந்நிலை ஏற்பட்டுள்ளது என்று தற்போதைய ஆட்சியாளர் கூறுகிறார். இது முற்றிலும் தவறானது.

வடக்குக்குச் சுதந்திரம் வழங்கினோம். ஜனநாயக உரிமைகளை வழங்கினோம். நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்பட்டது. பரணகம குழு நிறுவப்பட்டது. இராணுவ நீதிமன்றம் அமைக்கப்பட்டது. இவற்றை மறந்து பேசுகின்றனர்.

அதேவேளை, இராணுவத்தினர் போர்க்குற்றம் இழைக்கவில்லை. ஒரு தரப்பினரே குற்றச்சாட்டு முன்வைத்து வருகின்றனர். இதன் பின்னணியில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் இருக்கின்றன. அவற்றைத் திருப்திப்படுத்துவதால் நல்லிணக்கத்தை ஏற்படுத்திவிடமுடியாது.

தமிழ் அரசியல்வாதிகள் சிலர் பிரபாகரனின் வழியிலேயே நடக்கின்றனர். அவர்கள் ஜனநாயகத் தலைவர்கள் அல்லர். பிரபாகரனால் நியமிக்கப்பட்டவர்கள் -என்றார். (த-சி)

## எம்.பியாகிறார்

தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பொன்சேகாவுக்கு வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

அதேவேளை, நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகத் தனிக்குழுவாக செயற்படுவதற்கு இடமளிக்குமாறு கோரிச் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ள கடிதத்துக்கு இன்று உரிய பதில் கிடைக்காவிட்டால் சபை நடவடிக்கையை கொண்டு நடத்துவதற்கு இடமளிக்கப்போவதில்லை என்று மகிந்த ஆதரவு அணியினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (த-சி)

---

### துயர்பகிர்கின்றோம்

எமது அலுவலகத்தில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு.இ.தவரூபன் அவர்களின் அன்புத் தந்தையார்

**இரத்தினசாமி இரத்தினகுமார்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்
தீவகம் தெற்கு, வேலணை.


(68781) (10.17)

பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தரும்.

---

### 31ஆம் நாள் நினைவு தினம்

மலர்வு 29 . 07 . 1924



உதிர்வு 08 . 01 . 2016

**அமரர் கந்தையா முருகேசு**

(இளைப்பாறிய ஆசிரியர்)

ஊர் போற்றும் உத்தமனாய்
பார் போற்றும் வாத்தியாராய்
மனைவி போற்றிய மணிவிளக்காய்
பாசம் மிகுந்த தந்தையாய்
அன்பான மாமனாய்
அரவணைக்கும் பேரனாய்
அனைவரையும் உயர்த்திய தந்தையே
எம்மை என்றும் வழிநடத்த வேண்டும்
எனவும் வணங்குகின்றோம்.

சாயுடை, மாவிட்டபுரம்.

குடும்பத்தினர்.

(68780)(10.17.18)

---

### 31ஆம் நாள் நினைவு கூரலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 18 . 05 . 1940



இறப்பு 10 . 01 . 2016

**அமரர் விஸ்வலிங்கம் செல்லத்துரை**

எம் உயிரின் பாதி உங்களுடன் உதிர்ந்ததப்பா
ஆண்டுகள் ஆயிரம் அகன்றாலும்
மறவாது அப்பா உங்கள் நினைவு
உங்கள் அன்பின் நிழலில் - என்றும்
வாழும் உங்கள் உறவுகள்
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

இன்று (09.02.2016) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.


7/1, ஒடை லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(68777)(10.17.18.19)

---

### மரண அறிவித்தல்



**திருமதி சுகிர்தரத்தினம்மா (சுகிர்தம்) தயானந்தன்**

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

ஏழாலை வடக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகிர்தரத்தினம்மா தயானந்தன் கடந்த 06.02.2016 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் திரு. அ.தயானந்தனின் (முன்னாள் யாழ். ஆதீனம் C.S.I. பேராயரின் அந்தரங்க செயலாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருமைநாயகம்-மேரி அன்னரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், ஜோய் இம்மானுவேலின் (கனடா) அன்புத் தாயும், கிருஷாந்தியின் (கனடா) அன்பு மாமியும், மெலாணி, மத்தியூ (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான ரஞ்சிதகமலபாக்கியம், அருள்ராஜமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான விக்ரர் கனகசுந்தரம், லீலாவதி செல்லத்துரை, கமலா மற்றும் விமலா, ஈஸ்வரன், சித்திரறஞ்சன் (UK) றோகினி ஆகியோரின் அன்பு மைத்துனியும், இரஞ்சினி பாவேந்திரா (கனடா), இராஜினி சாந்தகுமார் (கனடா), இரஞ்சித்குமார் பவதாரணி (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சிறிய தாயும், வேணுஷா-பொபி ரஜீபன், சாரா ஜெவ்றி, றிஷோக், பிரவீன், சறோனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், றெபேக்கா, எமிலி (கனடா) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க வழிபாடு இன்று (09.02.2016) செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, CACM ஏழாலை வடக்கு கிறிஸ்து அரசர் ஆலயக் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ரஞ்சஸ்தான்,
ஏழாலை வடக்கு, ஏழாலை.
T.P: 021 2213831

(68779)(10.17.18)

தகவல்:
குடும்பத்தினர்.

---

### மரண அறிவித்தல்



**திருமதி வள்ளிநாயகி குமாரசாமி**

பிறப்பு : 1959.04.14 இறப்பு : 2016.02.08

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வள்ளிநாயகி குமாரசாமி நேற்று (08.02.2016) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குமாரசாமியின் பாசமிகு மனைவியும், புஸ்பலோசினி, கமலாம்பிகை, குலநாதன், கோசலாதேவி ஆகியோரின் அன்பு தாயும், விக்னராஜசேகரம், கைலநாதன், மங்களேஸ்வரி, பஞ்சசீலன் ஆகியோரின் பாசமிகு மாமியும், கஜநாதன் (சிங்கப்பூர்) கஜநிதி, பிரசன்னா, தேன்நிதி, துளசிகா, தார்மீகன், தார்மீகா, கம்சினி, மலரவன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வட்டுக்கோட்டை இல்லத்தில் இன்று (09.02.2016) முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தெல்லிப்பழை வீதி,
வட்டுக்கோட்டை.

(C/29056)(10.17)

தகவல்:
குலநாதன் மகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்ரனிஸ் - றோயல் ஆட்டம் சமநிலையில்

யாழ்ப்பாணம், பெப். 9
ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு மின்னொளியில் இடம்பெற்ற சுப்பர் 8 அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம-23)

## யாழை வீழ்த்தியது மட்டக்களப்பு

யாழ்ப்பாணம், பெப். 9
இலங்கை கால்பந்தாட்டச் சமமேளனம் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்திவந்த கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் யாழ். லீக் அணி மட்டக்களப்பு லீக் அணியிடம் தோல்வியடைந்தது.
மட்டக்களப்பு பொது விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முழுவதுமாக தனித்து ஆதிக்கம் செலுத்திய மட்டக்களப்பு லீக் அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## இலங்கை - இந்திய அணிகள் அரையிறுதியில் மோதுகின்றன

### 19 வயதினருக்கான உலகக்கிண்ணத்தில்

19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான உலகக்கிண்ணத் தொடர் பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் இன்று நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதியில் இலங்கை - இந்திய அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.
இந்திய அணி தனது காலிறுதியில் நமீபியாவை வீழ்த்தியும், இலங்கை அணி இங்கிலாந்தை வீழ்த்தியும் அரையிறுதிக்குத் தகுதி பெற்றிருந்தன. மற்றொரு அரையிறுதியில் பங்களாதேஷ் அணியும் மேற்கிந்தியத் தீவுகளும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. (ம)






# வெற்றியுடன் விடைபெற்றார் மக்கலம் மற்றுமொரு தொடரை இழந்தது ஆஸி.

ஆஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது நியூசிலந்து.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. ஆரம்ப வீரராக குப்தில் மற்றும் மக்கலம். மக்கலத்தின் இறுதி ஒருநாள் ஆட்டமாகவும் இது அமைந்தது. ஆரம்பத்திலிருந்தே நொறுக்க ஆரம்பித்தார் மக்கலம். குப்திலும் சீரான சராசரியில் விளையாட 9ஆவது பந்துப்பரிமாற்றத்திலேயே 80 ஓட்டங்களை எட்டியது நியூசிலாந்து. 27 பந்துகளில் 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மக்கலம். அரைச்சதம் கடந்தார் குப்தில். 59 ஓட்டங்களுடன் குப்திலை வெளியேற்றினார் செம்பா. வில்லயம்சன், நிகொல்ஸ் இருவரும் பதின்மத்தைத் தாண்டவில்லை. மத்திய வரிசையில் எலியாட் அரைச்சதம் கடந்தாலும் அதிகமான பந்துகளை வீணடித்தமையால் அதுவும் ஒருவிதமான பின்னடைவாக அமைந்தது. சடுதியாக வீழ்ச்சி கண்டது நியூசிலாந்தின் சராசரி. பின்வரிசையில் ஒற்றை இலக்கத்துடன் வீரர்கள் வெளியேற முடிவில் 246 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது நியூசிலாந்து. பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக மிச்செல் மார்ஷ் 3 இலக்குகளையும், கசில்வூட், கஸ்ரிங்ஸ், போலண்ட் மூவரும் தலா இரு இலக்குகளையும், செம்பா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். ஆஸ்திரேலியாவின் அடித்தளம் நியூசிலாந்தின் அளவுக்கு பலமாக அமையவில்லை. 16 ஓட்டங்களுடன் வீழ்ந்தார்



வோர்ணர், தலைமை இன்னிங்ஸும் சிறப்பாக அமையவில்லை. 6 ஓட்டங்களால் அரைச்சதத்தை தவறவிட்டார் கவாயா. மக்ஸ்வெல்லால் ஓர் ஓட்டத்தைத்தானும் பெற முடியவில்லை. 100 ஓட்டங்களை எட்டுவதற்குள் 4 இலக்குகளை இழந்தது ஆஸ்திரேலியா. மிச்செல் மார்ஷ் ஓர் முனையைப் பலப்படுத்திய போதிலும் மறுமுனையால் இலக்குகள் சரிய முடிவில் 191 ஓட்டங்களில் சுருண்டது ஆஸ்திரேலியா. பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக ஹென்றி 3 இலக்குகளையும், அண்டர்சன், சொட்கி இருவரும் தலா இரு இலக்குகளையும், மில்னி, பிரேஸ்வெல் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக சொட்கி தெரிவானார். (ம)

## ஐக்கியம் அபாரம்

யாழ்ப்பாணம், பெப். 9
றோயல் வி.கழகம் நடத்தி வரும் குணபாலசிங்கம் ஞாபகார்த்த கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் அரியாலை ஐக்கிய அணி வெற்றிபெற்றது.
40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான விலகல் முறையிலான இந்தத் தொடரில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் மின்னொளியில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.றொக்ஸ்அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதிக் கொண்டது. இதில் அரியாலை ஐக்கிய அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# மெய்வன்மைப் போட்டிகள்

சாவகச்சேரி, பெப். 9

**போக்கட்டி றோ.க.த.க. பாடசாலை**

மிருசுவில் போக்கட்டி றோ.க.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளன. பாடசாலையின் அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.மகேஸ்வரன் கலந்து கலந்து கொள்ளவுள்ளார்.

**சந்திரபுரஸ்கந்தவரோதய ம.வி.**

மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைத் திற னாய்வுப்




போட்டிகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலயத்தின் மைதானத்தில் நடைபெறவுள்ளன. அதிபர் தா.கணேச பாலேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ் வுக்கு முதன்மை விருந்தினராக தொழிலதிபர் த.ஜெயந்தன் கொள்ளவுள்ளார்.

**நெடுந்தீவு ம.வி.**

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரியின் மைதானத்தில் நடைபெறவுள்ளன. வித்தியாலயத்தின் அதிபர் வி.ஓங்காரலிங்கத்தின் தலை மையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நெடுந்தீவு பிரதேச செயலர் எஸ்.ஜெயகாந் கலந்து கொள்ளவுள்ளார். (ம-9)

# தரப்படுத்தலில் தாக்கத்தை ஏற்படுத்தவுள்ள இலங்கை - இந்திய அணிகளின் ரி-20 தொடர்

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையில் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் இன்று ஆரம்பமாகிறது. தரப்படுத்தலில் ஒவ்வொரு அணியினதும் இடத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் இந்தத் தொடர் அமைந்துள்ளமையால் பெரியளவிலான எதிர்பார்ப்புக்களையும் தோற்றுவித்துள்ளது.
ரி-20 அணிகளின் தரவரிசையில் முதல் 3 இடங்களில் இந்தியா (120 புள்ளிகள்), மேற்கிந்தியத் தீவுகள் (118 புள்ளிகள்), இலங்கை (118 புள்ளிகள்) ஆகிய அணிகள் உள்ளன. முதலிடத்தை இந்திய அணி தக்கவைக்கவேண்டும் என்றால் இந்தத்தொடரை கட்டாயம் வென்றாக வேண்டும். அதேநேரம் முதல் மூன்று இடங்களுக்குள் தனது இருப்பை தக்கவைக்க வேண்டுமாயின் இலங்கை தொடரை வென்றாகவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.




இதன்படி தொடரை இந்தியா 3:0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றினால் தரவரிசை புள்ளிகளின் எண்ணிக்கை 127 ஆக உயரும். இலங்கை 112 புள்ளிகளுடன் 7ஆவது இடத்துக்கு சரியும். 2:1 என்ற கணக்கில் வென்றால் 122 புள்ளிகளுடன் இந்திய அணி முதலிடத்தில் நீடிக்கும். இலங்கை 6ஆவது இடத்துக்கு சரியும். மாறாக இலங்கை அணி தொடரை 3:0 என்ற கணக்கில் வசப்படுத்தினால் 125 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு முன்னேறும். அவ்வாறு நிகழும் போது இந்திய அணி 112 புள்ளிகளுடன் 7ஆவது இடத்துக்கு தள்ளப்படும். இலங்கை 2:1 என்று வென்றாலும் 121 புள்ளியுடன் முதலிடத்தை பிடிக்கலாம். அப்போது இந்தியா 117 புள்ளிகளுடன் 3ஆவது இடத்துக்கு தள்ளப்படும்.
இன்று நடைபெறும் ஆட்டம் புனேயில் இலங்கை, இந்திய நேரப்படி இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகும். (ம)

## பார்சிலோனாவிடம் வீழ்ந்தது லெவண்டி

லா லிகா தொடரில் பார்சிலோனா, லெவண்டி அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பார்சிலோனா அணி வெற்றிபெற்றுள்ளது.
ஆட்டம் ஆரம்பித்து 17ஆவது நிமிடத்தில் முதல் கோலை பதிவுசெய்தார் மெஸ்ஸி. மேலதிக மாற்றம் எதுவும் இல்லாமல் முடிவுக்கு வந் தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் 1:0 என்று பார்சிலோனாவின் ஆதிக்கமே தொடர்ந்து கொண்டிருந்தது. 72ஆவது நிமிடத்தில் சுவாரெஸ் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனாவிடம் வீழ்ந்தது லெவண்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 9

**றோயல் வி.கழகத் தொடர்**

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் சுப்பர் 8 அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதவுள்ளது.

**குணபாலசிங்கம் ஞாபகார்த்தத் தொடர்**

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குணபாலசிங்கம் குடும்பத்தினர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்மதீனா அணியை எதிர்த்து 786 அணி மோதவுள்ளது. (ம-23)





## முல்லைத்தீவு மாவட்ட ஊர்கடந்து ஓட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் முதலிடம்

முல்லைத்தீவு, பெப். 9

முல்லைத்தீவு மாவட்ட ஊர்கடந்து ஓட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் சார்பாக கலந்துகொண்ட புலேந்திரன் ஜெனந்தன் ஆண்கள் பிரிவிலும், யோகேஸ்வரன் புவேந்தினி பெண்கள் பிரிவிலும் முதலாம் இடங்களைக் கைப்பற்றினர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கடந்த 6ஆம் திகதி காலை 7 மணியளவில் மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு என். முகுந்தன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் ஆண்கள் பிரிவில் 25 வீரர்களும், பெண்கள் பிரிவில் 18 வீராங்கனைகளும் கலந்துகொண்டனர். ஆண்களுக்கான தூரமாக 12 கிலோ மீற்றர் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதனை 20 வீரர்கள் ஓடிமுடித்தனர். பெண்களுக்கான தூரம் 8 கிலோ மீற்றராக நிர்ணயிக்கப்பட்டது. இதனை 16 வீராங்கனைகள் ஓடி முடித்தனர்.

ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் சார்பாக கலந்துகொண்ட புலேந்திரன் ஜெனந்தனும், இரண்டாம் இடத்தை கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் சார்பாக கலந்துகொண்ட மகேஸ்வரன் குமுதனும், மூன்றாமிடத்தை ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் சார்பாக கலந்துகொண்ட செங்கோல் அலெக்ஸ் என்பவரும் தமதாக்கினர்.

பெண்கள் பிரிவில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் சார்பாக கலந்துகொண்ட யோகேஸ்வரன் புவேந்தினி முதலாம் இடத்தையும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் சார்பாக கலந்துகொண்ட சுப்பிரமணியம் சுடர்மதி இரண்டாம் இடத்தையும் அதே பிரதேசசெயலர் பிரிவின் சிவனேஸ்வரன் டிலக்சனா மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

நிகழ்வுக்கு விருந்தினர்களாக மாகாணசபை பிரதித் தவிசாளர் ம.அன்ரனி ஜெகநாதன், மாகாணசபை உறுப்பினர் பு.இரவிகரன், உடற்கல்விப் பணிப்பாளர் மைக்கல் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-422)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 9

**தவசி குளம் அ.த.க. பாடசாலை**

வவுனியா தவசி குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மை போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன. பாடசாலையின் அதிபர் ச.நித்தியானந்தம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

**கொக்குவில் சிறி ஞானபண்டித வித்தியாசாலை**

கொக்குவில் சிறி ஞானபண்டித வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு லெவின் ஸ்ரார் வி.கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. வித்தியாலயத்தின் அதிபர் ந.கந்தவனச் செல்வனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டுப் பயிற்றுநர் காசிநாதன் சுதாகரன் கலந்துகொள்ளவுள்ளார்.

**சண்டிலிப்பாய் அ.த.க. பாடசாலை**

சண்டிலிப்பாய் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலையின் மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலையின் அதிபர் சி.தவநாயகத்தின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

**புனித பத்திரிசியார் கல்லூரி**

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் மைதானத்தில் இடம்பெறவுள்ளது. கல்லூரியின் அதிபர் அருட்திரு ஜெரோ செல்வநாயகம் அடிகளாரின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி, கலை, கலாசார, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரி.குருகுலராஜா கலந்துகொள்ளவுள்ளார். (ம-422-23)

## செவின் ஸ்ராரை வீழ்த்தி அரையிறுதிக்குள் ஞானம்ஸ்

கரணவாய், பெப். 9

கரவெட்டி கிருஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் நவிண்டில் செவின் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது ஞானம்ஸ் வி.கழகம்.

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது இந்த காலிறுதி ஆட்டம். நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஞானம்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அதிகபட்சமாக ரஜி 18 ஓட்டங்களையும், பிரகாஸ் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் செவின் ஸ்ரார் அணி சார்பாக சாந்தன் 2 இலக்குகளையும் மதன் ஓர் இலக்கினையும் கைப்பற்றினர்.

56 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய செவின் ஸ்ரார் அணி இறுதிப் பந்துப்பரிமாற்றம் வரை கடுமையான போராட்டத்தை வெளிக்காட்டிய போதிலும் 4 ஓட்டங்களால் தோல்வியடைந்து அரையிறுதிக்கான வாய்ப்பைத் தவற விட்டது. அதிகபட்சமாக மதன் 22 ஓட்டங்களையும், சாந்தன் 11 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். (ம-108)





றூபவாகினி நிறுவனத்தால் யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் இளைஞர் கழக அணியும் பெண்கள் பிரிவில் மகாஜன இளைஞர் கழக அணியும் வெற்றிபெற்று சம்பியனாகின. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த இறுதி ஆட்டத்தில் மகாஜன இளைஞர் கழக அணி, கரவெட்டி சிவகுமாரன் இளைஞர் கழக அணியை 2:0 என்ற செற் கணக்கிலும், இளவாலை மத்திய இளைஞர் கழக அணி, ஆவரங்கால் இளைஞர் கழக அணியை 3:0 என்ற செற் கணக்கிலும் வீழ்த்தி கிண்ணங்களைக் கைப்பற்றின. (ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# நெருக்கடியில் தெ.ஆபிரிக்கா மூன்றாவது ஆட்டம் இன்று



இங்கிலாந்து-தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

முதல் இரு ஆட்டங்களிலும் இங்கிலாந்து அணி வெற்றிபெற்று 2:0 என்று தொடரில் முன்னிலை வகிக்கிறது. இதனால் இன்றைய ஆட்டத்திலும் இங்கிலாந்து வெற்றிபெற்றால் தொடர் அந்த அணியிடம் சென்றுவிடும். எனவே தொடரில் தனது இருப்பைத் தக்கவைக்க வேண்டுமாயின் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றேயாக வேண்டும் என்ற நெருக்கடியான நிலைமை தென்னாபிரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது. (ம)

# குப்திலின் புறக்கணிப்பால் வில்லியம்சன் அதிருப்தி



நடப்பு வருடத்துக்கான ஐ.பி.எல். தொடரில் குப்திலை எந்தவொரு அணியும் ஏலத்தில் எடுக்காதமை வருத்தமளிப்பதாகத் தெரிவித்துள்ள வில்லியம்சன், தான் ஏதாவது ஓர் அணியின் பயிற்றுநராக இருந்திருந்தால் நிச்சயம் குப்திலை எடுத்திருப்பேன் எனவும் தெரிவித்துள்ளார்.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடருக்கான ஏலம் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்றது. பட்டியலில் இடம்பெற்றிருந்த 351 வீரர்களில் 94 வீரர்கள் மொத்தம் ரூ.136 கோடிக்கு (இந்திய மதிப்பில்) ஏலம் போனார்கள். சர்வதேச ஆட்டங்களில் விளையாடாத டெல்லியை சேர்ந்த பவான் நெகி 8.5 கோடிகளுக்கு ஏலம் போனார். ஆனால் நட்சத்திர வீரர் என்ற பெயர் பெற்ற நியூசிலாந்தின் குப்தில் விலை போகவில்லை. கடந்தாண்டு ஒரு நாள் ஆட்டங்களில் அதிக ஓட்டங்கள் (32 ஆட்டங்களில் 4 சதம், 8 அரை சதத்துடன் 1,489 ஓட்டங்கள்) சேர்த்து முதலிடம் பிடித்த குப்தி லின் புறக்கணிப்பு சில அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது.

இது தொடர்பாக நியூசிலாந்தின் நட்சத்திர வீரர் கேன் வில்லியம்சன் தெரிவிக்கையில் - நான் ஏதாவது ஒரு அணிக்கு பயிற்சியாளராக இருந்தால் நிச்சயம் குப்திலை எடுத்திருப்பேன், தற்போதைய நிலையில் சிறப்பாக விளையாடி வருபவர் குப்தில், இருப்பினும் அணி உரிமையாளர்களின் மனநிலை என்னவென்று தெரியாது என்று தெரிவித்துள்ளார்.

முன்னாள் வீரர் ஸ்கொட் ஸ்டைரிஸ் கூறுகையில், - குப்திலை ஏலத்தில் எடுக்காதது மிகுந்த ஏமாற்றம் தருகிறது. ஏதாவது ஓர் அணியில் சேர்க்கப்பட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் - என்றார். (ம)




# ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி இன்று அறிவிப்பு



இந்தியாவில் இந்த வருடம் நடைபெறவுள்ள ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்கான ஆஸ்தி ரேலிய அணி இன்று அறிவிக்கப்படவுள்ளது.

உலகக்கிண்ணத்துக்கான தமது அணிகளை ஒவ்வொரு நாட்டினதும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைகள் அறிவித்து வருகின்றன. இந்த வகையில் ஆஸ்திரேலிய அணி இன்று அறிவிக்கப்படவுள்ளது. இந்தியாவுக்கு எதிரான தொடரில் வெள்ளையடிப்பு வாங்கியதன் பின்னர், ரி-20 ஆட்டங்களுக்கான ஆஸ்திரேலிய அணியின் தலைவரான பின்ஞ் தலைமைத்துவத்தில் இருந்து நீக்கப்பட்டு சிமித் அல்லது வோர்ணர் இருவரில் ஒருவர் புதிய தலைவராக நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்ப்புக்கள் உள்ளன. இந்திய ஆடுகளங்கள் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும் என்பதால் ஆஸ்திரேலிய அணியில் அதிக அளவு சுழற்பந்து வீச்சா ளர்கள் இடம்பெற வாய்ப்புள்ளது. குறிப்பாக லையன், மக்ஸ் வெல் இருவருக்கும் அணியில் இடம் கிடைப்பது கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளது. (ம)

# கிரெனடாவை வீழ்த்தியது மட்ரிட்



லா லிகா தொடரில் நேற்று நடை பெற்ற ஆட்டமொன்றில் கிரெ னடா அணியை வீழ்த்தியது ரியல் மட்ரிட் அணி.

ஆட்டம் ஆரம்பமாகி நீண்ட நேரங்கள் கடந்த பிற்பாடும் கோலெதுவும் பதிவுசெய்யப்படவில்லை. 30 ஆவது நிமிடத்தில் கரீம் பென்ஸீமா முதல் கோலை பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் ரியல் மட்ரிட் முன் னிலை வகித்தது. இரண்டாம் பாதி பெரிதான மாற்றங்கள் இல்லாமல் உருண்டோடிக் கொண்டிருந்தது: 85 ஆவது நிமிடத்தில் லூகா மற்றொரு கோலைப் பதிவுசெய்ய ரியல் மட்ரிட் 2:0 என்று முன்னிலை வகித்தது. ஆட்டத்தின் நிறைவுப் பகுதியில் பதில்கோலைப் பதிவு செய்தது கிரெனடா. இக்கோலை யூசெப் பெற்றிருந்தார். முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.